Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் - 16

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—07 11–17 ஏப்பிரல் 2003



## திருக்கோணமலையில் இசை நடன நாடக விழா

## சிறிலங்கா: தென்னாசியாவுக்கு நுழைவாசலா...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 11.04.2003

# களைபிடுங்க வேண்டிய காலகட்டம்

யாழ் குடாவில் சமூக கலாச்சார சீரழிவு உலகத்தை அச்சுறுத்தும் 'சார்ஸ்' வைரஸ் நோயை விடவும், மிகத் தீவிரமாக பெருகிவருவதானது குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், அமைதிக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது.

அன்றாடம் குடாநாட்டில் நிகழும் எத்தனையோ சம்பவங்க ளில் ஒரு சில மட்டுமே ஊடகங் களுக்கு தெரியவருகிறது. அல்லது ஊடகங்களால் வெளிப்படுத்த ப்படுகிறது. ஏனையவை மறைக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் விடுகின்றன.

சூரியக்கதிர் இராணுவ ஆக்கிர மிப்புக்கு முன்னான யாழ்குடா நாடு, யுத்த நெருக்கடிகள், பொருளாதாரத் தடைகள் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கூட, அமைதியாகவும் கலாச்சார ரீதியிலும், பண்பாட்டு நடைமுறைகளிலும் கட்டுக்கோப்பு நிறைந்த தாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு சமூகவிரோத சக்திகளால் அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும் அமைந்திருந்தது.

அர்த்த சாமத்திலும் ஒரு பெண் அச்சமின்றி நடமாடக் கூடிய பாதுகாப்பான சூழல் அப்போது நிலவிவந்தது.

ஆனால் இன்றைய சூழல் பட்டப்பகலிலும், பொதுமக்கள் நெருக்கடி யான நடமாட்டம் உள்ள பகுதியிலும் கூட, சாதாரண மக்கள் எவரும் அச்சமின்றி நடமாடும் இயல்புநிலைக்கு முழுமையான அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சமூக விரோத சக்திகளின் செயற்பாடு பெருகிவிட்டது.

கலாச்சார சீரழிவு சமூகத்தை கருவறுக்கும் புற்று நோயாகி விட்டது.

மனித விழுமியங்கள் புறந் தள்ளப்பட்டு, நாகரீகம் என்ற பெயரில் பகுத்தறிவுக்கு இடங்கொடுக்காத, மனித நேயம் மறந்த ஒருவிதமான வக்கிர மனோபாவம் ஒரு குறிப்பிட்ட இளம் சமூகத்தவரிடையே வளர்ச்சி கண்டு வருவதன் பிரதிபலிப் பாகவே குடாநாட்டு அவலங்களை உணரமுடிகின்றது.

இதற்கான மூலகாரணம் எது வென்று சொல்லி விளங்க வேண்டிய அவசியம் இல்லை.

அந்நியப்படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த காலங்களில் எல்லாம் இத்தகைய மந்த புத்தியுள்ள கலாச்சாரச் சீரழிவு சூழல், ஆக்கிரமிப்பாளர்களாலும், அவர்களின் அடியாட்களாக செயற்பட்ட சமூக-தேச-விரோதக் கும்பல் களினாலும் திட்டமிட்டு உருவாக் கப்பட்டமையை நாம் அறிவோம்.

இது ஒரு உளவியல் ரீதியிலான- அறிவையும் மனதையும் கொல்லும், மனித இயல்புகளைச் சிதைக்கும் ஆக்கிரமிக் கப்பட்ட மக்களின் அநீதி கண்டு பொங்கும் போர்க் குணத்தை சிதைக்கும்- நுணுக்கமாக- திட்டமிட்ட நடவடிக்கையின் பாதிப்பேயாகும்.

உலகில் அயல்நாடுகளில் அத்துமீறி, அமைதியையும், சுதந்திரத்தையும் பேணிப்பாதுகாப்பதாக கூறிக்கொண்டு இராணு வரீதியில் ஆக்கிரமிப்பை மேற் கொள்ளும் எந்தவொரு நாடும், எந்தவொரு மேலாதிக்க சக்தியும் இந்த நடவடிக்கைக்கு மக்களின் அறிவையும் மனதையும் வெல்லும் நடவடிக்கையெனப் பெயரிட்டு, ஆக்கிர மிக்கப்பட்ட மக்களை மந்த புத்தியுள் ளவர்களாக்க திட்டமிட்டுச் செயற்படுவது தெளிவான விடயமாகும்.

சூரியக்கதிர் இராணுவ ஆக்கிரமிப்புக்கு பின்னரும் இதைத்தான் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவமும் தேசவிரோதக் கூலிப்படைகளும் யாழ் குடாநாட்டு மக்கள் மீது மேற்கொண்டது.

ஒழுக்கக் கட்டுப்பாட்டை, சிதைத்து பண்பாட்டு சீரழிவை ஏற்படுத்தி, கலாச்சாரப் பாரம்பரியங்களை இழக்க வைத்து தமிழ்மக்களின் தனித்துவ அடையாளங்களை நிர்மூலமாக்கவே அந்த நடவடிக்கையின் பிரதான இலக்காக இருந்தது.

அவர்களின் அந்த விஷப் பொறிக்குள் சிக்கிய இளைய சமூகத்தவரே இன்றைய ஆபத்தான சக்திகளாக உருவெடுத்துள்ளனர்.

தாராள மது மற்றும் போதை வஸ்து பரம்பல்,

ஆபாச சஞ்சிகைகள் மற்றும் நீலப் படங்களின் கட்டுப்பாடற்ற விநியோகம்,

சமூக விரோத நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடு. இராணுவ ரீதியிலான அச்சுறுத்தல் மற்றும் அங்கீகாரம் மற்றும் இவைபோன்ற நடவடிக்கைகள் எமது இளைய சமூகத்தவர்களை மட்டுமல்ல ஏனைய பலவீனமான குணாம்சங்களைக் கொண்டவர்களைக் கூட, அவர்கள் சுயத்தன்மையை இழக்க ஊக்கிகளாயின... விளைவு,

இன்றைய ஆபத்தான சூழலாகி விட்டது.

அண்மையில் யாழ்குடாவில் பாலியல் ரீதியிலான சீர்கேடுகள் அதிகரித்து, பாலியல் வன்முறைகள் அதிகளவில் பெருகி வருவதானது மிகவும் அதிர்ச்சியூட்டும் விடயமாகும்.

முளையில் கிள்ளியிருக்க வேண் டும். ஆனால் இப்போது களையாகிவிட்டது. இதனை வேரோடும் வேரடி மண்ணோடும் தேடியழிக்க வேண்டும். இல்லையேல் எமது சமூகம் முற்றாக அழிந்து விடும்.

விடுதலைப்புலிகள் இவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பது மக்களை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்துள்ளது. அமைதியை விரும்பும் மக்களையும், சமூக அமைப்புகளையும் விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் ஆதரவு கோரியிருப்பது ஆரோக்கியமான விடயம்.

கயவர்களையும், சமூக மற்றும் தேசவிரோதிகளையும் மக்கள் நன்கு அறிவர். அச்சம் காரணமாக அவர்கள் மௌனித் திருந்தாலும் சரியான பாதுகாப்புப் பலம் ஏற்படும்போது அவர்கள் சம்பந்தப்பட்ட வர்களை இனம் காட்டவேசெய்வர்.

இவ்விடயத்தில் 'சவுக்கை' கையில் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய மாகிவிட்டது.

## தூரனின் பார்வை

# ஏற்படுத்த முனையும் ஆட்சிமாற்றத்தை நியாயப்படுத்த முயலும் சந்திரிகா...!

பதவியில் எந்த அரசு இருந்தாலும் இன நெருக்கடிக்குச் சமாதானத் தீர்வுகாணும் முயற்சிகள் தடங்கள் எதுவுமின்றி தொடர்ந்துப் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று நாட்டின் தலைவி என்ற முறையில் உறுதியளிப்பதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அயல்நாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் அண்மையில் உரையாற்றும் போது கூறியுள்ள கருத்துக்கள் அவரின் தந்திரோபாய அரசியல் முகத்தின் இன்னொரு வடிவத்தையே வெளிப்படுத் தியுள்ளது.

அவரின் இந்தப் பேச்சு பலவிடயங்கள் குறித்த சிந்தனைகளை எழுப்பவே செய்துள்ளது.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில்- அதுவும் ஓராண்டு கால இடைவெளிக்குப்பின் சனாதிபதி மாளிகைக்கு அவர்களை அழைத்து இத்தகையதோர் பிரகடனத்தைத் திடீர் என்று கூறவேண்டியதன் தேவைதான் என்ன? இப்படி ஒரு உறுதியை சர்வதேச சமூகத்திற்கு வழங்க வேண்டியதற்கான காரணம் தான் என்ன?

இன்று மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு நகர்வும் சிறிலங்கா அரசோ அல்லது நிறைவேற்று அதிகார சனாதிபதியோ, தமது ஆதிக்க எல்லைக்குள், தமது சுய அபிலாஷைகளுக் கேற்ப, நெறிப்படுத்தும் ஒன்றாக இல்லை. அரசும், சனாதிபதியும் விரும்பியோ, விரும்பாமலோ, சர்வதேச சமூகத்தின் வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களுடன் கூடிய, அவர்களால் தயாரிக்கப்படும் ஒரு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பெருமளவில் இந்த அமைதிமுயற்சிகள் தொடரப்பட்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளமையானது அவர்களால் புறக்கணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தி யுள்ளது.

சிறிலங்காவின் இரட்டை ஆட்சி நிலைமை யில் அரசின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு சனாதிபதியின் மனப்பூர்வமான ஆதரவு ஆரம்பம் முதலே இருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தவிடய மேயானாலும், சமாதானநகர்வுகளுக்கு தான் எதிரியல்லவென்றும், பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்பதில் தனக்கு நம்பிக்கை யுள்ளதாகவும் அவர் அடிக்கடி- இடைக்கிடை பகிரங்கமாக சொல்லிக்காட்ட வேண்டிய சூழல்- அழுத்தம் அவருக்கும் இருந்தே வந்துள்ளது.

சமாதானம் பற்றிய தனது நம்பிக்கையை உதட்டளவில் உச்சரித்துக் கொண்டாலும்கூட, புரிந்துணர்வு- மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இந்த ஓராண்டுக்கும் அதிகமான காலப்பகுதிக்குள், சமாதான நடைமுறைகளைக் குழப்புவதற்கும் அமைதிமுயற்சிகளுக்கு பின்னடைவு ஏற்படு வதற்கும், பேரினவாத-மதவாத சக்திகளுக்கும், ஜே.வி.பி. தீவிரவாதிகளுக்கும் அநுசர ணையாக பின்னணியில் நின்று திரைமறைவில் ஊக்கமளித்தமையும் கூட வெளிப்படையான விடயம்தான்.

ஆனாலும் இன்னமும் 'ஒரு சமாதான தேவதை'தான் எனக்காட்டிக் கொண்டு கோரமான போர்வெறியுடன் கூடிய இனக்குரோத உணர்வுகளை ஆழ்மனதில் விரித்துக் கொண்டே புன்னகைத்தபடி கூறிவந்துள்ளமை அவரது பண்டாபாரம்பரியத்துக் குணாம் சமேயாகும்.

உண்மையில் அவர் சமாதான விரும் பியாக, அமைதி விரும்பியாக இருந்திருப்பா ரேயானால் இன்றைய பேச்சுவார்த்தைகள், இடையூறுகள் நகர்வுச் சிக்கல்கள் பல ஏற்பட்டி ருக்க வாய்பேயிருந்திருக்காது. பேச்சுவார்த் தைகள் பலகட்டங்களைத் தாண்டியுமிருக்கக் கூடும்.

ஆனால் யதார்த்த நிலையில் சந்திரிகாவின் நிலைப்பாடு சமாதானத்திற்கு முரணான ஒன்றேயாகும்.

சந்திரிகாவின் இந்த நிலைப் பாட்டில் ரணிலுக்கு உள்ளூற ஒரு வகை யான திருப்தி இருந்திருக்கவும் கூடும். இல்லையேல் தமிழ்மக்களுக்கான உரிமை தொடர்பான-அவர்களின் அபிலா ஷைகளை நிறைவேற்றக் கூடிய,ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டிய கட்டம் வரும்போது பேரினவாத பௌத்த சிங்கள சமூகம் தன்னை முழுமை யான எதிரியாக இனங்காண வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் அவருக்கு இருந்து கொண்டே உள்ளது.



ரணிலின் பிரதான இலக்கு சமாதான நடவடிக்கை களின் மூலம் இனப்பிரச் சினைக்கான நிரந்தரமான- உறுதியான அரசியல் தீர்வு என்பதல்ல... இதனூடாக அதல பாதாளத்துள் வீழ்ந் துள்ள சிறிலங்காவின் பொருளாதாரத்தை, நிதிப் பிரச்சினையை மீட்டெடுப்பதேயாகும்.

அதற்கு சமாதான முன்னெடுப்பு மிகமிக அவசியம். அதுவும் ஒரு நீண்ட காலத்திற்கு சமாதானநகர்வு, படிப்படியாக, கட்டம் கட்டமாக முன்னேறுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தின் நிதி ஆதரவை பெற்றுக்கொள்வதற்கு இதைவிட வேறெந்த சிறந்த-மூலோபாயத்தேர்வு எதுவும் ரணிலுக்கு இப்போது கிடையாது.

ரணிலுக்கு மட்டுமல்ல சந்திரி காவுக்கும் இதே நிலைதான்.

சமாதானம் நகரவேண்டும் 'தீர்வை' நெருங்கவே கூடாது. பிரச்சினைகள் பற்றி பேசிக் கொண்டே 'அனைத்து சிக்கல்களையும்' தவிர்த்துக் கொண்டு காலத்தை போக்கடிக்க வேண்டும். ஆனால் பிரச்சினை தீரக்கூடாது.

பிரச்சினை தீர்ந்தால் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் அரசியல் பேச எதுவுமேயில்லை. அதுமட்டுமல்ல பிரச்சினை யைத் தீர்ப்பதற்கான திட்டவட்டமான, நியாய மான அரசியல் தீர்வு எதுவும் கூட அவர்களிடம் கிடையாது.

அதிகாரப் பரவலாக்கல், உள்ளக சுயாட்சி, சமஷ்டி முறையிலான தீர்வு எனபல தீர்வு குறித்த சொற்கள் பரவலாக உச்சரிக் கப்பட்டாலும்- பேசப்பட்டாலும் கூட 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' என்ற நிலையே தொடர்கிறது.

இந்த நிலையில், ரணிலின் சமாதான முயற்சிகள் உடனடியாக இனவிவகாரங் களுக்கு ஒரு உறுதியான தீர்வையும் முன் வைக்கும் நிலைக்கு வளர்ந்துவிடப் போவ தில்லை என்பதில் சந்திரிகாவுக்கு நம்பிக்கை அதிகம் இருந்த போதிலும், இந்த சமாதான சூழல் நீடிப்பதும், பேச்சுவார்த்தைகள் தன்னைப் புறந்தள்ளி விட்டுத் தொடர்வதும், அதற்கு சர்வ தேச சமூகம் ஆதரவு வழங்குவதும், நிதியை அள்ளிக் கொடுக்க முன்வருவதும் தனது அரசியல் அபிலாஷைகளுக்கும், எதிர்காலத் திற்கும், ஆபத்தானது என்றே சந்திரிகா கருது கிறார்.

அதனையே அவரது அரசியல் ஆலோ சக இரட்டையர்களான அநுராபண்டார நாயக்காவும், லஷ்மன் கதிர்காமரும் வலியு றுத்தியும் வருகின்றனர்.

'காலதாமதம் ரணிலைப் பலப் படுத்திவிடும், நிறைவேற்று அதிகார பலத் தைபிரயோகித்து அரசை கலைப்பதன் மூலம் இந்த ஆபத்தை தவிர்த்துவிடலாம் என்று சந்திரி காவின் சிவப்புத் தோழர்களான ஜே.வி.பி கும்பலும் அவரை நிர்ப்பந்தித்து வருகிறது.

ஆக ஏதோவோர் காரணத்தைக் காட்டி அரசின் ஆயுட்காலத்தை நீடிக்கவிடாது தடுக்கவேண்டிய அவசியம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவான விடயமாகி விட்டது.

ஒன்று தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இராணுவ-கடற்படை-ஆயுதப்படைகளை ஏதோவொருவகையில் விடுதலைப் புலிகளுடன் தந்திரோபாய ரீதியில் முரண்படவைத்து, விடுதலைப் புலிகளுக்கு சினத்தை ஏற்படுத்தி போர் நிறுத்த உடன்படிக்கையை மீறவைப்பதன் மூலம் சமதானப் பேச்சு வார்த்தையை குழப்ப முயலும் சந்திரிகாவின் திரைமறைவு சதிகள், ரணில் அரசாங்கம் மீது ஏதாவது ஒரு குற்ற த்தைச் சுமத்தியோ அல்லது வேறுபுற அழுத் தங்களைப்பிரயோகித்தோ, அது தொடர்ந்தும் செயற்பட முடியாத நிலையை தோற்றுவித்து ஆட்சியைக் கலைத்துவிடவும் சாதகமான தந்திரோபாய செயற்பாடுகள் குறித்தும் ஆரா ய்ந்து வருகிறது.

இயல்பான ஆட்சி மாற்றம் (அரசியல் மூலோபா யங்கள் மூலம் ஏற்படுத்துவது)

ஆட்சிக் கலைப்பின் ஊடாக அதிகார மாற்றம்.

புதிய தேர்தல் மூலம் ஆட்சிமாற்றம். இவையே சந்திரிகாவின் முன்னுள்ள இப் போதைய தேர்வுகளாயினும், இயல்பான ஆட்சி மாற்றம் உடனடி சாத்தியம் அற்றதாகவும், தேர் தலை எதிர்கொண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த அரசைக்கலைப்பது ஆபத்தான தாகவும் சந்திரிகா உணர்கிறார்.

ஆகவே-பாதுகாப்பு போன்ற தேசிய காரணங்களைக் காட்டி ஆட்சியைக் கலைத்து இடைக்கால நிர்வாகமொன்றை- தேசிய அரசு என்ற பெயரில் உருவாக்குவது குறித்தும் அதற்காக தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவது குறித்தும் சந்திரிகா தீவிரமாக யோசிப்பதாக தெரிகிறது.

எனவே அப்படியான ஓர் ஆட்சிமாற்றம் உருவாக்கப் படுவதற்கு முன் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த அதன் ராஜதந்திரிகள் ஊடாக தகவல் அனுப்பும் உத்தியாகவே சந்திரிகா இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார் என கருத்தக்கூடி யதாகவும் உள்ளது.

பதவியில் எந்த அரசு இருந்தாலும் சமாதானத் தீர்வு நடவடிக்கைகள் தொடரும் என்று உறுதி அளிக்கும் சந்திரிகா இப்பிரகடனம் மூலம் எதிர் வரக்கூடிய அரசியல் மாற்றத்தை சூசகமாக உணர்த்தியுள்ளாரா? அல்லது சர்வதேச சமூகத்தையும் பெரும் பான்மைச் சமூக சமாதானம் விரும்பி களையும் தமிழ் மக்களையும் தான் ஒரு சமாதானத் தேவதை என இன்னமும் நம்பவைக்க நினைக்கிறாரா?

எதுவானாலும் சிறிலாங்காவில் ஓர் அரசியல் ஸ்திரத்த ன்மையற்ற, குழப்பம் நிறைந்த மாற்றமொன்றை தனது சுய அபிலாஷைகளுக்காக சந்திரிகா ஏற்படுத்த நினைக்கிறார் என்பது இதன் மூலம் உறுதி யாகியுள்ளது.

# சிறிலங்கா : தென்னாசியாவுக்கு நுழைவாசலா அல்லது தென்னாசியாவின் நரகமா

நிலாந்தன்

அண்மையில் கடலில் இடம் பெற்ற சில யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழு விட்ட அறிக்கை தென்னிலங் கையில் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது.

கடலில் நிகழ்ந்த சில யுத்தத்தை தூண்டும் விதத்தில் அமைந்த யுத்தநிறுத்த மீறல்களின் பின்னணியில் ஆயுதமேந்திய மூன்றாவது சக்திகள் சில சம்பந்தப்படுவதாக அந்த அறிக்கை கூறுகிறது.

இதுவரையிலும் கண்காணிப்புக்குழு விட்ட அறிக்கைகள் எல்லாவற்றிலும் இது வித்தியாசமானது. அதோடு வாதப்பிரதிவாதங்களையும் ஊகங்களையும் தூண்டிவிட்டுள்ளது.

யார் அந்த ஆயுத மேந்திய மூன்றாவது சக்தி?

அதுஎங்கிருந்து வருகிறது?

யார் அதன் பின்னணியில் நிற்பது?

என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. ஊகங்கள் வளர்கின்றன.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது- கண்காணிப்புக்குழு எதையாவது கூறுகிறது என்றால் அது வெறுமனே கண்காணிப்புக் குழுவின் அபிப்பிராயம் மட்டும் தான் என்பதல்ல. அதற்குமப்பால் கண்காணிப்புக்குழு யாரை பிரதிநிதித்துவம் செய்கிறதோ அல்லது அதை யார் யார் பின்னிருந்து இயக்குகிறார்களோ அவர்களுடைய நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் கூட இந்த அறிக்கை பிரதிபலிக்கிறது என்பதே.

அதாவது இம்முறை சமாதானத்தை மேற்பார்வை செய்யும் மேற்கு நாடுகள் வெளிக்காட்ட விரும்பும் ஏதோ சில சமிக்ஞைகள் இதில் இருப்பது போலத் தோன்றுகிறது.

இதை இன்னும் தெளிவாகக் கூறினால்- சமாதானத்தின் எதிரிகளுக்குப் பின்பலமாய் இருக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு இதில் ஒரு வித எதிர்ச்சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய சக்திகளை முன்னெப்பொழுதும் கண்காணிப்புக்குழு வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியதில்லை. ஆனால் இம் முறை இப்படிப்பட்ட சக்திகள் களத்தில் உலவக்கூடிய சாத்தியக் கூறுகளை பகிரங்கமாகக் கூறியதன் மூலம், அச்சக்திகளைப் பின்னால் இருந்து இயக்கும் எல்லோருக்குமே ஒரு பொதுத் ராஜதந்திர பரிபாஷையில் கூறப்பட்டுள்ளது.

இதை இப்படி வெளிப்படையாக அறிக்கை விட்டதன் மூலம் இனியும் இது ஒரு ரகசியம் அல்ல என்ற ஒரு நிலை தோன்றியுள்ளது. அதாவது இது ஒரு விவகாரம் ஆக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் யாரெல்லாம் சமாதானத்தைக் குழப்ப முயல்கிறார்களோ அவர்கள் இனியும் மறைவில் இருக்க முடியாது என்ற செய்தி வெளி வந்திருக்கிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இது தொடர்பாகக் காட்டியிருக்கும்எதிர் வினைகள் இந்த அறிக்கை இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை நிரூபிக்கிறது.

இதன்படி கூறினால் இது ஒரு அறிக்கை என்பதை விடவும் சமயோசிதமான ஒரு ராஜதந்திர சமிக்ஞை என்றே கூறவேண்டும்.

அது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைகிறதோ இல்லையோ, ஒரு புறம் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளது. இன்னொரு புறம் சமாதானம் செய்யும் மேற்கு நாடுகளின் கரிசனையை, கவலையை, கோபத்தை எல்லாவற்றையுமே வெளிக் காட்டியுள்ளது.

குறிப்பாக வளைகுடாப்போர்ப்பின்னணியில் சமாதானத்துக்கு எதிரான பிராந்திய வியூகம் புதுப்பலம் பெற்றுவிடக் கூடாது என்ற அவசரம் மேற்குலகிடம் காணப்படுகிறது.



மேற்படி அறிக்கை இந்த அவசரத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

வளைகுடாப்போர்ச் சூழல் காரணமாக, இலங்கைத் தீவின் சமாதானம் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலில் முன்பு பெற்றிருந்த முக்கியத்துவத்தை இழந்து விடவில்லை என்று நிரூபிக்கும் விதத்தில் அண்மைக்காலங்களில் அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் அதிகம் சிரத்தை எடுப்பது தெரிகிறது.

வரும் 14ஆம் திகதி வொஷிங்டனில் நடக்கவிருக்கும், உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடிச் சந்திப்பில் இது மேலும் நிரூபிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத்தீவுக்கு சமாதானத்தைத் தவிர வேறெந்தத் தீர்வையும் விட்டுவைக்க அவர்கள் தயாரில்லை.

அமெரிக்காவின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான உப குழுவின் தலைவர் ஜேம்ஸ்.ஏ.லீச் கூறுகிறார்..... "செப்ரம்பர் 11இன் பின் விழைவாக நிகழ்ந்த சம்பவங்களால் தென்னாசியப் பிராந்தியம் அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு முக்கியத்துவம் மிக்கதொன்றாக கூர்மையாக எழுச்சி பெற்றுள்ளது" என்று.

''உலகில் மிகவும் நிலையற்ற பிராந்தியங்களில் ஒன்றாக தென்னாசியா இருந்த போதிலும், அமெரிக்கா அண்மை ஆண்டுகளில் இப்பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க அளவு ராஜதந்திர வெற்றிகளைப் பெற்றிருக்கிறது" என்று மேலுமவர் கூறுகிறார்.

"சிறிலங்காவில் நிலவும் யுத்தநிறுத்தத்திற்கும் நம்பிக்கையூட்டும் சமாதான முன்னெடுப்புக்களுக் குமான அமெரிக்காவின் ஆதரவை தரும் பொருட்டு துணையமைச்சர் ஆர்மிரேஜ் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டு வருகிறார்''.... என்றும் லீச் கூறுகிறார்.

கடந்த மாதம் லீச் தலைமை தாங்கிய *அமெரிக்காவும் தென்னாசியா வும்: அமெரிக்காவின் கொள்கைக்குள்ள சவால் களும் வாய்ப்புக்களும்* என்ற அமர்வின தொடக்க உரையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

மேலும், கடந்த மாதம் 25 ஆம் திகதி வொஷிங்டனில் இலங்கைக்கான முதலீட்டாளர்களுடனான ஒரு சந்திப்பில் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ்கும், ரவிகருணா நாயக்காவும் கலந்து கொண்டார்கள். கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு விஜயம் செய்த போது தொடக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளின் அடுத்த கட்டமாக இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது. அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்பின் தலைப்பு *சிறிலங்கா: தென்னாசியாவுக்கு நுழைவாசல்* என்பதாகும்.





இதில் உரையாற்றிய அமைச்சர் ரவிகருணாநாயக்க "2002 பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்தம் வந்ததில் இருந்து சிறிலங்கா 240 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீட்டைக்கண்டு விட்டது.இதுகடந்த பத்து ஆண்டுகளில மிகவும் உச்சமானது"... என்று கூறியுள்ளார்.

அதாவது கடந்த 15 மாதகால யுத்தநிறுத்தத்தின் பேறாக பொருளாதார அர்த்தத்தில் அதிக லாபமீட்டியது சிங்களவர்களே.

தமிழர்களோவெனில்- யுத் தத்தால் நொறுங்கிப்போன உட்கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பவே நிதி இல்லாமலிருக்கிறார்கள்.

இதற்காக உருவாக்கப்பட்ட ஒரு உபகுழு கூடிக் கதைத்து மினறல்வோட்டர் குடித்ததுக்கும் அப்பால் எதையும் பெரிதாகச் சாதிக்கவில்லை என்று தமிழர்கள் விசனப்படுகிறார்கள்.

இந்நிலையில், வரும் யூனில் ஜப்பானில் கிடைக்கவிருக்கும் நிதி உதவியே சமாதானத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு உந்தித்தள்ளும் நெம்புகோலாய் இருக்குமென்று பரவலாக நம்பப்படுகிறது.

ஆனால் அந்த ஜப்பான் மாநாட்டுக்கு முன்னோடியாக வொஷிங்டனில் வரும் 14ஆம் திகதி நடக்கும் மாநாட்டில் சமாதானத்தின் சம பங்காளிகளான புலிகள் கலந்து கொள்ள அனுமதிமறுக்கப்பட்டுள்ளது.

இப்பத்தி எழுதப்படும் வரை இது பற்றிய ஆகப்பிந்திய முடிவு மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்ததாகத் தெரியவரவில்லை. அவ்வாறாயின்- சமாதா னத்தின் சமபங்காளிகளான புலிகளோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ கலந்து கொள்ளாத ஒரு முன்னோடி மாநாட்டில் தமிழர்கள் சார்பாக யார் முடிவுகளை எடுக்கப் போகிறார்கள்?

தமிழர்கள் பற்றிய முடிவுகளையும் சிங்களவர்கள் எடுக்கப் போய்த்தானே நாடு இப்படியானது?

ஆனால் இதை அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை என்றொரு வாதமும் உண்டு. யூனில் ஜப்பானில் நடக்கவிருப்பதே உச்சிமாநாடு. வொஷிங்டனில் நடக்கவிருப்பது ஒரு முன்னோடி மாநாடு மட்டுமே. அதாவது ஒரு உபமாநாடு. அதோடு முக்கிய மாக, அதில் சமாதானத்தின் அனு சரணையாளராயுள்ள நோர்வேயின் பிரதானிகள் கலந்து கொள் வதாலும் இது குறித்து அதிகம் கவலைப் படத் தேவையில்லை.

ஆனாலும் சமாதானத்தின் சமபங்காளிகளில் ஒரு தரப்பினரை தவிர்த்து விட்டு முடிவுகள் எடுக்கப் படுவது என்பது சிறிலங்காவை தென்னாசியாவுக்கான நுழைவாச லாக மாற்றும் முயற்சிகளில், தமிழர்கள் அன்னியப்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கவே உதவும்.

தமிழர்களை அன்னியப் படுத்தும் எந்தஒரு நகர்வும் சமாதானத்தின் அடித்தளத்தைப் பாதிக்கக்கூடியது.

சமாதானத்தின் மீதுதான் எல்லாக்கனவுகளும், கவர்ச் சியான எல்லாச்சுலோகங்களும் கட்டியெழுப்பப்படுகின்றன.

"சிறிலங்காவை மீளப் பெறுவது" என்றாலும் சரி, "எலக் ரோனிக்லங்கா'' ஒன்றை உருவாக்குவது என்றாலும் சரி, அல்லது "சிறிலங்காவை தென்னாசியாவுக்கு நுழைவாசலாக'' மாற்றுவது என்றாலும் சரி எல்லா வற்றுக்கும் முதலில் சமாதானம் உண்டாக வேண்டும். அல்லது குறைந்த பட்சம் சமாதானத்துக்குச் சமாந்தரமாக த்தான் இவையெல்லாம் நிகழ முடியும்.

முன்னைய காலங்களில் நிகழ்ந்த எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும், சமாதானம் ஒரு பொறியாகப் பாவிக்கப்படும் நிலமைகளே அதிகம் காணப் பட்டன.

ஆனால் இம்முறை- குறிப்பாக, உதவிவழங்கும் நாடுகளின் பிரவேசத்தோடு சமாதானம் ஒரு வியாபாரம் ஆகிவிடும் ஆபத்தும் கூடவே வந்திருக்கிறது.

ஜப்பானில் கடைசியாக நடந்த ஆறாம்கட்டப் பேச்சுக்களின்போது செய்திசேகரிக்க வந்த பி.பி.சி.யின் சந்தே சியவைச் சேர்ந்த சந்தனகீர்த் திபண்டார, தன்னோடு கதைத்த தமிழ் ஊடகவியலாளர் ஒரு வரிடம் "கடைசியில் தமிழர் களுக்குக் கிடைக்கவிருப்பது வெற்று சிரட்டை மட்டுமே.'' என்ற தொனிப்படக் கூறியிருக்கிறார்.

எனவே, சமாதானத்தைக் காட்டி வாங்கப்படும் நிதியுதவி சமாதானத்தைப்பலப்படுத்தவே பாவிக் கப்படும் என்ற உத்தர வாதத்தை உதவிவழங்கும் நாடுகள் பெற்றாக வேண்டும்.

சமாதான வியாபாரத்தின் லாபத்தில் தமிழர்களுக்கு உரிய பங்கு கிடைப்பதை மேற்படி நாடுகள் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

திரும்பத்திரும்ப கண்டி வீதியைத்திருத்துவது மட்டும் சமாதானம் ஆகிவிடாது.

வன்னிப்பெருநிலத்தில் சமாதானம் இன்னமும் வராத பலகுக்கிராமங்கள் உண்டு. அங்கெல்லாம் புழுதிகிழம்பும் கிறவல் சாலைகளே உண்டு. அவை சாலைகள் என்பதை விடவும் மழைக்காலத்து அறுத்தோடிகள் என்பதே பொருத்தம்

கிராமங்களுக்கு வராத சமாதானம், சமாதானமே அல்ல.

நகரங்களின் பெருந் தெருக்களில் நழுவிச் செல்லும் ஏதோ ஒன்றை சமாதானம் என்று எவ்வளவுகாலத்துக்குத்தான் நம்பிக் கொண்டிருப்பது?

சமாதானத்துக்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவு என்படுவது தமிழர்களின் பயங்களைப் போக்குமொன்றாக, தமிழர்களின் காயங்களை சுகப்படுத்தும் ஒன்றாக அமைந்தால் மட்டுமே இலங்கைத்தீவை தென்னாசியாவுக்கு நுழை வாசலாக மாற்றலாம்.

இல்லை என்றால் இலங்கைத்தீவு தென்னாசியாவின் நரகமாக மாறும் நிலைமைகளே உருவாகும்.

■■

# நிலங்கள் பிளந்திருந்த போதும் வாழ்வு இணைந்திருந்தது

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுடனான நேர்காணல்**



ஈழத்தமிழ் இலக்கிய உலகில் அசையாமனிதராயிருந்து இலக்கியத் தொண்டாற்றி வரும் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுடன் செவ்வி காண்பதற்காக நான் சென்றிருந்த போது காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைக்காக மருத்துவ ஓய்விலிருந்த போதும் எவ்வித சிரமத்தையும் பாராது என்னோடு ஈழத்தமிழரின் இலக்கியப் போக்கு, போர்க்கால இலக்கியங்கள், இன்றைய தமிழிழக்கிய விமர்சன முறைமைகள் பற்றிய எனது கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

இலக்கியம் என்பது சமூகப் பிரஞை யில் தென்படும் விடயங்களை மனித உறவு என்ற களத்தில் அந்த உறவுகளின் ஊடாட்டத்தின் அசைவியக் கத்தில் மொழி மூலம் (சொற்கள்) எடுத்துக் காட்டும் ஒரு முயற்சியாகும். இந்த எடுத்துக் காட்டுகை அதனைப் படைக்கும் படைப்பாளியின் உலக நோக்குக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும். இலக்கியங்கள் உருவாகாமல் ஒரு பூரணமான சமூக உருவாக்கம் என்பது இடம் பெற்றிருக்க முடியாது. ஒரு கால கட்டத்தின் மனித உறவுப் பிரச்சினைகளின் மையத்தை இனங்கண்டு கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் இலக்கியம் ஒரு முக்கிய ஊடகமாக அமையும். இலக்கியம் காலத்தின் பிரஞைகளையும், சவால்களையும் உணர்கின்றது என்பதிலேயே அதன் முக்கியத்துவம் தங்கி நிற்கிறது.

இன்று இலங்கையில் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கி நிற்கும் சமூக பொருளாதார, அரசியல் சூழல் 50,60 களில் நிலவிய சமூக பொருளாதார அரசியல் சூழலில் இருந்து வேறுபட்டிருந்தது. சாதிய ஒடுக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வு, ஏழை பணக்காரன் என்பவற்றை பற்றித்தான் அன்றைய கால இலக்கியம் பேசியது. 70 இன் பிற்கூற்றில் இருந்து படிப்படியாக ஏற்பட்டு வந்த மாற்றம் இனஒடுக்குமுறையைப் பற்றிப் பேசத் தொடங்கியது. ஆனால் எல்லாக் காலங்களிலும் ஈழத்தமிழிழக்கியத்தில் பிரச்சினைகளை நேர்எதிர் நோக்கும் தன்மை (Foward look) நாவலர் காலத்திலிருந்து காணப்பட்டிருக்கிறது. ஆரம்ப காலங்களில் முற்போக்கிலக்கியங்கள் என வகைப் படுத்தப்பட்டவை எதுவும் தமிழர்களைப்பற்றிப் பேசவில்லை. 77 இல் ஏற்படுகின்ற நிலமை படிப்படியாக மாறி 80,81 களில் இராணுவத்தைப் பயன்படுத்துவதும், தேர்தலைக் குழப்புவதுமான நிலமைகளை உருவாக்கியது. 81 இல் தான் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டது. அது ஒரு பிரிகோடாக எனக்குப் படுகிறது. 81-84 இல் நிலமை உக்கிரமடைகிறது. 83 இல் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு நாடளாவிய இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் 84 இல் தான் இளைஞர்களுக்கெதிரான போரை முழுத் தமிழ் மக்களுக்கும் எதிரான போராக அரசு மாற்றியிருந்தது. எறிகணை, விமானக் குண்டு வீச்சென இராணுவ் வன்முறைப் பிரயோகத்தையும். அதிகரித்திருந்தது.

ஒடுக்குமுறை, மனித வதைகள் என்பன அதிகரித்ததால், இவ்வாறான அழுத்தங்களுக்குள் ஆட்பட்டவர்களிடமிருந்து இன முரண்பாடு சார்ந்த இலக்கியங்கள் உருவாகின. தமிழ் தேசியப் பத்திரிகைகள் என தம்மைக் கூறிக்கொண்டவை எல்லாம் அப்போது இப்படைப்புக்கள் தொடர்பில் மௌனம் சாதித்தன. இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு வகையான இலக்கிய வெளிப்பாடு உருவாகியது. கவிதைகளில் புதுவை இரத்தினதுரை, சேரன், சண்முகம் சிவலிங்கம் போன்றோரும் சிறுகதைகளில் ரஞ்சகுமார், உமாவரதராஜன், திருக்கோவில் யுவன் போன்றோரும் உருவாகினர். மாற்றம் வரத்தொடங்கியது. இவர்களுடைய கதைகள் ஒற்றை நீரோட்ட கதைகளாக இல்லாமல் (Uniliner) ஒரு புள்ளியில் தொடங்கி இன்னொரு புள்ளியில் முடிவடையும் தன்மை இல்லாமல் வெளிவந்தன. எங்கே தொடங்கியது எங்கே முடிந்ததுஎன்பது தெரியாத தன்மையுடைய புதிய வடிவத்தையும் கொண்டிருந்தது.

இந்தக் கால கட்டத்தில் இங்கு இருக்க முடியாதவர்கள் வெளியே செல்கின்றனர். இங்கு இருக்க விரும்பாதவர்கள் வெளிநாடு செல்கின்றனர். அங்கு போனவுடன் புலி எதிர்ப்பு, புலிச்சார்பு எனும் சர்ச்சை தொடங்கிறது. அது இன்றுவரைக்கும் தொடர்கிறது.

## அன்ரன் அன்பழகன்

கொஞ்சக் காலம் செல்ல முஸ்லிங்களுக்கும் எமக்குமான இடைவெளி எழுகிறது. 90 களில் இது ஏற்படுகிறது. இதனால் மட்டக்களப்பில் இருந்து புதுக்குரல் ஒன்று எழுகிறது. அந்தத் திருப்புமுனையில் 'சோலைக்கிளி' முக்கிய மானவர் ஆகிறார். அவர் முஸ்லிம்களின் மொழியில், முஸ்லிம்களின் குறியீடுகளில் சொல்கிறார். அவரோடு சேர்ந்து பல முஸ்லிம் எழுத்தாளர்கள் உருவாகிறார்கள். அவர்களுடைய படைப்புக்கள் எல்லாமே இனமுரண்பாடு சார்ந்தவை அல்ல. அவர்களிடையே காணப்படும் ஏனைய பிரச்சினைகளைப் பற்றியும் பேசுகிறார்கள்.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம் எனவும், மட்டக்களப்பு இலக்கியம், யாழ்ப்பாண இலக்கியம் எனவும், அடையாளம் காணப்பட்டாயிற்று. 96 தொடக்கம் 2002 பெப்ரவரி வரை ஒரு பெரிய இடைவெளி உருவாகியிருந்தது. யாழ்ப்பாணத்தில் எதுவுமே செய்யமுடியாத நிலை. அரசியல் ரீதியாக இலக்கியங்கள் செய்ய முடியாது போனது. கொழும்பில், யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு இலக்கிய விழிப்புணர்ச்சி வந்தது போன்று ஒரு செயற்கையான தோற்றப்பாட்டை ஏற்படுத்தினர். கொழும்பு தமிழ்ச் சங்கம் இதற்கு மையமாகிறது. தமிழ் ஆர்வமுள்ளவர்களுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கமும், மற்றவர்களுக்கு ஆஞ்சநேயர் கோவில் முதல் மயூரபதிஅம்மன் வரை ஆயலங்களும் முக்கியமாகிறது.

96 இல் ஒரு பெரும் நில அதிர்வு ஏற்படுகிறது. அதில் நிலங்கள் எல்லாம் பிளந்து போய் கிடந்தது. அப்பொழுது வன்னிக்குள் இருந்து என்ன வருகிறது என்பது ஒருவருக்கும் தெரியாது. தெரியாது என்பதைவிட மிக மிகக்குறைவாகத்தான் தெரியும் யாராவது ஒருவருக்கு ஒரு புத்தகம் வரும். அல்லது சரிநிகரில் எப்போதாவது ஒரு படைப்பு வெளிவரும். வெளிச்சம் வெளி வருகிறது என்பது தெரியும். ஆனால் வெளிச்சத்தில் என்ன வருகிறது என்பது தெரியாது.

புலம் பெயர் இலக்கியம் அதற்குள்ளே ஒரு கட்டம் வளர்ந்து அதற்குள்ளே சண்டைகள் போட்டு இன்னொரு பரிமாணத்தை நோக்கிச் சென்று விட்டது. இங்கிருந்து சென்றவர்களின் அனுபவங்களில் இருந்து இப்போது அந்த நாடுகளின் கலாச்சாரங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளுவது பற்றிய புதிய கட்டத்துக்கு அவர்கள் சென்று விட்டனர்.

நிலம் பிளந்து தொடர்புகளை இழந்து விட்ட நிலையிலும் 250-300 சதுரமைல்களுக்குள் மக்கள் வாழ்ந்தார்கள். இப்பகுதியூடான போக்கு வரவு கடினமாக்கப்பட்டுவிட்டது. பல வகையான பாஸ் நடைமுறைகள். போக முடியாது வரமுடியாது. ஆனால் அங்கு இரண்டு விடயங்கள் நடந்தேறின. ஒன்று போராட்டம் வளர்ச்சியடைந்து மரபு வழிச் சண்டையாக conven tior alwar மாறி மாங்குளம், ஆனையிறவு என நிலங்கள் வெல்லப் பட்டன. மற்றயது மக்களுடைய நிமிர்வுடனான வாழ்க்கை. இந்த வாழ்க்கை ஒருவகையான இலக்கிய எழுச்சியையும் ஏற்படுத்தியது. இந்த ஆறுவருடங்களுக்குள் வாழ்வும், போராட்டமும் எல்லாமுமே தயார் நிலையில் இருந்தது. இந்த தனித்துவமான இலக்கியத்தை எப்படிப் பார்ப்பது? இவை பற்றி இன்றும் கூட உலகிற்குத் தெரியாது. இந்த காலகட்டத்தில் வெளியான அமரதாசின் 'இயல்பினை அவாவுதல்' என்ற கவிதைத் தொகுதியின் தலைப்புக் கூட அவர்களின் உணர்வுகள் என்ன என்பது பற்றிய செய்தியை சொல்லுகிறது. இந்த வகையில் இந்தத் தலைப்புக்கூட முக்கியத்துவம் பெறுகிறது. இயல்பில்லாத நிலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்பார்ப்புக்களைக் கொண்ட இலக்கியம் வளர்ச்சி பெற்றிருந்தது. இப்போது நாங்கள் அதனை மதிப்பிட வேண்டும். ஆனால் இவற்றை உதிரியாக ஆய்வு செய்தல் கூடாது. இவற்றை ஒட்டு மொத்தமாக எடுத்து குறித்த காலகட்டத்தில் போருக்குள் வாழ்ந்தவர்களில் போர் ஏற்படுத்திய பதில் குறி (Response) என்ன என்பதை நுண்ணிய கவனத்துடன் பார்க்கப்பட வேண்டும். இங்கு வாழ்வும் போரும் எல்லாமே தயார் நிலையில் இருந்தது. வாழ்வுக்குரிய இயல்பினை அவாவுதல் கூட இங்கு பதில் குறியாக இருந்தது. போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தமது அனுபவத்தை தாமே எழுதுவது என்பதும் இந்த கால கட்டத்தில் மிக அதிகமாக இருந்ததாக அறிகிறேன். ஆனாலும் இலக்கியத்தில் போராளிகள், போராளிகள் அல்லாதவர்கள் என்ற இடைவெளி இருந்ததாக என்னால் உணரப் படவில்லை. அவ்வாறு எடுப்பதும் பிழைபோல் தெரிகிறது. 2002க்குப் பின்னான இன்றைய காலகட்டமும் அரசியல் ரீதியான மாற்றங்களை எதிர்கொள்ளும் காலகட்டம் என்றவகையில் ஒரு வித்தியாசமான காலகட்டமாகிறது.

தமிழிழக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரை இங்கு ஒரு முறையான விமர்சன முறைமை இப்போது இல்லை. இப்போது புத்தகத்தைப் பற்றிய விபரங்களைச்சொல்லும் ஒரு மலினப்படுத்தப்பட்ட ஒரு உடற்கூற்றியல் முறைமை சம்பந்தப்பட்ட ஆய்வுதான் இங்கு உள்ளது. இலக்கிய விமர்சனத்தின் பணி என்பது ஒரு மதிப்புரை. அந்த மதிப்பீடு எவ்வாறு செய்யப்படுகிறது, மதிப்பீட்டின் தன்மைகள் என்ன என்பது விமர்சகர்களுடைய அடிப்படையான கருத்து நிலையைப் (Idiology) பொறுத்தது. எதைப் பார்க்கிறார்? எப்படி உணர்கிறார் என்பது பற்றியது. உலகில் உருவாகிய அடிப்படையான விமர்சன முறையின் பல மாற்றங்கள் இங்கு வரவில்லை. (நவீனத்துவம், பின் நவீனத்துவம்



சிங்கள விமர்சகர்களிடம் கூட பின் நவீனத்துவம் முக்கிய இடத்தைப் பெறவில்லை. ஒரு காலத்தில் பின் நவீனத்துவம் நம்பிக்கை தரக் கூடியதாக இருந்த போதும் பின்னர் அது பூகோள முதலாளித்துவத்துடன் (Globali bation) தொடர்புடையது என்பது தெளிவாகிற்று.

ஒரு கலைப்படைப்பாக உள்ள ஒன்றை ஒருவன் வாசிக்கும் போது அவரிடத்தில் அது எத்தகையதான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்த படைப்பு உருவாகிய சூழல், குறிப்பான முறையில் உணர்த்தப்படும் கருத்து நிலை என்பவற்றின் போக்குப் பற்றிய ஆய்வே விமர்சனமாகிறது. மதிப்பீட்டுக்கும், விளக்கத்துக்கும், படைப்புக்கும், வாழ்வுக்குமான புரிதலுக்கும் விமர்சனம் அவசியமாகிறது.

சமூக ஒடுக்குமுறைக்குள் சிக்கி எங்கே மனிதன் வதைபடுகிறானோ அங்கே அவனுககாக பேசப்பட வேண்டும். இதுவே இலக்கியத்தின் நோக்காக அமைய வேண்டும்.

மூன்றாவது உலக பின் காலணித்துவ நாடுகளில் 'இனத்துவம்' (Ethinicity) உலகமயமாதல் பின்புலத்தில் சில இடங்களிலாவது ஒருவர்க்கப் பயன்பாட்டைப் பெறுகிறது. இனத்துவம் என்ற சொல் உலக முதாலாளித்துவ நாடுகளில் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது. எமது பண்பாட்டை கைக்கொள்வது மட்டுமல்ல, அப்பண்பாட்டை பேணிக் கொள்கிற அரசியல் உரிமையையும், பொருளாதாரச் சூழலையும் ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு போராட்டமாகவே இதனைப் பார்க்கிறேன். சனநாயகச் சூழலில் இதற்கொரு நியாயப்பாடு உண்டு.

இச்செவ்வியினை எடுப்பதற்கு எனக்கு பேருதவியாக இருந்த கொழும்பு இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நடா அவர்களுக்கும் சிரமத்தின் மத்தியில் செவ்வியளித்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களிற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

## மதுவடி மயிலர்



செய்தி:– கொள்கை முரண்பாடுகள் இருப்பினும் ஜே.வி.யுடன் கூட்டணி அமையும் என்கிறார் சனாதிபதியின் பேச்சாளர்.....

மயிலர்:- அப்ப உடன்பாடற்ற உடன்பாடு எண்டு சொல்லுங்கோ.... அதுசரி கொள்கையே இல்லாதவர்களிடையே கொள்கைகளில் எப்படி முரண்பாடு உண்டாகுமாம்? அதுவும் சரிதான் இரண்டு தரப்புக்கும் உறுதியான கொள்கைகள் இருந்தால் தானே... உறுதியான முரண்பாடும் உருவாகும்... இதுக்கு பேர் கூட்டணியில்லை... ரணிலின் அரசைக் கவிழ்க்க உருவாகும் வேட்டணி தான் பாருங்கோ...!

செய்தி:– ஜப்பானும், நோர்வேயும் தமது நலன்களுக்காகவே இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்றன என்கிறார் கதிர்காமர்.

மயிலர்:- ஆக.... சந்திரிகாவும் கதிர்காமரும் தான் பொது நலனுக்காக, சிறிலங்காவின் தேசிய நலனுக்காக, இந்த விவகாரத்தில் தலையிடுகின்றார்களாக்கும்..... ஆட்சி மாறினாலும் பேச்சுவார்த்தை தொடரும் என்று சொல்லிக் கொண்டே சமாதான நடவடிக்கைகளை குழப்பவும் ஆட்சியைக்கலைக்கவும் சதிசெய்வதும், மீண்டும் போர் தொடங்கினால் சண்டைக்கு தலைமை தாங்குவேன் என்று சூழுரைப்பதும், ஜே.வி.பியுடன் இணைந்து அமைதியை கெடுக்கமுயல்வதும் பொது நலனுக்காக என்றல்லவா கதிர்காமண்ணர் நினைக்கிறார் போல.... வீடுகொழுத்திற ராணிக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கிற ஆலோசகர்....

செய்தி:– ஈராக்கியப் போரினால் அரபுலகில் எழுச்சி நிலை உருவாகின்றது... என்கின்றனர் மேற்குலகச் செய்தியாளர்கள்.

மயிலர்:- சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி எண்ட கதை போலக் கிடக்குது... ஐ.நா.சபையையே தூக்கியெறிந்து விட்ட அமெரிக்காவின் எண்ணைப் பசிக்கும் மேலாதிக்க வெறிக்கும் ஈராக்மட்டும் எரியவில்லை.... அதற்கு எதிராக அரபுலகம் முழுவதும் எரியத் தொடங்கிவிட்டது போல கிடக்குது.. ஈராக் மக்களுக்கு விடுதலை பெறவே யுத்தம் என்ற புஷ். - பிளேயர் போர்விளையாட்டு அமெரிக்காவின் பெயரையே புஸ்வாணமாக்கி வருகுது பாருங்கோ...

☞ எனக்கு ஒரு காது செவிடு; மற்றொரு காது கேட்காது. – ஜோயெல் ஹேரிஸ்

# திருமுக அறிமுகம்




### பொதுசன ஐக்கிய முன்னணிப்பிரமுகர், முன்னாள் உயர் கல்வி அமைச்சர்,இந்நாளில் கட்சி தாவக்காத்திருப்பவரான

## றிச்சட் பத்திரண

**மேல் மாகாணசபைத்** தேர்தலில் முதல் அமைச்சர் வேட்பாளராக போட்டியிட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பாரேயானால் நான் பொதுசன ஐக்கிய முன்னணியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவத் தயார் என்ற கருத்துப்பட தடாலடியாக அறிக்கை விட்டு விட்டு தொடர்ந்தும் பொ.ஐ. முன்னணியிலே... அதுவும் சந்திரிகாவுக்குச் சவால் விடுவது போன்று தொடர்ந்தும் இருப்பவர்...

ஏற்கனவே பொ.ஐ .முன்னணியில் இருந்து ஐ.தே கட்சிக்குத் தாவி அமைச்சர்களாகக் கொலுவிருக்கும் ஜீ.எல்.பீரிஸ், எஸ்.பீ.திஸ்ஸநாயக்கா வரிசையில் சேருவதற்கு தருணம் பார்த்துக் காத்திருப்பவர்.

தனது இந்த எண்ணத்தை பகிரங்கமாகவே பல தடவைகள் கூறிவிட்ட போதிலும் இன்னும் அவர் உரிய அழைப்பு வராததால் இருக்கும் இடத்தில் அப்படியே இருப்பவர். ஆக.. இவர் தற்போது ஒரு மதில் மேற் பூனை. அரசியலில் காற்றுள்ள பக்கம் சாயக் காத்திருப்பவர்.

பாடசாலை வாத்தியாராக தனது வாழ்க்கையை ஆரம்பித்த இந்த பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி பள்ளிக்கூட அதிபராக உயர்ந்தபின்... அரசியலில் நுழைந்து கல்வி, உயர்கல்வி அமைச்சராகி தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டவர்.

சிங்கள இனவாதக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற அடிப்படையில் பார்த்தால் இவரது சிந்தனைப் போக்கைப் புரிந்து கொள்ளமுடியும்.

முதலில் 1983 இல் ஐ.தே.கட்சி வேட்பாளரை தேர்தலில் தோற்கடித்து பாராளுமன்றம் நுழைந்த நாள்முதலே ஐ.தே. கட்சிக்கு எதிரான கடும் பேச்சாளராகவும்-காரசாரமான பேச்சாளராகவும் இருந்து வந்தவர்.

1986 ஆம் ஆண்டில் அக்மீமன தேர்தல் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டு, சி.ல.சு .கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வான இவர் அதே ஆண்டில் தேர்தல் ஆட்சேப மனு ஒன்றின் மூலம் பதவியை இழந்தார்.

சந்திரிகா குமாரணதுங்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கிய பத்திரண 1989-முதல்1994 வரையிலான காலப்பகுதிக்குள் எதிர்க்கட்சியின்-பிரதான பேச்சாளராகப் பாராளுமன்றத்தில் விளங்கினார்.

அக்காலத்தில் ஐ.தே கட்சிக்கும் பிரேமதாச மற்றும் டி.பி.விஜேதுங்க அரசுகளுக்கும் பெரும் தலைவலியாக விளங்கியவர்.

பின்னர் 1994 இல் சந்திரிகா ஆட்சிபீடம் ஏறியதும் தேசியகல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சராக பதவியேற்றார்.இது பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் அவருக்குள்ள செல்வாக்கையும், சிரேஷ்ட நிலையையும் எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

அமைச்சராக இருந்த அதே காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் அரச தரப்பின் பிரதம பேச்சாளராகவும் இவரே விளங்கினார்.

சந்திரிகாவின், 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற பெயரிலான தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்தும், அதனை விமர்சித்த எதிர்க் கட்சியினருக்கு கடுமையான தொனியில்,போரின் அவசியத்தை நியாயப்படுத்தியும் பேசியவரான பத்திரண ஒரு பொறிபறக்கும் பேச்சாளர்.

இவர் கல்வி அமைச்சராக இருந்த காலப்பகுதியில்தான் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கல்வியின் நிலை மிகவும் மோசமடைந்தது. போரைக் காரணம் காட்டி வன்னி மக்களுக்கான கல்வி வளங்கள் பலவும் நிராகரிக்கப்பட்டது மறக்கமுடியாத விடயம்.

சந்திரிகா ஆட்சியில் அமைச்சராக இருந்த வேளையில் ஐ.தே. கட்சியினரைக் குறிப்பாக, அச்சமயம் ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தராக விளங்கிய அநுரா பண்டாரநாயக்காவை-அவரது பாராளுமன்ற உரைகளை விமர்சித்து தர்க்கம் புரிபவராக விளங்கிய பத்திரண, அநுராபண்டாரநாயக்கா மீண்டும் பொ.ஐ.முன்னணிக்குள் நழுவி வந்ததும், அநுராவால் அவரது ஆதரவாளர்களாலும் ஓரங்கட்டத் தொடங்கினார்.

ஐ.தே.கட்சி ரணில் தலைமையில் கடந்த ஆண்டில் ஆட்சி பீடம் ஏறியதும், பொ.ஐ. முன்னணிக்குள் அநுராவின் மீள்வருகையும், சந்திரிகாவுடனான ஜே.வி.பியின் நெருக்கமும், மறைமுக உடன்பாடும், சி.ல.சு. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் [illegible]த்த தலைவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திய போது அத்தகையோரில் பத்[illegible]வும் இணைந்து கொண்டார்.

இந்த இணைவு அவரை மெல்ல மெல்ல ஐ.தே.கட்சியின் பக்கம் நகரத் தூண்[illegible]யது.

பொ.ஐ.முன்னணியின் சமகால அரசியல் நகர்வுகளில் அதிருப்தியுற்றோர்கள், பகிரங்கமாகவே ஓரங்கட்டும் நிலை உருவானபோது, பத்திரணவும் தனது சந்திரிகா மீதான விசுவாசத்தை இழந்து அதிருப்தியை வெளிப்படையாகவே வெளிக்காட்டத் தொடங்கினார்.

சந்திரிகாவின், அவரது நிறைவேற்று அதிகாரசனாதிபதி பதவியில் இருந்து அகன்று கடந்த வருடத்தில் ஐ.தே.கட்சி முனைந்த போது, பொ.ஐ. முன்னணிக்குள் இருந்தவாறே, ஐ.தே.கட்சிக்கு ஆதரவு வழங்கப்பகிரங்கமாக அறிக்கை விட்டவர் பத்திரண

ஆனால் இந்த முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஐ.தே.கட்சியும் அவருக்கான அழைப்பினை விடுக்கவுமில்லை. பொ.ஐ.முன்னணியில் இருந்து அவர் இன்னமும் விலகவுமில்லை.

ஆனாலும் பத்திரண சந்திரிகாவுடன் ஒட்டுவதாகஇல்லை. எதிர்வரும் மேல் மாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட ரணில் அழைத்தால்-அல்லது விரும்பினால், தான் ஐ.தே.முன்னணியில் போட்டியிடத் தயார் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ள பத்திரணவின் பதவி இலக்கும்- இலட்சியமும் தெரிகிறதல்லவா?

இப்போது அக்மீமன தொகுதிக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியும் பறிக்கப்பட்ட நிலையில் ஐ.தே.கட்சியை நோக்கி தாவுவதற்கான சூழலை எதிர்பார்த்து பொ.ஐ .முன்னணிக்கிளையில் இருக்கும் பத்திரண பேரினவாத அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு ஒரு சிறந்த உதாரணம்.

சந்திரிகா இன்னும் முற்றாக அவரைத் துரத்தவுமில்லை - ரணில் அவரை இன்னமும் ஏற்கவுமில்லை. இரண்டும் கெட்டானாக இருக்கும் பத்திரணவின் அரசியல் எதிர் காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.... அதுவும் ரணிலின் கைகளில்...

# நறுக்கென...

## ஈராக் யுத்தம் அமெரிக்காவுக்கு ராஜதந்திரத்தோல்வியா...?



**அமைதியை** ஏற்படுத்தவும்,சதாம்ஹுசைனின் சர்வாதிகாரத்தில் இருந்து ஈராக்மக்களை விடுவிக்கவும், அபாயகரமான இரசாயன ஆயுதங்களை அழிக்கவும்.... என்று கூறிக்கொண்டு ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்காவும் அதன் துணை நாடுகளும் மேற் கொண்டயுத்தம் 'புஷ்'ஷின் அனுபவமின்மையையும் அவசரத்தையும் வெளிப்படுத்தியுள்ள தாகவும், அமெரிக்காவுக்கு உலகளாவிய ரீதியில் எதிர்ப்பலையை ஏற்படுத்திவருவதாகவும் மேற்குலக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்விடயத்தில் இம்முறை அமெரிக்காவின் கணக்கு பொய்த்துப்போயுள்ளது மட்டுமல்ல, நீண்டகால நோக்கில் அரபுலகம் அமெரிக்காவுக்கு இன்னொரு வியட்னாமாக மாறும் சாத்தியத்தையும் உருவாக்கி விட்டுள்ளதாக சர்வதேசஅரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் வெற்றியைப் பெற்றாலும் கூட, அமெரிக்க ராஜதந்திரம் தோற்றுப்போய் விட்டது. ஐரோப்பிய சமூகமும், ரஷ்யா, சீனா, இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகள் அமெரிக்க நடவடிக்கையை முற்றாக நிராகரித்துள்ளதுடன், அமெரிக்காவின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வெளிப்படையாக, பகிரங்கமாக மறுத்துள்ளமையானது 'புஷ்'ஷிற்கு அவரின் நிர்வாகத்திற்குக்கிடைத்த பல மான-அவமான கரமான-அடியாகும். இக்கருத்தையும் சர்வதேச அவதானிகளே வெளியிட்டுள்ளார்கள்.

ஈராக்கிய மக்கள் மீது உருவாகிவரும் அனுதாபஅலை அமெரிக்க அணுகுமுறைக்கு கிடைத்துள்ள பாரியதோல்வியாகியுள்ளது.

ஈராக் மீதான யுத்தத்திற்கு மேலும் 8000 கோடி டொலர்களை ஒதுக்கியுள்ள அமெரிக்கா, அதே ஈராக்கில் மனிதாபிமானப் பணிகளுக்கென ஒரு கோடி 80 லட்சம் டொலர்களை ஐ.நாவிடம் வழங்கியுள்ளதை உலகம் கேலியாக நினைக்கிறது. புஷ் நிர்வாகத்தின் கோமாளித்தனம் என இதனை ஐரோப்பிய சமூகம் வர்ணித்துள்ளது.

'சதாம்' என்ற தனிமனிதனை இலக்கு வைத்து, அவரது குடும்பத்தை இலக்கு வைத்து நடத்தப்படும் இந்த யுத்தம் ஆயிரக்கணக்கில் ஈராக்கிய பொதுமக்களை கொன்றழித்தது. ஈராக்கையே நிர்மூலம் செய்துவருவதை மறைக்க அமெரிக்க- பிரிட்டிஷ் அரசு மேற்கொண்டுவரும் பிரச்சார யுத்தமும் பிசுபிசுத்துப் போய்விட்டது. இந்த நிலையில் அமெரிக்காவுக்கு அகௌரவத்தை ஏற்படுத்தி வரும் ஈராக்போர் புஷ்'ஷிற்கு கௌரவப் பிரச்சினையாக மாறிவிட்டதுதான் இன்றைய உலகின் பெரும் அவலத்திற்கு காரணமாகியுள்ளது.

## விமானப்படையின் செயற்பாடு; சம்பிக்கவுக்கு எரிச்சல் தருகிறதா...?



'இதுவரை காலமும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிட்டுவரும் கடற்படையை நான் பாராட்டுகிறேன். அவர்கள் மட்டுமே விடுதலைப்புலிகளுக்கு எந்தவித உதவியையும் செய்யாது தொடர்ந்து தாக்கியழித்து வருகின்றனர்.

இவ்வாறு திருவாய் மலர்ந்து வாழ்த்தியிருப்பவர் சிகல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரும் சிங்களப் பேரினவாதியுமான 'சம்பிக்கரணவக்க' வேதான். இத்துடன் மட்டும் அவர் நிறுத்திவிடவில்லை, சிறிலங்கா விமானப்படையை அவர் கண்டித்துக் கேலிசெய்துமுள்ளார். அதாவது விமானப்படையினர் விடுதலைப்புலிகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் போர் விமானங்கள் மற்றும் வானூர்திகளில் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் ஏற்றி இறக்கியும், அவர்களின் பயணப்பொதிகளைச் சுமந்து சென்றும் உதவி செய்து வருகின்றனர்... இது ஒரு தேசியக்குற்றம். இதற்கு அரசு பொறுப்பு என்றும் அவர் குமுறியுள்ளார்... இல்லை இல்லை உறுமியுள்ளார்.

சம்பிக்கவுக்கு சமாதானம் என்றாலே பிடிக்காது. பேச்சு வார்த்தையை அவர் நிராகரிப்பவர். கொழுவல்கேஸ். சிங்கள மக்களின் ஏக காவலன் என்ற நினைப்பு... யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தால் போதும் நாட்டில் அமைதியை பேரினவாத ஒடுக்கு முறை மூலம் ஏற்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை.

சிகல உறுமயவின் தேர்தல் சின்னத்தை உற்றுக் கவனித்தால் போதும் அவர்களின் இலக்கு எப்படிப்பட்டது என்பதை... 'வில்லும் அம்பும்' கொண்ட அவர்களின் சின்னத்தின் அம்பின் முனை வில்லின் முகத்திற்கு எதிர்முனையாக இருப்பதைக் கவனித்தால் அவர்களின் பிற்போக்குத்தன அறியாமையின் உச்சத்தை உணர்ந்து கொள்ளமுடியும்.


ஒரே ஒரு... பிரதிநிதியைக் கூட ஒருமுகமாக ஒரே ஆளாகத்தேர்ந்தெடுக்கும் ஒருமைப் பாடற்ற, ஆண்டுக்கொருவர் பதவிக் கதிரையில் சுகம் காண அமரும் தன்மையுடன்-இயங்கும் சிகலஉறுமய விடுதலைப்புலிகளுடன் மோதுவதன் மூலம்-(வெறும் அறிக்கை களின் மூலம் மட்டுமே....) தம்மை அடையாளப் படுத்திக்கொள்ள நினைப்பதுதான் வேடிக்கையானது. பலவீனமானது. கடற்படையைப் பாராட்டியும், விமானப்படையை பரிகசித்தும் கூறும் இவர் விடுதலைப்புலிகளுடன் கைகுலுக்கிப் பேச்சுவார்த்தைகளில் சம நிலையில் அமர்ந்து பேசும் இராணுவத் தளபதிகள் பற்றி என்ன கூறுவாராம்?

அவர் என்னதான் கூறட்டும்...! கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

**செங்குட்டுவன்**

# சிறுகதை இலக்கிய ஆய்வுரை

கலாநிதி
க.சோமாஸ்கந்தன்



ஒரே காலத்தில் தோன்றினாலும் ஒவ்வொரு நாட்டின் சிறுகதையும் தனக்கே உரித்தான சில இயல்புகளையும் தனித்துவமான அடையாளங்களையும் கொண்டிருந்தன. பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் ஒரு வித்தியாசமான வளர்ச்சிப்பாதை தென்படுகின்றது. இரு நாடுகளிலும் தினசரி மற்றும் வாரப்பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பெருமளவில் பிர சுரமாகின. இவை புனைகதைகள், கதைகள், கவிதைகள்,நூல் விமர்சனங்கள், விவாதக் கட்டுரைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்றவற்றை வாசகர்களுக்கு வழங்கின.

மக்கள் ஆதரவு பெற்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவும் விற்பனை செய்வதற்கென்றே சிறுகதை எழுதும் பாரம்பரியம் இந்த இரு நாடுகளிலும் முதன் முதலாகத் தோன்றியது. வாசகர்கள் மனமறிந்து அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கதைகள் புனையப்பட்டன. அன்று தொடங்கிய இந்தப் பாரம்பரியம் முடிவில்லாது தொடர்கின்றது. எழுத்தை நம்பி வாழும் ஒரு புதிய வர்க்கத்தை இது உருவாக்கியது.

இந்த வர்க்கத்தினர் யதார்த்தத்தை மதித்து எழுதும் நோக்கம் கொண்டவர்களல்லர். முதலில் கதையின் முடிவைத் தீர்மானித்துக் கொண்டு கதையை எழுதத் தொடங்கும் மரபை இவர்களில் ஒரு சிலர் கொண்டிருந்தனர். ஓ.ஹென்றி (O.HENRY) என்ற புனைபெயரில் எழுதிய அமெரிக்கரான வில்லியம் சிட்னி போட்டர் (WILLIAM SYDNEY PORTER) மிகவும் பிரசித்தமானவர். அவர் எழுதிய சிறுகதை ஒவ்வொன்றிலும் கதையின் முடிவுதான் வாசகர் சற்றேனும் எதிர்பாராத விதத்தில் வியப்பூட்டும் அம்சமாக இருக்கும். இன்றும் இவரைப் போல எழுதிப்பார்ப்போர். இருக்கிறார்கள். ஆனால் அவர் அளவுக்கு வர முடியவில்லை.

பொழுது போக்குச் சிறுகதை மேற்குலகில் நன்குவேர் விட்டுக்கிளைபரப்பியுள்ளது. மகிழ்ச்சிகரமான முடிவு, இறுக்கமாகப் பின்னப்பட்ட சம்பவக் கோர்வை இதனுடைய முக்கிய அடையாளங்களாகும். காதல் கதைகள் மேற்கில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இருபாலாராலும் வயதுவித்தியா சமின்றிப் படிக்கப்படும் இந்த ரகச் சிறுகதைகளும் நெடுங்கதைகளும் ''முக்கோண வடிவத்தில்'' அமைக்கப்படுகின்றன.

காதலன், காதலி, அவர்கள் காதலுக்குக் குறுக்கே நிற்கும் வில்லன், இறுதியாக கைகூடும் அவர்கள் காதல். இதுதான் காதல் கதைகளின் அடிச்சட்டம். வில்லன் இல்லாத முக்கோணக் கதைகளும் உண்டு. அங்கே வில்லனுக்குப் பதிலாக சமுதாயத் தடங்கல்கள் தோன்றுகின்றன. அவற்றை முறியடித்து, கதையைத் திருமணப் பதிவாளர் அலுவலகம் வரை அல்லது தேவாலயம் வரை நகர்த்திச் செல்வது எழுத்தாளன் பணி.

பொழுதுபோக்குக் கதைகள் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவைபோல் இருந்தாலும், புதிய உத்திகளையும், எழுத்துத் திறன்களையும் புகுத்தி விற்பனையைப் பெருக்குகிறார்கள். இந்த ரகக் கதைகளுக்கு இருக்கும் சந்தை வாய்ப்பு மிகப்பெரிது. ஒன்றை மாத்திரம் மறக்கக் கூடாது. இந்த வகைக்கதைகள் திறனாய்வு செய்யப்படுவதில்லை. ஒரு சில மிகவும் நேர்த்தியாக எழுதப்பட்டாலும் அவற்றைக் கூட ஆய்வாளர்கள் தீண்டாமல் விடுகின்றனர்.

மேற்கின் எழுத்தாளர்கள் சிறுகதை வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புச் செய்துள்ளனர். சிறுகதை இலக்கியம் இவ்வளவு தூரம் வளர்ச்சி பெற்றதற்கு அவர்கள் காரணமாவர். இவர்கள் செய்த பரிசோதனைகளின் தாக்கம் அனைத்து உலக மொழிகளிலும் தென்படுகின்றன. படைப்புருவம், உள்ளடக்கம், உணர்வு மற்றும் கருத்து ரீதியான முன்னெடுப்பு என்பன அவர்களுடைய பரிசோதனை முயற்சிகளின் முக்கிய அம்சங்களாகும்.

கதை மாந்தர்களும், அவர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட சம்பவங்களும் முக்கியமல்ல. கதையின் அடிப்படைக் கருத்தும், துருவிப்படிப்போருக்கு அது வெளிப்படுத்தும செய்தியும் கூடுதல் முக்கியமானவை என்ற நிலைப்பாட்டை ருஸ்சிய எழுத்தாளர் அன்ரன் செக்கோவ் (1860-1904) (Anton Chekov) தனது சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தினார்.

செக்கோவின் சிறு கதைகளில் வரும் மாந்தர் மிகவும் சாதாரணமானவர்கள். சமுதாயத்தின் அடித்தட்டில் இருந்து வருபவர்கள். இவர்கள் வாசகர்கள் மனதில் நெடுங்காலம் நீடிக்கக் கூடிய விதத்தில் படைக்கப்படுவதில்லை. அவருடையகதைகளில் வியப்போ, திகைப்போ, சுவாரஸ்யமோ ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெறமாட்டா. சுருங்கச் சொன்னால் "கதை" இருப்பது போன்ற வெளித்தோற்றமே இருக்கமாட்டாது. ஆனால் பலமுறை கூர்ந்து படிக்கும் போது செக்கோவின் கதைகள் மிகவும் திருப்திகரமான இலக்கிய இன்பம் தருவதை உணரலாம்.

ஜோசப் கொன்றாட் (JOSEPH CONRAD) ஏர்னெஸ்ட் ஹெமிங்வே (ERNEST HEMINGWAY) போன்ற முன்னோடி எழுத்தாளர்களும் உணர்வும் கருத்தும் அவற்றை வெளிப்படுத்தும் திறமையும் இருந்தால் ஒரு சிறுகதை முழுமை பெறும் என்று வலிறுத்தினார்கள்.

"ஒன்றைப் படிக்கும் போது, உங்கள் உணர்வும் கருத்தும் பழக்கப்பட்ட திசையில் செல்கின்றன. படைப்பாளி தனது படைப்பை நீங்கள் எதிர்பார்க்கும் உணர்வுக்கும் கருத்துக்கும் பொருத்தமாகவே அமைக்கின்றான். இதிலிருந்து படைப்பாளி விடுபடவேண்டும். உணர்வையும் கருத்தையும் வித்தியாசமான முறையில் யதார்த்த விதிமுறைகளோடு முரண்படாமல் வெளிப்படுத்த வேண்டும் அதை வாசகர்கள் ஏற்கும் வகையில் படைக்கும் திறமை அவனுக்கு இருக்க வேண்டும்" என்கிறார் ஏர்னெஸ்ட் ஹெமிங்வே.

தொடரும்.....

# பன்முகம் - 15

# எம்.ஜி.ஆர்.



தென்னகத்திரை உலகிலும் சரி அரசியலிலும் சரி கொடிகட்டிப் பறந்தவர் திரு. எம்.ஜி.ஆர். அவரை அனுசரிக்காமையால் முகவரி இழந்தவர்களும் அவரோடு இசைந்தமையால் உச்சத்தை எட்டியவர்களும் பலர்.

அறிஞர் அண்ணாவின் வாரிசுகள் என்று தமக்கு முத்திரை குத்திக் கொண்டவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் ஈழத்தமிழருக்கு எதிராகச் செயற்படத்துணிந்த போது ஈழத்தமிழ் விடுதலைப் போராளி களுக்கு கைகொடுத்தவர் அவர்.

தனக்குச் சரி என்று பட்டதை பிடித்து விட்டதை எத்தனை எதிர்ப்புகளின் மத்தியிலும் செய்து முடிக்கும் துணிவும், செயற்றிறனும் மிக்கவர்.

ஒரு முறை இந்தியத் தொலைக்காட்சி யொன்றில் பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் செவ்வியொன்றை பார்க்க நேர்ந்தது. அவர் தனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாகக் கூறிய செய்தி ஒன்று.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம் திரையுலகில் அடியெடுத்துவைக்க முயன்று கொண்டிருந்தகாலம் அது. ஒலிப்பதிவுக் கூடம் ஒன்றில் ஏதோ ஒரு பிறமொழிப் பாடலுக்காக எஸ்.பி. பாலசுப்பிரமணியம் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தவேளை எம்.ஜி.ஆர். தற்செயலாக அந்தப் பக்கம் போகவேண்டி ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். பால சுப்பிரமணியத்தின் குரலால் ஈர்க்கப்பட்டு விட்டார். அதுவே எஸ்.பி. பாலசுப்பி ரமணியத்தின் புகழுக்கு அடித்த ளமாக அமைந்துவிட்டது.

எம்.ஜி.ஆருக்கு பிடித்த ஒரு விடயத்தை அவர் கூறித்தான் மற்றவர்கள் செய்வார்கள் என்றில்லை. ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக் கொண்டு அவர் நினைத்ததைச் செய்து முடிக்கும் அளவுக்கு தென்னகத் திரையுலகில் அவரது செல்வாக்கு இருந்தது.

அதேசம்பவம் தான் பின்னணிப் பாடகர் திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியத் தின் விடயத்திலும் நடந்தது. எஸ்.பி பாலசுப்பிரமணியம் எம்.ஜி.ஆரின் ஆயிரத்தில் ஒருவன் படத்தில் வரும் "ஆயிரம் நிலவே வா" எனும் பாடலைப் பாடுவதற்கான வாய்ப்புக்கொடுக்கப்பட்டது. அந்தப் பாடலுடன் பாலசுப்பிரமணியம் கொடிகட்டிப் பறப்பார் என்றஎதிர்பார்ப்பு மக்களிடமும். தன்க்கு நல்ல எதிர்காலம் அமையப்போகிறது என்ற நம்பிக்கை எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திடமும் ஏற்பட்டுவிட்டது.

பாலசுப்பிரமணியமும் தனக்குக் கிடைத்த இந்த அரிய வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் சிரமப்பட்டு பயிற்சி எடுத்துக்கொண்டார்.

பாடல் ஒலிப்பதிவுக்கான நாளும் குறிக்கப்பட்டது. மறுநாள் ஒலிப்பதிவு. அன்றைய தினத்துக்கு முந்தியதினம் எம்.ஜி.ஆரிடம் இருந்து தகவலை அறிவிக்க ஆள்வந்தார். வந்தவருக்கு திரு.பாலசுப்பிரமணியம் இருந்த நிலையைக் கண்டதும் பேரிடி விழுந்தது போலாயிற்று.

ஏனெனில் சில நாள்களுக்கு முன்னர் சிறிது சிறிதாக ஆரம்பித்த காய்ச்சல் அன்றைய நாளில் படுக்கையையே விட்டு எழும்ப முடியாத அளவுக்கு ஜுரமாக அடித்துக்கொண்டிருந்தது. வந்த வருக்கோ அதிர்ச்சி. பாலசுப்பிரமணியத்துக்கோ தனது வாழ்க்கையில் கிடைத்த அரிய சந்தர்ப்பம் போய் விட்டதே என்ற பெருந்துயர். தனக்கு ஏற்பட்ட நோய் கொடுத்த நோவை விட இந்தத் துரதிஷ்ரம் பெரும் துயராக விருந்தது. அவர் படுக்கையை விட்டு எழமுடியாதவராக இருந்தார். வந்தவரும் ஆறுதல் கூறி, மிகவும் இரக்கப்பட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டார். எம்.ஜி.ஆரால் அறிமுகம் செய்யப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படவிருந்த வளர்ச்சிகளை இழந்த துயரை அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

எம்.ஜி.ஆர். கண்டிப்பான மனிதர். எதையும் மிகவும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதில் ஆர்வமுடையவர். எனவே முதல் வாய்ப்பிலேயே அவரை ஏமாற்றி விட்ட தன்னை மறந்து வேறு பாடகரை ஒழுங்கு செய்து, பாடலும் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று அதை மறந்து தன்னைத் தேற்றிக்கொள்ள முயன்றார். வாரங்கள் சில கழிந்தன.

பாலசுப்பிரமணியத்துக்கு இன்ப அதிர்ச்சி தந்த நாளது. எம்.ஜி. ஆரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. பாடல் ஒத்திகைக்கும் ஒலிப்பதிவுக்கும் வரும்படி செய்தி அனுப்பியிருந்தார்.

பாலசுப்பிரமணியம் குறிப்பிட்ட நாளில் சென்றார், ஒத்திகை ஒலிப்பதிவு எல்லாம் நன்கே நிறைவேறிற்று. எம்.ஜி.ஆரும் கூடவே இருந்தார். ஆனால் பல்லாயிரக்கணக்கில் செலவழித்து முன்னர் பாடலுக்கு ஒழுங்கு செய்தமை பற்றியோ, பாலசுப்பிரமணியத்தால் ஏற்பட்ட சிரமம் பற்றியோ, எதுவுமே அவர் பேசவில்லை. அப்படி ஒரு சம்பவம் நடந்ததாககாட்டிக்கொள்ளவுமில்லை.

அவர் கடைப்பிடித்த அமைதியும், மௌனமும் பாலசுப்பிரமணியத்தை அமைதியிழக்கச் செய்தது. அனைத்தும் முடிவுற்ற பின்னர் பாலசுப்பிரமணியம் தன் மன உறுத்தல் தாங்க முடியாதவராகச் சந்தர்ப்பம் பார்த்து சென்று தானே வலிந்து அதுபற்றி எம்.ஜி.ஆரிடம் கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர் கூறிய பதிலில் பாலசுப்பிரமணியம் உறைந்தே போய்விட்டார்.

"இந்தாப்பா நான் நினைச்சிருந்தா இன்னுமொரு ஆள ஒழுங்கு செய்து இந்தப்பாடலை ஒலிப்பதிவு செய்திருக்கலாம். ஆனா நான் அதை விரும்பல்ல ஏன்னா, அன்னைக்கு நீ வேணுமின்னு அப்படி நடந்துக் கேல்ல. அதுமட்டு மில்லே நீ என்படத்தில எனக்காகப் பாடப்போற விஷயத்தை எத்தினை பேருக்கு சொல்லிப் பெருமைப்பட்டிருப்பே. ஒரு வேளைபாடியும் காட்டியிருப்பே. ஆனா படம் வெளி வர்றப்போ அந்தப் பாடல் வேற ஒருவரிடகுரல்ல வெளி வந்தா நீ சொல்லி வைச்சவங்க எல்லாரும் என்ன நினைப்பா. நீ சரியாய்ப் பாடல்லை யாக்கும். அதான் எம்.ஜி.ஆர். வேறைஆளை மாத்திட்டாரு. அப்போ நீ எவ்வளவு வேதனைப்படுவே. அது உனக்கு அவமானம் மட்டுமல்ல உன்னுடைய எதிர்காலத்தையே பாழாக கிடுமில்லே. அதான் உன்னை வைச்சே பாடலை பாடவைச்சிட்டேன்"

இந்த வார்த்தைகளை எம்.ஜி.ஆர் வாயால் கூறக் கேட்ட பாலசுப்பிரமணியம் மனம் நெகிழ்ந்து போனார். இந்தச் சம்பவத்தை தொலைக்காட்சிப் பேட்டியில் கூறிக் கொண்டிருந்த எஸ்.பி. பாலசுப் பிரமணியத்தின் முகத்திலும் அந்த உணர்ச்சிவசப்பாடு பிரதிபலித்தது. ஒலிப்பதிவு முதலில் இரத்துச் செய் யப்பட்டதனால் ஏற்பட்ட இழப்பையோ, சிரமத்தையோ பொருட்படுத்தாமல் அதைத் தனது வாயால் முதலில் கூறாது மௌனம் காத்த எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை என்னை வியப்புக்குள்ளாக்கியது. ஏனெனில் அவர் கொடுத்த அந்த வாழ்வு தென்னகத்தில் மட்டுமல்ல பிறமொழிப் பாடல்களை எல்லாம் பாட வைத்து வாழ்வையும், வளத்தையும் கொடு த்த செயல் அல்லவா.

தனது தெரிவுகளில் எல்லாம் வெற்றி பெற்ற அற்புதமான மனிதர் எம்.ஜி.ஆர் தனது அரசியல் வாரிசை உருவாக்கிய விடயத்தில் மட்டும் அவரது சர்வ மத சமத்துவக் கொள்கைக்கும், ஈழத்தமிழரை நேசிப்பதற்கும் முதலாம் தர எதிரியுமான ஒருவரை ஏன் தெரிவு செய்தார் என்பது வேதனைக்குரிய விடயமே.

நாவண்ணன்

☞ இந்தக் கணக்கிற்கு விடை கண்டுபிடிக்கும் வரை, காத்திருங்கள். - ஆர்க்கிமிடிஸ்



தொடர்கதை

அத்தியாயம் -04

ஆங்கில மூலம் பிளானரி ஓ' கொணரின்

# இடம்பெயர்ந்தவன்

தமிழில் சு.மகேந்திரன்



ஒருவார்த்தையும் பேசாமல் வீட்டின் தலைவாசலில் இருந்து கொண்டு ஸ்தம்பித்த மனிதனைப்போல் பாவனை செய்தபடி புகைத்தலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவான். சிகரட் எரிந்து சரியான அளவுக்கு வந்ததும், அவளைநோக்கியவாறு அதைவாய்க்குள் எடுத்துக் கொள்வான். பின் அதைவிழுங்குவது போல் பாவனை பண்ணிக் கொண்டு, அவளை அவன் பார்க்கும் பார்வையில் தோன்றும் அன்பை யாராலும் கற்பனை கூட பண்ணமுடியாது. எல்லையற்ற உணர்வு அப்போது அவளுக்கு ஏற்படும். அவன் தொப்பியால் முகத்தை மூடும்வரை பொறுத்திருந்து விட்டு, அவனை மூச்சுத் திணறும் வரை கட்டித்தளுவுவாள். அவள் அவன் பின்னே தொழுவத்துக்குள் சென்றாள். 'நல்லது கொபுல் கூக்கள் வந்து விட்டார்கள். திருமதி. மக்கன்றி நீங்கள் அவர்களை காண வேண்டும் என விரும்புகிறார். எங்கே சோட்லி என தேடிக்கொண்டிருக்கிறாள். அவருக்கு எங்கே நேரம் என நான் சொன்னேன்' என்றாள் திருமதி. சோட்லி.

'அவர்களது பாரத்தை அவர்களே சுமக்கட்டும்' என்றான் சோட்லி. ஒருமாட்டுக்குப் பக்கத்தில் குந்தியபடி அவனிருந்தான்.

'ஆங்கிலம் தெரியாது அவனால் உழவியந்திரத்தை ஓட்ட முடியும் என நீ நினைக்கிறாயா? கொடுக்கும் பணத்துக்கேற்ற பெறுமதியை அவள் அடைய மாட்டாள் என்றே நினைக்கிறேன். அந்தப் பையன் நன்றாகப் பேசுகிறான். ஆனால் மென்மையானவனாகவும் இருக்கிறான். கதைப்பவன் வேலை செய்ய மாட்டான். வேலை செய்யக் கூடியவன் கதைக்கமாட்டான். நீகிரோக்களை அதிகமாக வைத்திருந்தால் அவளுக்கு இதைவிட லாபம் கிடைக்கலாம்.' 'நான் என்றால் நீகிரோக் களைத்தான் வைத்துக் கொள்வேன்' என்றான் சோட்லி.

'இவர்களைப்போல் 10மில்லியன்வரை உள்ளனராம். அவர்களது குருவானவர் எத்தனைபேர் வேண்டுமோ அத்தனை பேரையும் தருவித்துத் தருவாராம்' என்றாள் திருமதி. சோட்லி.

'அவள் இந்தப் பாதிரியுடன் கூடிக் குழாவுவதை நிறுத்துவது நல்லது'. என்றான் சோட்லி.

'அவரைப் பார்த்தால் புத்திசாலியாகத் தெரியவில்லை. ஒருவகையான மூளைகெட்டவர் போன்றே தெரிகிறது.'

'நான் ரோமில் உள்ள போப்பாண்டவரை, மாடுவளர்ப்பது எப்படி என எனக்கு அறிவுரை சொல்ல அனுமதிக்க மாட்டேன்' என்றான் சோட்லி.

'இவர்கள் இத்தாலியர்கள் அல்ல போலிஸ்காரர்கள். போலந்தில் அவர்களது உடம்புகள் எல்லாம் வைக்கோல் குவியல்கள் போல் கிடந்தனவே. அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?'

'நான் இவர்கள் இங்கிருப்பதற்கு மூன்றுவார அவகாசம் மட்டுமே அளிக்கிறேன்.' என்றான் திரு. சோட்லி. மூன்று கிழமைக்குப் பின் உணவு பயிரிடப்படும் நிலத்தின் எல்லைப்பகுதிக்கு திருமதி. மக்கின்ரயரும் திருமதி. சோட்லியும் காரில்ச் சென்றார்கள்.

அப்போதுதான் கௌசக் கால்நடைக்கான உணவு வெட்டும் மிசினை இயக்க ஆரம்பித்திருந்தான். சமீபத்தில் தான் அக் கருவியை திருமதி. மக்கின்ரயர் வாங்கியிருந்தாள். இவ்வளவு காலமும் அதைவாங்காதிருந்தது, அதை இயக்கத் தெரிந்த ஒருவன் கிடைக்காமல் இருந்ததாலேயே என திருமதி. மக்கின்ரயர் கூறினாள். திரு. கௌசிற்கு ரக்ரர் ஓடவும் வைக்கோலை சுருட்டி உருட்டும் மெசின், கால்நடை உணவை வெட்டும் மெசின், அவை மூன்றும் இணைந்த தொகுதி, மற்றும் லீட்ஸ் மெசின் என்பனவற்றை இயக்கத் தெரிந்திருந்தது.

அவன் திறமைவாய்ந்த மெக்கானிக்காகவும் வேறு இருந்தான். மேசன் வேலையும் தச்சுத் தொழிலும் கூட அவனுக்குத் தெரிந்திருந்தது. உலோபியாகவும் சக்திமிக்கவனாகவும் அவன் இருந்தான். அவன் வந்ததிலிருந்து இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கான இருபது டொலர் தனக்கு ஒவ்வொரு மாதமும் மிச்சப் படுவதாக திருமதி. மக்கின்ரயா கணக்குச் சொன்னாள். அவனை கொண்டு வந்தது வாழ்க்கையில் தான் செய்த ஒரு சிறந்த காரியம் எனக் கூறிக் கொண்டிருந்தாள். அவனுக்கு பால்கறக்கும் மெசின்களை இயக்கவும் தெரிந்திருந்தது. உண்மையாகவே மிகவும் சுத்தமாகச் செயற்பட்டான் அவன் ஒருபோதும் புகைபிடிப்பதில்லை.

அவர்கள் புல்வெளியின் பக்கமாக காரைநிறுத்திவிட்டு அதிலிருந்து கீழே இறங்கினர். அந்த இளம்நீக்கிரோ பாரம் ஏற்றும் வண்டியை வெட்டியுடன் பூட்ட, கௌசாக் வெட்டியை உழவியந்திரத்துடன் பூட்டிக் கொண்டிருந்தான். அவனது வேலையை நீகிரோவுக்கு முன் முடித்து விட்ட போலிஸ்காரன் நீகிரோப் பையனை அப்பால் தள்ளிவிட்டு, அவனது வேலையையும் தானே செய்தான். ஒரு ஸ்குருரைவரையோ அல்லது சுத்தியலையோ எடுத்துத்தரச் சொல்லி கேட் கும்போதெல்லாம், அவனது முகத்தில் கோபத்துடன் கூடிய பிரகாசம் தெரிந்து உதவியாளர்களை பயமுறுத்தியது. எதுவுமே அவனது விரைவான செயற்பாடுகளுக்கு ஏற்றதாக அமையவில்லை. நீகிரோக்கள் அவனை உணர்ச்சிவசப்படவைத்தனர்.

ஒருவாரத்துக்குமுன் சலக் இரவுச்சாப்பாட்டு நேரத்தில் கோழிக்கூட்டினுள் புகுந்து, வறுவலுக்குப்பதமான கோழிக்குஞ்சொன்றைப்பிடித்து தான் கொண்டு வந்திருந்த சாக்குக்குள்ப் போட்டான். பின் சாக்கை தன் கோட்டுக்குள் வைக்கப்போகும் போது கௌசக் எதிர்ப்பட்டுவிட்டான். அவன்சலக்கைப் பின் தொடர்ந்து சென்று அவன் மேல்ப் பாய்ந்து, கட்டிஇழுத்துக் கொண்டு போய் திருமதி. மக்கின்ரயர் முன் நிறுத்தி நடந்த எல்லாவற்றையும் நடித்தும் காட்டினான். அப்போது நீகிரோ முணுமுணுப்புடன் குறைபட்டுக்கொண்டான்.

தொடரும்....

---

# தாலாட்டுப்பாடல்கள்



வல்வை.ந.அனந்தராஜ்

அப்பொழுது பின்வரும் தாலாட்டுப் பாடல்கள் பாடப் படுகின்றன.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
சீரார் பசுங்கிளியே தெவிட்டாத செந்தேனே
பேரார் குலக் கொழுந்தே பெருமானே ஆராரோ
பச்சை இலுப்பை வெட்டி பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலை தொடுகயிறு முத்தாலே

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ
ஆரடிச்சு நீயழுதாய் கண்மணியே அஞ்சாதே
அம்மான் அடிச்சாரோ ஆமணக்கம் கம்பு வெட்டி
பேத்தி அடிச்சாளோ பிரப்பந் தடியாலே

ஆச்சி அடிச்சாளோ ஆவரசந் தண்டு
வெட்டி உமக்கு,
முத்தளப்பான் செட்டி, முடிதரிப்பான்
ஆசாரி
பட்டு விற்பான் செட்டி, பட்டை
விலை மதிப்பான் - பட்டாணி

பூவாலை பாயிழைப்போம்,
பொன்னாலை காப்பிடுவோம்
சாவா மருந்தும் தந்திடுவோம்
கண்மணியே - கண்ணுறங்கு

இவ்வாறு தமது ஊரின் பெருமையுடன் தாம் நினைத் தவாறு சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி பாடலைப் பாடுவார்கள்.

பின்வரும் தாலாட்டுப் பாடல் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் வழங்கி வருகின்ற போதும், ஈழத்தின் ஏனைய பிரதேசங்களிலும் பாடப்பட்டு வருவதைக் காணலாம்.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சு நீயழுதாய் அரிய கண்ணால் நீர் வழிய
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி
வைப்போம்

மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே
பாட்டி அடிச்சாளோ பால் வார்க்குங் கையாலே
ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டும் கையாலே
அண்ணா அடிச்சானோ அரை ஞாண் கயிற்றாலே
ஆண்பனையின் நுங்கே அணில், கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்

இவ்வாறான பாடல்கள் வெறும் ஓசை நயத்திற்காக மட்டும் பாடப்படுபவையாகவே இருக்கின்றன. ஆனால் வடக்கின் சில பிரதேசங்களில் ஓசை நயத்துடன் சிந்தனையைத் தூண்டும் வகையில் கருத்தாழம் மிக்க பல தாலாட்டுப் பாடல்களும் வழக்கில் இருந்திருக்கின்றன.

இத்தகைய பாடல்களில் உவமை, உருவகம் உயர்வு நவிற்சி என்பவற்றுடன் தம் குடும்பப் பெருமையையும், குலவீரத்தையும், குடும்பத் தலைவர்களின் சிறப்புக்களையும், ஊர்ப் பெருமைகளையும் புகழ்ந்துரைக்கும் வகையிலான பொருள் அமைதி காணப்படும். இயல்பான தூயகிராமிய வழக்கில் இத்தகைய சிந்தனையைத் தூண்டும் மிக அற்புதமான பாடல்கள் வழக்கில் இருந்தமை, அன்றைய பெண்களின் மொழி வளத்தையும், சொல்லாட்சியையும் எடுத்துக் காட்டுகின்றது.

தாலாட்டு பாடலில், தாய் ஒருத்தி தன் மனதில் தோன்றும் எண்ணங்களையெல்லாம் கருப்பொருளாக்கி, எளிமையான இசையுடன் பாடும் பொழுது, நெஞ்சுருக வைக்கும்.

வடமராட்சியின் தும்பளைப் பிரதேசத்தில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களில் ஒன்று இது,

ஆரார் திருமகளோ பிள்ளை நீ
அருமையாய் வந்தீரோ
ஓராறு செல்வியோ பிள்ளை நீ
உலகாள வந்தீரோ
ஈராறு செல்வியோ நீ
இருந்தாள வந்தீரோ
சொக்கர் இது மாளிகைக்கு
தூண்டாமணி விளக்கோ
இந்திரன் மகளோ பிள்ளை நீ
இராசாவின் புத்திரியோ
கல்விக் கணக்கியோ பிள்ளை நீ
கணக் கெழுதும் மந்திரியோ

இத்தகைய தாலாட்டுப் பாடலில் சொற்சுவையுடன், பொருட்சுவையும் மிகுந்திருப்பதையும் காணலாம். இப்பாடல் அடிகள், வளர்கின்ற குழந்தைகளின் மனதில் உயர்ந்த இலட்சியங்களைப் புகுத்துவதாக அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் வழக்கில் இருந்த ஒரு தாலாட்டுப் பாடலில், ஒரு தாய் தன் மகன் மீது பாடும் பின்வரும் பாடலில் ஓசை நயமும், கருத்தாழமும் பொதித்துள்ளமையைக் காணலாம்.

அஞ்சு தலை நாகம்
அடை கிடக்கும் தாழையிலே
அஞ்சாமல் பூ வெடுக்கும்
அருச்சுணனார் உங்கள் ஐயா
பத்துக் தலை நாகம் பள்ளி கொள்ளும் தாழையிலே
பாராமல் பூவெடுக்கும்
பார்த்திபனார் உங்கள் ஐயா

இப்பாடலின் ஊடாக தாய், தனது மகனின், தந்தையின் வீரத்தையும், துணிவையும் அதாவது மறைமுகமாகத் தனது கணவனின் பெருமையையும் எடுத்துக் கூறுவதாகவே அமைந்துள்ளது.

நாகபாம்பு அடைகிடக்கும் தாழைமரத்தில் இருந்து அஞ்சாமல் பூப்பறிக்கும் தனது கணவனின் வீரத்தை அவள், தன் மகனுக்கும் ஊட்டுவதாகவே இப்பாடல் அமைந்துள்ளது.

சாதாரணமாக கோழி அடைகிடக்கும் பொழுது எவராவது அருகில் சென்றாலே, தன் இறக்கைகளைச் சிலிர்த்துக் கொண்டு கேருவதன் மூலம் தனது கோபத்தைக் காட்டுகின்றது. அந்தவகையில் ஐந்து தலை நாகம் தாழை மரத்தின் தாள்களுகிடையில் அடைகிடக்கும் பொழுது அதன் மூர்க்கத்தனம் எப்படி இருக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை

அப்படி ஐந்து தலை நாகங்களும், பத்துத் தலை நாகங்களும் குடியிருக்கும் தாழை மரத்தில் இருந்து பூ எடுத்து வருபவர்தான் உனது தந்தை என்று பெருமையுடன் பாடப்படும் இந்தத் தாலாட்டுப் பாடல் ஊடாக, தனது கணவனின் வீரத்தை மட்டுமல்லாது, தன் மகனுக்கும் கூட அந்த வீரத்தையும், துணிவையும் ஊட்டுவதாக இப் பாடல் அமைந்துள்ளது.

வடபுல யாழ்ப்பாணக் கிராமங்களில் பாலூட்டும் பொழுதும், தாலாட்டும் பொழுதும், பாசத்தையும், வீரத்தையும் ஊட்டும் மரபு அன்று. இத்தகைய நாட்டாரிலக்கியங்களினூடாகப் புலப்படுத்தப்பட்டிருந்தன.

ஒரு பெண்ணுக்கு அழகும், பெருமையும், கீர்த்தியும் தருவது அவளால் பெற்றெடுக்கப்பட்ட குழந்தையே என்பதை, மகாகவி பாரதியார் பின்வரும் பாடல் அடிகளினூடாக மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

"மார்பில் அணிவதற்கோர்-உனைப்போல்
வைரமணிகள் உண்டோ?"

தொடரும்....



## சிறுகதை

# காத்திருப்பு

**யோ. கர்ணன்**

**நிலவுகாலித்து** வெகு நேரமாகிவிட்டது. தொலைவில் எங்கோ, விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்த நாயொன்றின் ஊளையொலியைத் தவிர ஊர் நிசப்தமாய் இருந்தது.

தெருவிளக்குகளைத் தவிர,மற்ற அனைத்து விளக்குகளையும் அணைத்து விட்டு, வீடுகளிற்குள் மனிதர்கள் அடங்கி விட்டார்கள். பத்தரை மணியிருக்குமா? இருக்கலாம்.

ஊரின் வடக்கு மூலையிலுள்ள அந்தக்குடிலில் மட்டும் ஓய்விருக்க வில்லை. இரவு வெகு நேரமாகியும் அந்தக் குடிலினுள் இரண்டு உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

ஊரைப் பிளந்து போகும் பிரதான தெருவிலிருந்து வலது பக்கமாகப் பிரிந்து போகின்றதே ஒரு தெரு, அது தான் வெள்ளத் தெரு, பெயர்தான் தெருவே தவிர,அது தனித்தெருவல்ல, கோடை காலங்களில் தெருவாகவும், மழை காலங்களில் வெள்ள நீர் ஓடி வயலுடன் சேரும் வழியாகவும் பயன்படுகின்றது. அதனால் தான் அதனை வெள்ளத்தெரு என்றழைக்கின்றனர்.

அந்தத் தெருவின் இடது கைப் பக்கமாக இருக்கின்றதே ஒரு வைரவர் கோயில், அதற்கப்பால் பாருங்கள்.... நிரை நிரையாக வளர்ந்திருக்கும் பூவரச மரங்களிற்கடுத்ததாக ஒரு பெரிய புளிய மரம்நிற்கின்றது. அதன் கீழ்த்தான் அந்தக் குடிசை இருக்கின்றது. குடிசையின் மீது வலையைப் போர்த்தியது போலத் தோற்றம் காட்டியது - அவ்வளவு பொத்தல்கள். அப்பொத்தல்கள் வழியே நிலவொளி குடிசையை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. அக்குடிசையினுள்தான் இரண்டு ஊசலாடும் உயிர்கள்!

மூர்க்கத்தனமாக வீசும் காற்றிடம் தன் உயிரைப் பறி கொடுத்து விடக்கூடாது என்பதற்காகப் போராடியபடி எரியும் கை விளக்கு ஒன்று, காலப் புயலில் சிக்கித்தன் உயிர் போவதற்குள் மகனைக்காண ஏங்கும் தாயான, அக்குடிசைச் சொந்தக் காரக் கிழவி மற்றொருத்தி.

குடிசைக்குள்ளிருக்கும் மண் சுவருடன் சாய்ந்திருந்தபடி, நிலவொளியில் நனைந்திருக்கும் படலையடியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இடையிடையே தன் பூஞ்சல்க் கண்ணைச் சுருக்கியும்.... இன்னும் சில வேளைகளில் முகத்தைச் சற்று முன்னகர்த்தி..... கண்களின் மேல் கையை வைத்துப்பார்த்துக் கொண்டிருந்தாள்.அவளது கண்களில் எல்லையற்ற துயர்விரிந்திருந்தது.


இடையிடையில் எதையோ முணுமுணுத்துக் கொண்டாள். அப்போது அவளது முகம் விபரிக்க முடியாத உணர்ச்சிக் கலவைகளின் விளைநிலமாகும். உடனே சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொள்வாள். பின்னர் ஏதோ நினைத்தவளாகப் பெரிதாகத் திட்டுவாள். அவளது திட்டுதலில் “குறுக்கால போவார்... ஏன் இஞ்ச வந்தாங்கள். உங்கட நாட்டில இருக்கிறதுதானே” என்ற வார்த்தைகளில் ஏதாவது ஒன்றிற்கோ, அல்லது அனைத்திற்குமோ இடமிருக்கும்.

இரவில் மட்டுமல்ல, பகலிலும் அவளது நிலை இதுதான். இதுதான் அவளது நாளாந்தக் கடமை. நேரகாலமில்லாது சுவருடன் குந்தியிருந்து கொண்டு படலையடியையே பார்த்துக் கொண்டிருப்பாள். இதற்கடுத்த தாகத்தான் சமையல் சாப்பாடெல்லாம். எப்போதாவது சமைப்பாள் சாப்பிடுவாள்.

ஒரு கோப்பை உணவில் அடங்கிவிடும் இந்த வயிற்றை விட, பத்து மாதம் சுமந்து பெற்ற மகனிடம் தான் அவளது உயிர் தங்கியுள்ளது. எழுபது வயதாகின்ற இன்றைய நாளிலும், மகனைக் கண்டுவிடவேண்டுமென்ற துடிப்புத்தான் அவளுள் நிறைந்திருக்கின்றது.

அவளுள் அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்றிருந்தது. எப்படியும் மகன் வந்துவிடுவான் என்று. எந்தப்பாதாளச் சிறைக்குள்ளிருப்பினும்.... ஒளி கூட நுழைய முடியாத இடமாயிருப்பினும், தன்னிடம் வந்து சேர்ந்து விடுவான் எனத் தீவிரமாக நம்பிக்கொண்டிருந்தாள்.அந்த நம்பிக்கை தான் பறக்கத் துடிக்கும் உயிர்ப் பறவையை அவளுள் இழுத்துப் பிடித்து வைத்திருந்தது.

எப்போதும் போலவே குடிசைக் குள்ளிருந்தபடி வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒட்டி உலர்ந்த கன்னங்கள்.... வெறுமையும் ஏக்கமும் கலந்த விழிகள்.... அந்த விழிகள் எதையோ தேடிக்கொண்டிருந்தன. பாழும் இருள்நிலவொளியை எங்கும் சிந்த விடுகின்றதா? படலையடியில் வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் நிழல், சூனியத் திரையாக விரிந்திருந்தது.ஒளி வற்றிய விழிகளினூடே அந்தக்கிழத்தாய் மனம் சூனிய வெளியை வெறித்துக்கொண்டிருந்தது.





**அவள் மீண்டும் முகாம்களிற்கான 'யாத்திரையைத்' தொடங்கினாள். பலரது காலைப் பிடித்தாள். பலன் தான் கிட்டவில்லை. இம்முறை அதிஸ்டக்காற்றும் வீசவில்லை. ஊரெல்லாம் தேடி அவள் ஓய்ந்து விட்டாள். அருகிலிருக்கும் வைரவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, அவரைக் 'குளிர்விக்கும்' வேலைகளில் — விரதம் வழிபாடுகளில் இறங்கியிருந்தாள்.**

வெறுமை விரவி மனம் மரத்துப் போயிருந்தது. உயிர் மூலம் கலங்கும் சோகம், அடி இதயத்திலிருந்து நீளமான பெரு மூச்சுகளாக வெளியேறிக் கொண்டிருந்தன.

இந்தப் பொல்லாப்புமிகு உலகை நினைக்க அவளுக்கு எரிச்சல்... கோபங்களை மீறிய ஆற்றாமை கலந்த இழப்புணர்ச்சி தோன்றும். செத்துப் போய்விடலாம் போலவும் தோன்றும்.

இப்போதல்ல, முப்பத்தாறு வருடங்களின் முன்னேயே செத்துப்போய்விட வேண்டும் என நினைத்து, முடிவை மாற்றிக் கொண்டுவிட்டாள். அப்போது வாழ வேண்டுமென முடிவெடுக்கக்காரணமாயிருந்த மகனே, இப்போது நினைவுகளால்க் கொல்பவனாகிவிட்டான். அவளுக்குக் கணவனாக வாய்த்த அந்த அயோக்கியப்பயல் இரண்டாம் தாரமாக இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும் போது முதன் முதலாக செத்துப்போகவேண்டுமென்ற உணர்வு உந்த, வீட்டை விட்டு வெளியேறியவள். ஆயினும் பின் முடிவை மாற்றிக்கொண்டு விட்டாள். அப்போது அவளது மகன் இரண்டு மாதமாக வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தான்.

அன்று முடிவை மாற்றிவிட்டாள். அவனை வயிற்றிலும்.... தனித்து நின்று அவனை ஆளாக்க வேண்டுமென்ற வெறியை மனதிலும் ஏந்திக்கொண்டு வாழ்வுடன் போராடப்புறப்பட்டாள்.

முப்பத்தாறு வருடங்களின் முந்தைய கதையது. அன்று அமைத்த குடிலிது. இந்தக் குடிலிலிருந்துதான் அருவி வெட்டுக்கும்..... புல்லுப் பிடுங்கவும் சென்று மகனை வளர்த்தாள். இதற்காக அவள் கொடுத்த விலைகள் அதிகம். பட்ட உடல்..உள வதைகள்தான் இன்றும் கண்முன் நிழலாடுகின்றது. அப்படி வளர்த்த மகனைப் பிரிந்திருக்க முடியுமா?

எல்லாப் பிள்ளைகளைப் போலவும் தன் மகனை அவள் படிக்கவைக்கவில்லைத்தான். தன்னால் இயன்றதைச் செய்திருக்கிறாள் தானே. ஏழாவது வகுப்பு வரையிலும் படிக்க வைப்பது என்பது சாதாரண காரியமா?

அதன் பின் அவன் உழைக்கத் தொடங்கிவிட்டான். மிகஇளம் வயதிலேயே, தெரிந்தவர் ஒருவரின் கடையில் உதவியாளனாகப் போய் விட்டான்.மற்றப் பிள்ளைகள் வெள்ளைச் சிட்டுக்களாகப் பள்ளி செல்கையில், தன் மகன் மட்டும் கடைக்குப் போவதைக்காண, அவளுள் துயரக்கல் மனதை அழுத்தும்.

நிகழ்காலப் பாதை முட்கள் நிறைந்திருப்பினும், எதிர்காலப் பாதையும் அப்படியிருக்குமென அவள் நினைக்கவில்லை. மகன் வளர்ந்து குடும்ப நிலை மாற்றி.... ஊருக்குள் தலை நிமிர்ந்து வாழலாம் என்றுதான் எண்ணியிருந்தாள்.

அந்த வாழ்வேன் அழிந்து போனது? உயிர் கொடுத்து.... ஊன் கொடுத்து உருவாக்கிய பிள்ளையைப்பிரிந்த பின் வாழ்ந்தென்ன பயன்? இத்தனை காலமும் பட்ட கஸ்ரம் எல்லாம் கானல் நீராகப் போவதைக் காணக்காண அவளுள் அழுகை முட்டிக் கொண்டுவரும்.

இராணுவம் வந்த புதிதில் ஒரு முறை சுற்றி வளைப்பில் அவனும் அகப்பட்டுக் கொண்டான். கைது செய்யப்பட்டவர்களுள் அவனும் அடக்கம். அவள் துடித்துப் போய் விட்டாள். தள்ளாத வயதினிலும் உள்ள முகாம் முழுவதும் தேடி அலைந்து..... அதிகாரிகளின் காலைப் பிடித்தும் பலன் கிடைக்கவில்லை. அந்த முகாமில்.... இந்த முகாமில் என அவர்கள் சொல்வதைக் கேட்டு ஊரெல்லாம் அலைந்ததுதான் மிச்சம்.

அப்போது அதிஸ்டம் இருந்திருக்கின்றது. இரண்டு வாரத்தின் பின் விடுதலையாகி வந்துவிட்டான். விசாரணையின் 'கவனிப்பில்' சற்று நொந்து போயிருந்தான். அவளுக்குத் தாங்க முடியாத சந்தோசம்- இவ்வளவுடன் என்றாலும் வந்தானே என.

பேச்சுவாக்கில் யாரோ சொன்ன தகவலொன்று அவளுக்கு ஆறுதலாயிருந்தது. “ஒருக்கால்ப் பிடிச்ச ஆட்களைத் திரும்பவும் பிடிக்க மாட்டாங்களாம்.” இனிமேல் பிரச்சினை இல்லையென நின்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

மனிதர்கள் நினைத்தபடி எங்காவது காரியங்கள் நிகழ்ந்ததுண்டா? முதலாம் முறை கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களின் பின் இப்போதிருந்து ஆறு வருடங்களின் முன்- மீண்டுமொரு முறை கைது செய்யப்பட்டான்.

அவள் மீண்டும் முகாம்களிற்கான 'யாத்திரையைத்' தொடங்கினாள். பலரது காலைப் பிடித்தாள். பலன் தான் கிட்டவில்லை. இம்முறை அதிஸ்டக்காற்றும் வீசவில்லை. ஊரெல்லாம் தேடி அவள் ஓய்ந்து விட்டாள். அருகிலிருக்கும் வைரவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, அவரைக் 'குளிர்விக்கும்' வேலைகளில்- விரதம் வழிபாடுகளில் இறங்கியிருந்தாள்.

இடையில் பிள்ளைகளைப் பறிகொடுத்தோர் நகரில் மறியல் செய்வதை அறிந்து, அதிலும் கலந்து கொண்டு விட்டாள்.

எதுவுமே நடக்கவில்லை, பெரும் யுகயுகாந்திரங்களாக நீண்ட நிமிடங்கள் பெருகி ஆறு வருடங்களைக் கடந்து விட்டன. ஆயினும் அவளுள் ஒரு நம்பிக்கைச் சுடர் எரிந்து கொண்டிருக்கின்றது. அணையக் காத்திருக்கும் அவளது உயிரின் பிடிமானமும் அதுதான். 'எப்பிடியும் என்ர ராசா வந்திடுவான்...'

அந்த நம்பிக்கை தான் அவளைத் தினமும் படலையடியைப் பார்க்க வைத்துக் கொண்டிருந்தது. இரவிலும் வெகு நேரம் வரை தூக்கமில்லாமல் படலையடியையே வெறித்துக் கொண்டிருப்பாள்.

ஆறு வருடங்களாக அட்சரம் பிசகாது நிகழும் நிகழ்விது. சிந்தனையில் ஆழ்ந்திருந்தவள் வெளியே ஏதோ சத்தம் கேட்கவே திடுக்குற்றுச் சுயநினைவு வரப் பெற்றவளாக வாயிலைப் பார்த்தாள். எதுவுமே தெரியவில்லை. அருகிலிருந்த கை விளக்கைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தபடி பூஞ்சல்க் கண்ணால் உற்றுப் பார்த்தாள். எதுவும் தெரியவில்லை.

கையைத்தரையில் ஊன்றி எழுந்தாள். தள்ளாடித் தள்ளாடிப் படலையடியை அடைந்தாள். “எட...தம்பி ராசா...” ஆவலாகக் கூப்பிட்டுப் பார்த்தாள்-நிசப்தம் தான் நிலவியது.

படலையைத் திறந்து பார்த்தாள்- அநாதரவாக இப்பகுதியில் சுற்றித் திரியும் பெட்டை நாய் வாலாட்டியபடி நின்றது. ஏமாற்றம் கலந்த பெருமூச்சு அவளுள்ளிருந்து வெளிப்பட்டது.

திரும்பிக் குடிசைக்கு நடந்தாள். நாயும் பின் தொடர்ந்தது. குடிசை வாயிலில் சுருண்டு கொண்டது. குடிசைக்குள் நுழைந்து பாயில் இருந்தாள். தொலைவில், நேரத்தைக் குறிக்கும் மணி ஒலித்தது. ஒன்று.... இரண்டு என எண்ணிக் கொண்டாள்-மணி பன்னிரண்டு.

விளக்கை அணைத்து விட்டு பாயில் சரிந்தாள். சற்று நேரமாவது தூங்கினால்த் தானே நாளையும் மகனை எதிர்பார்த்திருக்க முடியும்!

# கவிஞனும் வறுமையும்

**வறுமையின்** கால்களில் விழுந்து நான் வணங்க வேண்டும்.

என்னைக் கவிஞனாக்கிய அந்த மேதைக்கு நான் ஒவ்வொரு நிமிடமும் கடமைப் பட்டிருக்கிறேன்.

பசியைப்பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?

ஒரு தடவை பசிக்கிறது என்றால் சாப்பிடு வதற்கு சோம்பலாக இருக்கிறது என்று பொருள்.

இரண்டு தடவைகள் பசியெடுத்தால் சாப்பிட இன்னும் நேரம் கிடைக்கவில்லை என்று பொருள்.

மூன்றாவது தடவையும் பசித்தால் அதற்கு வறுமை என்று பொருள்.

நான் மூன்று தடவைகளும் பசியால் மகிழ்ச்சியடையும் வர்க்கத்தைச் சேர்ந்தவன்.

பசி,பசி என்று மக்கள் துன்பத்தில் தவிப் பதாக இங்குள்ள அறிஞர்களெல்லாம் பேசிக் கொள்வதை நான் அறிவேன்.

ஆனால்....

பசிக்கும் போது இருக்கும் மகிழ்ச்சியை சாப்பிடும் போது என்னால் அனுபவிக்க முடிய வில்லை...

ஆசையால் அவதிப்படும் போது ஏற்படும் இன்பம், ஆசையை அனுபவிக்கும் போது கிடைப்பதில்லை.

பசி என்பது பேரின்பம் என்றே நான் கூறுவேன்.

எப்பொழுதெல்லாம் பசி என் தொண் டைக்கு வந்து விடுகிறதோ அப்பொழுதெல்லாம் பேனா என் விரல்களுக்கு வந்து விடுகிறது.

உலகில் இரண்டு தத்துவ ஞானிகள் இருக்கிறார்கள் என்பது என்னுடைய முடிந்த முடி வாகும்.

ஒருவனை ஏழையென்றும் அடுத்தவனை நோயாளி என்றும் அழைக்கலாம்.

இந்த இரண்டு வகைகளில் எந்த வகையை எடுத்துக் கொண்டாலும் சரி நான் உலகின் மாபெரும் தத்துவஞானி என்பதை நீங் கள் ஒப்புக் கொள்வீர்கள்.

கண்ட கண்ட பேர்வழிகளெல்லாம் இப் போது தத்துவம் பற்றிப் பேசுவதாக வதந்தி,

பளபளப்பான காரில் வந்து இறங்கி மேடையில் மளமளவென்று தத்துவம் பேசி விட்டுப் போகும் இப் பெரிய மனிதர்களைநான் பார்த்திருக்கிறேன்.

இது என்ன கொடுமை!

சட்டையின் இரண்டு பைகளையும் காசுத் தாள்களால் நிரப்பிக் கொண்டிருப்பவனுக்கும் தத்துவத்துக்கும் என்ன சம்பந்தம்?

கண்ணீர் விடாத மனிதனுக்குத் தத்து வத்தைப் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

அழுகையின் குழந்தையான என்னிடம் தத்துவத்தைப் பற்றிப் பேசுங்கள்.

வறுமை என் கண்களிலிருந்து நீரை இறைக்கும் போது அந்த நீரோட்டத்தை மலை யின் அருவியோடு ஒப்பிட்டு மகிழும் என்னி டமல்லவா நீங்கள் தத்துவம் பேசவரவேண்டும்?

நான் துயரத்தால் அழுகிறேன் என்பது உண்மைதான்.

ஆனால் அதே நேரத்தில்... அழுவதால் தான் மகிழ்ச்சியடைகிறேன் என்பதையும் புரிந்து கொள்வீர்களாக!

அழுவது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக் கிறது தெரியுமா?

உடலின் எந்தப் பகுதியில் இருந்து நீர் வெளிப்பட்டாலும் அப்போது ஒரு மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்பது இறைவனின் நியதி.

தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது எத்தனை மகிழ்சி அடைகிறாள். புண்ணில் இருந்து சீழ் வெளியே வரும் போது உங்களுக்குக் கிளு கிளுப்பாக இல்லையா?

வறுமையில் கிடந்த நான் அழுது வடிக்கும் ஒவ்வொரு நிமிடமும் இன்பம் என்ற ஒன்றை நான் முழுமையாக அனுபவிக்கிறேன்.

துன்பங்களோடு நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே தவிர அந்தத் துன்பங் களுக்காக நான் என்றுமே கவலைப்பட்டதில்லை.

இந்த உலகத்தில் என்னை அக்கறை யோடு நினைத்துப் பார்ப்பவர்கள் நாலைந்து பேர்களே.

நான் ஒரு நாள் திடீரென்று தும்மிய போது உன்னை உன் தாய் நினைத் துப் பார்க்கிறாள் என்று பக்கத்தில் இருந்த நண்பர் கள் சொன் னார்கள்.



அவர்களில் ஒருவன் எழுந் தான்.

இல்லை - பாசத்தின் வடி வமாக இருக் கும் உன் அண்ணன் இருக்கிறாரல் லவா? அவர் தான் உன்னை நினைத்திருப்பார் என்று கூறி விட்டு உட் கார்ந்தான்.

மீண்டும் ஒரு குரல் கேட்டது.

எல்லோரும் அவனுடைய காதலியை மறந்து விட்டீர்களே.... அவள் மட்டும் ஏன் நினைத்திருக்கக்கூடாது?

பைத்தியக்காரர்களின் இந்த மோதலைப் பார்த்து நான் சிரித்தேன்.

என்னுடைய ஒரு தும்மலுக்கும் இவர்கள் ஆயிரம் ஆராய்ச்சி நடத்துகிறார்களே.... அவர் களைப் பார்த்து நான் சொன்னேன்.

என் அன்பு நண்பர்களே!

இந்த உலகத்தில் என்னை அடிக்கடி நினைத்துப் பார்ப்பவன் ஒருவன் இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிப்பதில் நீங்கள் தோற்றுப் போனீர்கள்.

நான் சொன்ன பின்பாவது தெரிந்து கொள்ளுங்கள் -- அவன் பெயர் கடன்காரன். நண்பர்கள் சிரித்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் இப்பொழுது நான் விளையாட்டுப் பொருளாகிவிட்டேன்.

என்னுடைய வறுமை அவர்களையும் சிரி க்க வைக்கிறது என்பது எனக்குப் பெருமையே!

என் துன்பங்கள் உலகத்தை வாழ்விப் பதாக!

காய்ந்து போன செடிகளை எருவாக இட்டு மலர்ந்து நிற்கும் பூந்தோட்டத்தை வளர்ப் பதுபோலவே-

புழுத்துப் போன என்றுடைய வாழ்க்கை யின் மேல் இந்தப் பூமிவளர்ச்சியடையுமானால் உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவன் என்பேன்.

கடவுள் ஏன் ஏழ்மையைப் படைத்தான் என்பது இப்பொழுது எனக்குப் புரிகிறது. வறுமை இல்லை என்றால் இந்த உலகம் நாறிப்போயிருக்கும்.

வேட்டியும் சேலையும் கட்டி வேளை க்கு வேளை வயிற்றை நிரப்பிக் கொண்டி ருப்பவர்கள் தான் உலகம் என்றால் இந்த உலகத்துக்கு என்ன மதிப்பு இருக்கிறது?

தாயினுடைய வயிற்றில் உருவாகி....

தங்களுடைய வயிற்றைப் பார்த்துக் கொண்டே வாழ்ந்து... முடிவில் தரையினுடைய வயிற்றிலே சமாதியாகிவிடும் இந்த வயிற்றுப் பிறவிகளில் இருந்து என்னை அப்புறப்படுத்து வதற்காகவே இறைவன் ஏழ்மை என்ற வேலியை எழுப்பியிருக்கிறான்.

வேலிக்கு இந்தப் புறத்திலே தான் உலகம் இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னுடைய உலகத்தில் நான் ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டி ருக்கி றேன் என்பது உண்மையே.

ஆனால்...

வாழும் போது செத் துக் கொண்டிருப்பவர்கள் செத்த பின்பு வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல் லவா?



**உணர்ச்சிக்கவிஞர்**
**காசிஆனந்தன்**



# நிகழ்காலத்தின் புராதனப்பட்டினம்

இரையும் கடல்
கரைநீளம் கடல் தழுவிய
ஈரச் சுவடு
கடலில் இறங்கியும்
கரையில் ஏறியும்
ஒரு வாழ்வைத் தேடியலையும் காலடிகள்.

ஒன்றிரண்டு சிறுவர்
தூரந்தொலைவில் நின்று விளையாடுகிறார்.

வெயில் –
கடலின் மேலும்
கரையின் மேலும்
நிற்க முடியாச் சூரியன்
கால்கடுக்கத் தவிக்கிறான்.
நிழலுக்கொரு மரமில்லை யெங்கும்
மொட்டைப் பனைகளை வைத்துக் கொண்டு
விம்முகிறது வானம்.

வடக்கே
எரிந்த பிறகும்
குண்டுகள் வீழ்ந்து சிதைந்த பின்னும்
கடலில் மறையவும் முடியாமல்
கரையேறவும் முடியாமல்
அலைகள் சீண்ட
அழிவின் சாட்சியாய் இரண்டு கப்பல்கள்.

கூரையில்லாத தேவாலயத்தில்
குருவானவரும் இல்லை
பூசைக்குப் போகாமல்
ஆறேழு ஞாயிறுகள் போனதென்று
அலோசியஸ் சொல்கிறான்.

இன்னும்
விதானைக ந்தோரில் கூட்டமில்லை
எந்தச் சந்தியிலும் ஆட்களில்லை

"குமார் கூல்பார்" திறக்கவில்லை
புதையுண்ட நகரம்
மீண்டிருப்பது போல்
அழிவின் சிதிலங்கள்
கரை நீளம்
கடலோரம்.
நிராகரிக்கப்பட்ட பிரார்த்தனைகளின்
கீழ் நகர்க்கப்பட்ட வீடுகளின் மிச்சம்
படையினர் வரும் போது
அழிவோடுதான் வருகிறார்கள்
போகும் போதும் எஞ்சியதையும் அழித்து விட்டே போகிறார்கள்.
கனவுகளெல்லாம் பொசுங்கிய துயரில்
களைப்படைந்த முல்லைத் தீவுப் பட்டினம்.
எல்லா அழகையும்
எல்லா மகிழ்வையும்
விழுங்கியது போல்
இன்னும் தூர்ந்து போகாதிருக்கின்றன
பதுங்ககழிகள்.

அழிந்த நகரின்
அழியாக் காட்சியில்
அலறுகிறது நம் இதயம்.
செபஸ்[illegible] மூன்று பிள்ளைகளில்லை
இரண்டைக் கடலில்
நேவி கொண்டு போனது
ஒன்று
தோராவில் துமிலுமில்லத்தில்.
இப்போதவனிடம் வலைகளுமில்லை
வள்ளமுமில்லை
ஒரு காலையும் மிதி வெடி பறித்து விட்டது.

சின்னாத்தாங்காடு
கள்ளப்பாடு
சிலாவத்தை
வண்ணாங்குளம்
உண்ணாப்பிலவு
எல்லாம் காடெழுந்து வாழ்வை மூடிற்று.
நம் மனிதர் கனவெல்லாம்
தீவிழந்த சாம்பலின் குவியல், குவியல்.

வட்டுவாகல் பாலத்தில்
வீச்சு வலைக்காரர் இப்போது தான் வந்திருக்கிறார்.
தொலைவில்
கடலின் நடுவிலிருந்து குழந்தைச் சூரியன்
எழுந்துவரக்
கண்விழிக்கிறாள் முல்லைத்தாய்
கடல் மடியில் நிற்கிறார் கடற்புலிகள்
கரையிலிருந்து கடலேறுகின்றன
எங்களின் படகுகள்.
இனியும்
கடலோடிக் கடலோடிக் கழியுமெங்கள் வாழ்வு
கரை நீளம் அலை முகத்தில் காத்திருக்கும் உறவுகள்

**கருணாகரன்**



# இளையநாதம்

## நன்மை செய்ய உத்தரவு

**மங்களபுரி** அரசன் மிகவும் பொல்லாதவன். நிறைய வரிகள் விதித்து மக்களைச் சுரண்டினான். அரசாங்கக்கருவூலம் நிரம்பி வழிந்தது. ஆனாலும் மக்களின் நலனை முன்னிட்டு மன்னன் எந்தச் செலவும் செய்யவில்லை.


அரசனுக்கு நோய் கண்டது. எந்த வைத்தியமும் மருந்தும் பயனில்லாமல் போயிற்று. வெளியூரிலிருந்து பெரிய பெரிய மருத்துவர்களும் மந்திர வாதிகளும் வரவழைக்கப்பட்டனர். மன்னனின் உடல் நலம் தேற விசேட பிரார்த்தனைகள் கோயில் களில் நடத்தப்பட்டன. என்ன நடந்த போதும் அரசனின் நோய் நீங்கியபாடில்லை.

அந்த நேரத்தில் அரண்மனைக்கு ஒரு மகான் வந்தார். அரசனைப் பரிசோதித்த அவர் "மன்னா உன்நோய் தீர ஓரேவழி தான் உண்டு. ஏழை எளியவர்களுக்கு, தானதர்மம் செய். அவர்கள் உன்னை வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்துக்களின் பயனாக உன்நோய் உடனடியாகத் தீரும் என்றார்."

அரசனும் மனம்மாறி மந்திரியை அழைத்து "அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஐம்பதுலட்சம் ரூபாய் எடுத்து ஏழை,எளிய மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள் என்றார். மந்திரி சுறு சுறுப்பானார். கருவூலத்திலிருந்து எடுத்த ஐம்பது லட்சத்தில் கால்பாகத்தை தன்னிடம் வைத்துக் கொண்டு மீதியை ஏழைகளுக்குப் பங்கிடச் சொன்னார். அமைச்சர் திவான் அதில் பாதித் தொகையை தனக்கு வைத்துக் கொண்டு மீதியை நீதியதிகாரியிடம் கொடுத்தார். அவரும் அதில் பாதியைத் தான் வைத்துக்கொண்டு மீதியை கீழ் அதிகாரியிடம் கொடுத்தார்."

அரசன் அனுமதித்த ஐம்பதுலட்சம் ரூபாயும் இப்படியாகப் பல கைகள் மாறி முடிவில் ஒரு ரூபாயாக இளைத்து கோயில் கணக்குப் பிள்ளையிடம் வந்து சேர்ந்தது. கோயில் கணக்குப் பிள்ளை பூசாரிகையில் எட்டணாவைக் கொடுத்து "ராஜா ஏழைகளுக்கு கொடுக்கக் கொடுத்த உதவிப்பணம். இதை நல்லவகையில் செலவு செய்யுங்கள் என்று உத்தரவிட்டார்.

பூசாரி அதிர்ந்துபோனார். மன்னனாகப்பட்டவன் எட்டணா தர்மம் செய்வது என்பது எவ்வளவு வெட்கக்கேடானது என்று எண்ணிய பூசாரி அதில் பாதியைத் தான் வைத்துக்கொண்டு மீதி நாலணாவுக்கு இரண்டு வாழைப் பழங்களை வாங்கி அம்மனுக்குப் படைத்து விட்டு பழங்களைத் தானே பிரசாதம் என்று எடுத்துச் சாப்பிட்டார்.அரசனின் நோய் தீரவில்லை "மகான் பொய்சொல்லி





விட்டார். ஐம்பது லட்சம்ரூபாய் தானதருமம் செய்ய உத்தரவிட்டும் என்னுடைய நோய் அகலவில்லையே." என்று அரசன் குமுறினான். "நிர்வாகம் நேரில்லாவிட்டால் எந்த நன்மையும் மக்களைச்சென்று அடையாது" என்றுசிரித்துக் கொண்டார் மகான்.

**இ. ஆனந்தன்**

## சாரணியமும் அதன் வளர்ச்சியும்

**சாரணியமானது** 1907ம் ஆண்டு பேடன் பவல் பிரபுவினால் தாபிக்கப்பட்டது. இந்த இயக்கமானது இன்று உலகலாவியரீதியில் செயற்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் 20 பேருடன் ஆரம்பமாகி இன்று பல்லாயிரக்கணக்கான சாரணியர்கள் இணைந்து வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கையை எடுத்துக் கொண்டால் சாரணியத்தின் சேவை மகத்தானது. பாடசாலை மாணவரை தம் மகத்தே கொண்ட இச் சாரணியமானது பல்வேறு வழிகளில் இன்று வளர்ச்சி கண்டுள்ளது. ஒவ்வொரு மாணவனையும் சமூகத்தில் பற்றுக் கொண்டவனாகவும் வாழ்வில் வீரம் உள்ளவனாகவும் சிந்தனை, சொல், செயலில் மிகவும் தூய்மையான வனாக்குவதற்கும் இவ் இயக்க மானது



மிகவும் சிறப்பாக உள்ளது. குறிப்பாக தமிழர் பிரதேசங்களை பொறுத்தவரையில் யாவரும் விரும்பும் வழியில் சாரணியம் செயற்படுகிறது. பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் சாதனை படைத்து வருகிறது. அன்று தொட்டு இன்று வரை சாரணியம் பல்வேறு வழிகளில் மாணவர்களை மாற்றி சமூகத்தில் நல்லவனாக மிளிர வைத்திருக்கிறது. ஏன் மிளிரவைத்துக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் உள்ள மாணவனுக்கும் சாரணிய மாண வனுக்கும் இடையில் பெரிதும் வித்தியாசம் காணப்படுகிறது. ஏனென்றால் சிறந்த பண்பு உள்ளவனாக உருவாக்கிறது. இன்றைய காலத்தில் குறிப்பாக போக்குவரத்து மிகுந்த காலத்தில் இதன் சேவை மிக முக்கியமானது.

**கு.குகன்,**
**மல்லாவி.**

## வாரம் ஒரு குறள்



இன்றைய உலகில் பொய்பேசுதல், கெட்ட வார்த்தைகளைப் பேசுதல் என்பன சர்வசாதாரண விடயங்களாகி விட்டன. பெற்றோர் பிள்ளைகளிடம் பேசுகின்றனர். பிள்ளைகள் பெற்றோரிடம் பேசுகின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களிடம் பேசுகின்றனர். மாணவர்கள் ஆசிரியரிடம் பேசுகின்றனர். குரு சிஷ்யனிடம் பேசுகின்றார். சிஷ்யன் குருவிடம் பேசுகின்றான். இப்படி எங்கு பார்த்தாலும் இந்த நிலையே காணப்படுகின்றது. இதன் அடிப்படை எதுவென்றால் ஒழுக்கம்பேணப்படாமையே ஆகும். அதிலிருந்து அநேகமானோர் தவறிவிட்ட தாலேயே இந்த நிலை பெருகியுள்ளது. இதனை வள்ளுவர் எப்படிச் சொன்னார் பாருங்கள்.

**"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய .**
**வழுக்கியும் வாயால் சொலல்"**

ஒழுக்கம் உடையவர் தவறியும் இத்தகைய வார்த்தைகளைப் பேசமாட்டார்கள் என்பதே இதன் கருத்தாகும்.

## புகழ் பெறுவாய்



பாப்பா நீயும் இங்கே வா
நற்பண்புகள் பலவும் பழகிக் கொள்
பார்ப்போர் உன்னை விரும்பிடவே
பணிவு கொண்டு பழகிடு-நீ

தாயும் பிதாவும் உன் தெய்வம்
தாழ்ந்து பாதம் பணிந்து நில்
பாயும் குரங்கு மனத்தினையே
பக்குவமாக அடங்கச் செய்,

ஏற்றத் தாழ்வு இல்லாமல்
எல்லோர் மனதையும் வென்றெடுப்பாய்
போற்றிப் பலரும் மதித்திடுவர்
பொன்நாப் புகழை எய்திடுவாய்.

**தேவராசா.ஆரணி**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

## குறுக்கெழுத்துப் போட்டி 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | |
| 07 | | | | | |
| | 14 | | 16 | | 18 |
| 19 | | 21 | | | |
| | | | 28 | | |
| | | | | | |

**இடமிருந்து வலம்**
01. திக்குறி.
07. சூரியன்.
14. இடையூறு.
19. இந்தியா..
28. திருடன் இறுதி எழுத்தை இழந்துள்ளான்.

**மேலிருந்து கீழ்**
01. செருக்கு.
02. கற்புடையவள்.
16. கோள் குழம்பியுள்ளது
18. பரம்பரை குழம்பி உள்ளது.
21. கிளி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.13 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
01. நெய்தல்.
10. குதிரை.
13. தம்பதி.
22. காத்த(ல்)
31. பாம்(பு)

**மேலிருந்து கீழ்**
01. நெத்தலி.
03. தடாகம்.
06. அரைக்கால்.
08. அதிசயம்.
10. பகுத்தல்.
23. தரணி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.13 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

மு. ரமேஷ்,
துணுக்காய் வீதி,
மாங்குளம்.

ஸ்ரீ.கிந்துஷா,
மாதகல்,
யாழ்ப்பாணம்.

த. அமைதிக்குமரன்,
இல,689,
மாணிக்கபுரம்,
விசுவமடு.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.13 இன் பரிசுக்குரியவர்**

**ம. முனாஸ்,**
**78/A பசார் வீதி,**
**வவுனியா.**

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.15
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## நகைச்சுவை




ஒருவர்:-இந்தத் திருமணவீட்டின் ஒலி பெருக்கியில் என்ன அறிவிக்கிறார்கள்?

மற்றவர்:- அது வந்து... சாப்பிடும் இடத்திலும், செருப்புக்கழற்றும் இடத்திலும் வீடியோக்கமராக்கள் பொருத்தியிருப்பதால் யாரும் இரண்டு தடவை சாப்பிடவோ செருப்புத் திருடவோ முடியாதாம்.

ஒருவர்:- அப்படிஎன்றால் நான் அடுத்த திருமணத்திற்குப் போக வேண்டியதுதான்.


**இ.ராஜ்குமார்**
**மு/புதுக்குடியிருப்பு.ம.வி.**

## பொது அறிவு

1) இரத்தத்தால் எழுதப்பட்ட மத நூல் எது?
"லங்காவீரன் சுத்ரா" என்ற நூல் ஆகும்.
2) உலகிலேயே மிகப்பெரிய மாளிகை எது?
வாடிகன் மாளிகை
3) 24 மணி நேரத்தில் எமது இதயம் எத்தனை தடவை துடிக்கிறது?
103689 தடவைகள்
4) குதிரை வலு யாரால் கண்டறியப்பட்டது?
ஜேம் வாற் என்பவரால்.
5) தென் ஆசியாவில் மன்னர் ஆட்சி நிலவுகின்ற நாடுகள் எவை?
நேபாளம், பூட்டான்.
6)திரவியங்களின் அடர்த்தியை அளக்கும் கருவி எது?
ஹட் ரோமானி
7) நோர்வேயின் தலைநகர் எது?
ஒஸ்லோ.
8) முதன் முதல் தீப்பெட்டி தயாரித்த நாடு எது?
சுவீடன்
9) அமெரிக்கக் கண்டம் கண்டறியப்பட்ட ஆண்டு எது?
1492 ஆம் ஆண்டு.

**ச. நளினி.**
**மு/புதுக்குடியிருப்பு.ம.வி.**

வாழ்க்கையின் இலட்சிய முடிவு, இன்பமல்ல ஒழுக்கமே. - மகாத்மா காந்தி






சிரித்திரன் சுந்தரின்

# மறக்க முடியாத மகுடியின் பதில்கள்



☐ அணுக்குண்டை யார் கண்டு பிடித்தது?
☐ இதயத்தை விவாகரத்து செய்து கொண்ட ஒரு மூளைக்குரியவன்.

☐ சோம்பலில் வளர்வது எது?
☐ வயதும், வட்டியும்.

☐ உலகின் துயர்களுக்கெல்லாம் காரணம் எது மகுடியாரே?
☐ சுருங்கிய இரப்பையும், வீங்கிய பணப்பையும்.

☐ சீதனம் வாங்கிக் கல்யாணம் பண்ணும் 'மச்சான்' பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
☐ அத்தான் அடைவு வைக்கப்படுகிறார்...

☐ வீரத்திற்கும், தந்திரத்திற்கும், பயத்திற்குமுள்ள வேறுபாடு என்ன மகுடியாரே?
☐ வீரம் அபாயத்தில் வாழும், தந்திரம் உபாயத்தில் வாழும், பயமோ 'அபயத்'தில் வாழும்...

☐ எவன் வாழ்க்கை வெற்றி? எவனது வாழ்க்கை தோல்வி?
☐ சூழ்நிலையின் கைதியாபவன் தோல்வி யடைகிறான். சூழ்நிலையைக் கைதியாக்குபவன் வெற்றியடைகிறான்.

☐ சர்வாதிகாரத்தால் அமைதியுண்டா?
☐ காரத்தில் எப்படி இனிப்பு இருக்க முடியும்?

☐ மகுடியாரே நீர் நீதிபதியாக இருந்தால்....!
☐ மனிதனைக் குற்றம் புரியத் தூண்டும் சமூகத்தை கூண்டிலேற்றி தண்டனை வழங்குவேன்...

☐ மகுடியாரே எல்லோரும் உங்களிடம் ஏன் கேள்விகளைக் கேட்கிறார்கள்?
☐ நான் அறிவாளியாகிய குற்றவாளியாகையால்...

☐ உலகில் வறுமை அதிகமாக இருப்பதற்கு காரணம்..?
☐ பாலைவனங்களும் பாலை மனங்களும் அதிகமாக இருப்பதே...

☐ எமது அரசியல் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும்?
☐ காலம் காலமாக சிங்கள அரசியல் நரிகள் தமிழ் அரசியல் நண்டுகளை நிலா உலாவிற்குக் கூட்டிக் கொண்டு போய் ஏப்பமிட்டது தான் எமது வரலாறு.

☐ உமக்கு இனிய சங்கீதம் எது?
☐ விலங்கு ஒடியும் ஓசை

☐ பெயரையோ புகழையோ விரும்பாத எழுத்தாளர்கள் உலகில் உளரோ?
☐ உளர் மொட்டைக்கடித எழுத்தாளர்கள்

☐ மகுடியாரே மூன்று தமிழர்கள் ஜனசஞ்சாரமற்ற தீவில் சந்தித்தால் என்ன செய்வார்கள்?
☐ சங்கம் அமைப்பார்கள் சண்டை பிடிப்பார்கள்.








என்ன அந்த புத்தக வெளியீட்டு விழாவிலை சத்தத்தையே காணோம்..... ஆளுக்காள் குசு குசுத்துக் கொண்டிருக்கிறார்கள்...?

வெளியிட்டது ஏதோ 'கிசு கிசு' பத்திரிகையாம்... அதுதான் அப்படி...



'நான் சொன்ன விடையத்தை நீ ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதை.... ரகசியமாக இருக்கட்டும்.... விளங்குதா?'
'ஓ..விளங்குது.. உனக்கு ஆர் சொன்னது?'
'சுரேஷ் தான் சொன்னவன்....?'
'சுரேஷிற்கு ஆராம் சொன்னது..?'
'அது...சுந்தரம்... என்றுதான் சொன்னவன்..
'அப்ப....சுந்தரத்திற்கு....?'
'அது தெரியேல்லை...!'
'மடையா... சுந்தரத்திற்கு இதைச் சொன்னதே நான்தான்....'
'ஆ....!??'



"புதுசா ஏதோ வியாபாரம் தொடங்கியதாகக் கூறினாயே... எப்பிடி 'பிஸ்னஸ்' போகுது..."
"அதையேன் கேட்கிறாய்.... வியாபாரம் படுத்துவிட்டது..."
"அது சரி....என்ன வியாபாரம் தொடங்கினனீ..."
"மெத்தை வியாபாரம்"



"பின்தூங்கி முன் எழுவாள் பத்தினி' எண்டு ஔவையார் சொன்னது சரிதான்..."
"ஏன் அப்படிச் சொல்லுறாய்...?"
"இரவு தொலைக்காட்சி நிகழ்ச்சி எல்லாம் முடிந்து பின் படுக்கும் என் மனைவி மறுநாள் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்க முன் எப்படியோ எழும்பி விடுவாள்."



'அதிலை போற இரண்டுபேரும் ஜோர்ஜ் புஸ்ஸும், ரொனி பிளேயரும் போல....'
'அவ்வளவு நெருக்கமான நண்பர்களா?'
'இல்லை....அதிலை ஒருத்தர் ஒரு வில்லுப்பாட்டு கோஷ்டி நடத்திறார்... அதிலை 'ஆமா' போடும் பிற்பாட்டுக்காறர் மற்றவர்... அதுதான்..."

# கமலின்... அன்பே சிவம்

வெளிவாசல்பாலன்



அநேகமாக எல்லாவற்றிலும் விழல்தனங்களே பெருகிவரும் தமிழ்ச்சூழலில் - அதிலும் சீரழிந்து போய்க் கொண்டிருக்கும் தமிழ்ச் சினிமாவில் சிலவேளைகளில்நல்ல சகுனங்கள் நிகழ்வதுண்டு. அபூர்வமாய் ஓரளவுக்கு பார்க்கக் கூடியவாறான படங்கள் வரும். இப்போதும் ஒரு சிறு அதிசயமாய், மெய்மையைத் தழுவியதாய், வழமைக்குப் புறம்பானதாய், கொஞ்சம் சீரியசாய், நல்லதொரு சினிமாவுக்கான அடையாளங்களுடன் கமலின் 'அன்பே சிவம்' வந்திருக்கிறது.

அன்பே சிவம் மாறுதலான ரசனையைக் கோரும் சினிமா. விவாதத்துக்கும் கவனத்துக்குமுரிய விடயங்களைப் பேசும் சினிமா. தமிழ்ச் சினிமாவின் வழமைக்குள் விழுந்து விடாமலும் அதேவேளை அதிலிருந்து வெளியேறி முழுதாக நகராமலும் அதன் விளிம்போரங்களில் சுழலுகின்ற சினிமா.

இது தான் தமிழ்ச் சினிமாவின் பெரும்பாலான ரசிகர்களுக்கு அன்பே சிவம் மீதான ஆர்வத்தைக் குறைத்திருக்கின்றன. வெகுசன இதழ்களிலும் கூட இந்த நிலைமையைத்தான் காணமுடிகிறது. ஆனந்தவிகடனின் ஒரே இதழில் விக்கிரமின் 'தூள்' கமலின் 'அன்பே சிவம்' இரண்டுக்கும் விமர்சனம் வந்திருந்தது. மதிப்பெண்ணும் வழங்கப்பட்டிருந்தது. தூள் 44 புள்ளிகளையும் அன்பே சிவம் 47 புள்ளிகளையும் பெற்றிருந்தன. இரண்டுக்கும் இடையிலான வித்தியாசப்புள்ளிகள் மூன்று மட்டும்தான். ஆனால் படங்களின் வித்தியாசங்களோ மிகமிக வேறுபாடானது.

இதேபோலத்தான் அன்பேசிவம் பற்றி வந்த வேறு பெரும்பாலான விமர்சனங்களுமிருக்கின்றன. இது தமிழ் மீடியாக்களின் பார்வைத் தரத்தையும் தமிழ் ரசிகர்களின் மந்தகத்தனத்தையுமே காட்டுகின்றன. ஆனாலும் நல்ல சினிமா ஆர்வலர்களின் கவனிப்பையும் மதிப்பையும் அன்பே சிவம் பெற்றிருக்கிறது. இதுதான் அன்பே சிவத்துக்குக் கிடைத்த வெற்றி. நல்ல சினிமா பார்வையாளர்களுக்கு கிடைத்த நல்ல வாய்ப்பு.

அன்பே சிவம் வந்த பிறகு அது ஏற்படுத்திய அதிர்வுகளால், அது பற்றிய கவனிப்பால் B.B.C யில் தமிழ் ஒலிபரப்பில் கமலஹாசனிடம் பேட்டி கண்டிருந்தார்கள். இரண்டு நாட்கள் ஒலிபரப்பாகிய பேட்டியில் அன்பே சிவத்தின் அரசியல் பார்வைபற்றியும் தனது கருத்துலகம் பற்றியும் கமல் பேசினார். பிரான்ஸிலிருந்து வெளிவரும் ஈழமுரசுவில் 'வழுதி' அன்பே சிவத்தைப் பாராட்டியும் கமலை, ஊக்கப்படுத்தியும் மகிழ்ச்சி பொங்க எழுதியிருந்தார். .புதிய கலாச்சாரத்தில் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். இப்படி வேறுசில நல்ல விமர்சனங்களும் வந்துள்ளனதான். ஆனால் எப்படியோ 'அன்பே சிவம் ஒரு விதமாக வேறுபட்ட தன்மையுடன் தான் நோக்கப்படுகிறது. அது பாராட்டப்படும் போதும் புறக்கணிக்கப்படும் போதும் இத் தன்மையைக் காணலாம்.

இதற்கு அன்பே சிவம் முன்வைக்கும் விடயங்கள் காரணமாயிருக்கலாம். ஒரு யதார்த்தச் சினிமாவாக அன்பே சிவம் முழுமைபெறவில்லையென்றாலும் அது சுட்டும்விடயமும், காலமும், களமும் ஓரளவுக்கு யதார்த்தத்துக்கு நெருங்கியவை. அதாவது யதார்த்தத்தில் இருக்கும் விடயங்களை அன்பே சிவம் பேசமுயன்றதால், விமர்சிக்க முயன்றதால், உணர்த்த முனைந்த தால் தான் தமிழ்ப் பரப்பில் அதற்கு அதிக வரவேற்பிருக்கவில்லையோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஏனெனில் யதார்த்தம் எப்போதும் முகச்சுழிப்பையே ஏற்படுத்துவது நமது சூழலின் வழக்கமாகி விட்டது.

1950 களில் பதேர் பஞ்சலியூடாக சத்யஜித்ரே அன்றைய இந்தியாவின் யதார்த்தத்தை - நிலைமையைக் காட்டினார். இப்போது கமலஹாசன் இன்றைய இந்தியாவின் போக்கை, நிலைமையை இளையதலை முறையைக் காட்ட முயல்கிறார், அது வங்காள வாழ்க்கையூடானது. இது தமிழ் நாட்டு வாழ்க்கையூடானது.

உலகமயமாதலின் பின்னே, வணிகச சூழலில் புதிய நாகரீகங்களில் சிக்கி சுய வட்டத்துள் இயங்கும் இளைஞனுக்கும் பரந்த நோக்கும், விரிந்த மனமும் சீரிய சிந்தனையும் செயலார்வமும் உள்ள ஒரு நடுத்தர வயதான வருக்கும் இடையில் நிகழும் சந்திப்புத்தான் அன்பேசிவத்தின் கதை. அனுபவங்கள் பகிரப்படுகின்றன. நிகழ்வுகள் உணர்த்தப் படுகின்றன. சிவம் என்பது அன்பென்று சொல்லப்படுகிறது. அந்த அன்பு சகமனிதன் மீது, சூழலின் மீது, வாழ்க்கையின் மீது வைக்கப் படுவது தான் மெய்யன்பமாகும் என்பதுதான் அன்பேசிவத்தின் சேதி. இதை இன்றைய வாழ்க்கையினூடாக உணர்த்த முயன்றிருக்கிறார் கமலஹாசன். அவருடைய வழமையான படத்தைக் கீழிறக்கும் பலவீனமான சமரசங்களுடன். இதைத் தவிர்த்துப் பார்த்தால் - அன்பே சிவம் காட்டும் விடயங்களில் முக்கியமானவையாக சிலவற்றை நாம் கவனித்தேயாகவேணும்.

01. சூழல் முன்னேறாத வரையில், சகமனிதர்களின் அறிவும் வாழ்க்கைத்தரமும் உயர்ச்சியடையாதவரையில் தனியே எவர்தான் படித்திருந்தாலும், வசதியுடனிருந்தாலும் அது முன்னேற்றமாகவோ சரியான வாழ்க்கையாவோ ஆகிவிடாது என்பது.

02. நகரங்களின் வடிகாலமைப்புச் சீரின்மையால் வெள்ளம் ஓடிவிடமுடியாமல் மக்கள் எவ்வளவு சிரமத்துக்கும், சீரழிவுக்கும் ஆளாகிறார்கள் என்பது. வெள்ளத்துக்குப் பழக்கமாகிவரும் மனிதர்கள். வளர்ச்சியடைந்ததாகக் கூறப்படும் இந்தியாவின் அகத்தோற்றக் காட்சியாகிறது. பெருகிவரும் வெள்ளத்தில் மாடுகள் நீந்துகின்றன. மனிதர்கள் நடந்துசெல்கிறார்கள், சிறுவர்கள் குளிக்கிறார்கள மகிழ்ச்சி பொங்க. கழிவுகள் மிதந்து வருகின்றன. இவன் மட்டும் தப்பிவிடமுடியுமா? எல்லாம் இந்த நிலையில் ஒன்று தான் என்று உணர்த்து கிறார் கமல். தேசம் உயராத வரையில் யாரும் உயர்ந்துவிட முடியாது. ஆனால் இன்றைய இந்தியாவின் போக்கு இதைப் [illegible]ற்றி பொருட்படுத்தவில்லை என்பது.

03. இந்திய ரெயில்வே மீதான விமர்சனம் அடுத்தது. இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங் களிலொன்று 'இந்தியன் ரயில்வே' வருடந்தோரும் விபத்துக்களுக்குப் பஞ்சமில் லாதிருப்பதும் இந்த ரயில்வேயின் சிறப்பம்சம். இதைக் காண்பிக்கிறது அன்பேசிவம். ஏற்படும் ரயில் விபத்தும், அதன் அவலங்களும் ஒரு வழமையாகி விட்ட நிலைமையும் ஒரு விமர் சனமாக முன்வைக் கப்படுகிறது.

04. உலகமயமாதல் என்ற பெயரில் நடக்கும் சுரண்டலும் பரப்பப்படும் நாகரீக வியாதியும், நிகழ்த்தப்படும் நவீன ஒடுக்கு முறையும் எப்படியானது என்பது.

05. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று கூறி நெற்றியில் விபூதிப்பட்டையுடன் இருக்கும் மனிதனின் மறுபக்கம் எவ்வளவு மோசமானது? எந்தக் கவசத்தின் பின்னால் எத்தகைய முகமூடியின் மறைவில் என்னென்ன வெல்லாம் நடக் கின்றன? உலகம யமாதல் என்று பரவிவரும் வணிக அமைப்புகளின் சுரண்டலுக்கு எப்படி இந்த வர்க்கம் மதத்தை ஒரு கவசமாக்கிக் கொண்டு இயங்குகின்றது என்பதை துல்லியமாகக் காணலாம். இது பாரதீய ஜனதா மீதான விமர்சனமாகவேபடுகிறது. (திருநாமுல் கொங்கிரஸை விமர்சித்திருந்த கமல் இதில் பி.ஜே.பியை விமர்சிக்கிறார்)

06. அடுத்தது மூத்த தலை முறைக்கும் இளையதலை முறைக்குமிடையிலான உறவும் உறவின்மையும். உளவியல் மாறுபாடுகளும். மூத்த தலைமுறையின் அனுபவத்தையோ அறிவையோ ஏற்கத்தயங்கும், அதையொரு பொருட்டெனக்கருதாத இளைய தலைமுறை. நல்ல சிவத்துக்கும் அர்ஸ்க்கும் இடையிலான மோதல்கள் - மோதல் என்பது சண்டையல்ல - புரிதலின்மைகள், பிறகேற்படும் சம்பவங்கள் , உரையாடல் அதன் விளைவான புரிதலும் உறவும் உளவியல் பரிமாணங்களும்.

07. எப்போதும் அறிவுரை எரிச்சலையூட்டும் என்ற யதார்த்தம். நல்ல சிவம் அர்ஸ்க்கு எல்லாவற்றிலும் தலையிட்டு அறிவுரைப்பது. சொல்வது மெய்யாயினும் ஏற்படும் சலிப்பை நன்றாக வெளிப்படுத்தியுள்ளனர். (பொது வாக தொழிற்சங்கங்களில் இயங்குவோர் இடதுசாரிச் சிந்தனையுடையோர், கலை, இலக்கியம் அரசியல், சமூகம் சார்ந்து இயங்குவோர் சக மனிதர்களுக்கு அறிவுரைப்பதை ஒரு செயற்பாடாகவே கொள்கின்றனர். அது தனி நபர் சந்திப்பிலும் கூடத்தான். இங்கே நிகழ்வது இது தான். இது பலருக்கும் அதாவது பார்த்துக் கொண்டிருப்போருக்குச் சலிப்பூட்டுவது. இங்கே அன்பே சிவம் பார்த்தவர்கள் சொல்வதும் இதைத்தான். 'நல்லசிவமும் அர்ஸ்ஸும் (கமலும், மாத வனும்) தொடர்ந்து கதைத்துக் கொண்டிருக்கிறார்களே என்று' பாத்திரங் களின் தன்மை அ[illegible]றிருக்கும் போது [illegible]ப்படி இருக்க முடியும்? எல் லாப்படங்க ளிலும் ஒரே மாதிரி வருவது போல, வந்து போகும் காட்சிகளை யேன் இன்னு மின்னும் சனங்கள் விரும்பு கிறார்கள்? ஏன் பாத்திரங்களின் தன்மையையும் இயல்பையும் உணர்வதில்லை.

08. பெண்ணுரிமையை மதிப்பது. இயல்போடு பெண்ணைச் சமமாகக் கொள்வது. பெண்ணுடன் நடப்பது.

09. தெருக்கூத்தையும் ஓவியத்தையும் வலுவுள்ள கலை வடிவங்களாக காட்டப்படு கிறது. போராடும் தரப்பு அல்லது வர்க்கம் இந்த இரண்டின் ஊடாகவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி இவற்றை ஒருவித ஆயுதமாக பிரயோகிக்கும் அளவிற்கு இவை இரண்டும் முக்கியமானவை என்பது. அத்துடன் நவீன ஓவியரசனையென்பது ஆழ்ந்த தேடலுக்குரியதொன்று. தேடத்தேட பலவிடயங்கள் புலனாகும் என்ற உண்மை உணர்த்தப்படுகிறது. இது வெகுசனமட்டத்தில்-சினிமா வெகுசன ஊடகமாதலால்-பரந்த அறிமுகத்தைக் கொடுக்கும் தெருக்கூத்தையும் அப்படித்தான் பயன்படுத்திக் காட்டப்படுகிறது. உலகமயமாதல் சூழலில், சக்தி மிக்க, செயற்கைக் கோள் வலைப் பின்னலின் துணையுடன் மனிதர்களைத்தம்பக்கம் திருப்பும் வலிமையான தந்திரோ பாயங்களை சாதாரண தெருக்கூத்தின் மூலமும் ஓவியத்தின் ஊடாகவும் முறியடிக்கப்படுகிறது என்பது பலரும் அவதானிக்க வேண்டியது. மக்களிடம் நேரடியாக களமிறங்கி வேலைசெய்ய இவைஉதவும் என்பது இதன் சேதியும் அழுத்தமும்.

இப்படிப்பலவற்றைச் சுட்டி இளையதலைமுறையின் கவனத்துக்கு இன்றைய யதார்த்தத்தை-சீரழிவின் முகத்தைக் காண்பிக்கிறது அன்பேசிவம் சிதறலாக இவ்வாறு ஒவ்வொன்றையும் காண்பிப்பது பொருத்தமானதா என்று யாரும் கேட்கலாம். செறிவாக விடயங்களைப் பேசமுனைவதற்கான. ஒரு உத்தியாக இவ்வாறு இணைத்திருக்கிறார் கமலஹாசன். இதில் ஓரளவுக்கு வெற்றியும் கிடைத்திருக்கிறது அவருக்கும் நமக்கும். ஆனால் வில்லனின் மகளுடன் காதலாவதும் தொழிற்சங்கப் பலத்துடனும் உறவுடனும் இருக்குமொருவர் அதிகாரத்தரப்புடன் மோதலேற்படும் போது தனியாகவே நின்று மோதுவதும் சுத்த மோசமாகவுள்ளது.

"அன்பே சிவம் பார்த்த பிறகு கமலஹாசனின் மீது பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. கமலஹாசனின் முன்னைய படங்களைப் பார்த்தபோது அவரின் மீதேற்பட்ட ஈடுபாடும் மதிப்பும் இப்போது- அன்பேசிவத்தைப் பார்த்த பிறகு- கூடுதலாகியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் கமலின் மீது அன்பு ஏற்பட்டிருக்கிறது" என்றார் ஒரு நண்பர்.

ராஜபார்வை, பதினாறு வயதினிலே, நாயகன், சத்யா, குருதிப்புனல், மகாநதி, இந்தியன், தேவர்மகன், ஹேராம் போன்ற படங்களில் வெளிப்பட்ட கமலஹாசனின் ஆளுமையால் ஈர்க்கப்பட்டிருந்த நண்பருக்கு அன்பேசிவம் பெரும்பிடிப்பைக் கொடுத்திருக்கிறது. கமலஹாசனின் மேல் பிரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளையில் வேறிருவர் அன்பேசிவத்தைப் பற்றிக் கதைக்கையில் வேறுவிதமாகச் சொன்னார்கள். "எல்லாபிறேம்களிலும் கமலஹாசன் தான் முகம் காட்டுகிறார். தெளிவில்லாத பேச்சும் வேகமில்லாத காட்சிகளின் நகர்வும் படத்தைக் குறைத்து விடுகின்றன" என்றார் ஒருவர்.

மற்றவரோ "அன்பே சிவத்தில் ஒன்றுமே புரியவில்லை. கமலும் மாதவனும் தொடர்ந்து கதைத்துக் கொண்டே யிருக்கிறார்கள். அப்படி என்னதான் கதைக்கிறார்கள். எவ்வளவு நேர த்துக்கு அதைப்பார்த்துக் கொண் டும் கேட்டுக்கொண்டும் இருக்க முடியும்? கிரணையாவது பார்ப் போம் என்றால் கைவிரல் கூடத் தெரியாமல் போர்த்தியிருக்கிறார்கள்" என்று தன் சலிப்பையும் ஏமாற்றத்தையும் கொட்டினார்.


இப்படிப் பலவிதமான பார்வைகளுக்கிடையில் ஊசலாடுகிறது அன்பேசிவம்.

ஒருவரையேனும் நல்ல சிந்தனையின் பக்கம், நீதியின் பக்கம், போராடும் உணர்வுள்ள வராக, அன்பானராக, சக மனித நேசிப்பாளராக, மாற்றி விடத் தானே பலரும் விரும்புகிறோம். இதைத்தான் அமைப்புகளும் சீரிய தளத்தில் இயங்குவோரும் செய்ய முயல்கின்றனர். அன்பே சிவத்தில் நிகழ்வதும் இதுதான்.

கமலின் வருகை நாயகன், கல்யாணராமன், 16 வயதினிலே போன்றவற்றை சில இடங் களில் நினைவூட்டினாலும் நல்ல சிவம் மனதில் தனியாகவே பதிக்கிறார். அர்ஸ்ஸும் அப்படித்தான் 'மச்சி மச்சி' பாடல் மட்டும் பொருத்தமாயிருக்கிறது.

முன்சொன்னதுபோல அன்பேசிவம் தமிழ்ப்பரப்பில் ஒரு வேறுபட்ட தன்மையுடன் தான் நோக்கப்படுகிறது. அது பாராட்டப்படும் போதும் புறக்கணிக்கப்படும் போதும் இந்தத் தன்மையைத்தான் பார்க்கமுடிகிறது. ■

# சங்காரம்



மண்டபம நிறைந்த கலைஞர்கள்! ஆர்வலர்கள்... அண்மைய வெளியீட்டு நிகழ்வுகளில் வெற்றி பெறும் வெளியீட்டு நிகழ்வாய் என் புரிதல்.

தீபா குமரேஷின் 'புரிதல்' வெளியீடு என்பது வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களுக்குப் புரியும்.

பெண்கள், ஆண்கள் என்ற பேதமைகள் கடந்த எழுத்தாளர் என்ற 'பொதுப்பத' சங்கமிப்பு! திறவுகோல்! சாத்தியமாக்கிக் கொண்டிருக்கும் சாதனை முயற்சி! சாதனைக் கதாநாயகர்களின் சரித்திர வரலாற்றுப் புரிந்துணர்வு உடன்பாட்டுக் காலத்தில்.

தலைமையுரை, வரவேற்புரை தாண்டி வெளியீட்டுரை: நூலின் நோக்கம்: இலக்கு: அடைவு உரைக்கிறது:

இந்த மண்ணில் அரங்கேறிய அவலங்களின் புரிதல்களின் துல்லியபதிவு! ஒவ்வொரு மனிதனுமே!

ஒவ்வொரு மனிதனும் ஓவியனே, 'உள்மன வரைபு கொண்டு'

மொழித் தேர்ச்சி கைவரப் பெற்றவனே, தன் உள்மன வரைபுகளை வரிவடிவங்களாக்கி ஊடாடவிடுகின்றான். அந்த ஊடாட்டத்தில் பிற ஒவ்வொரு மனிதனும் தன் கதை சொல்வதாய் உணர்கின்றான்: உறவு கொள்கின்றான்: உந்தும் உணர்வுகளில் உதயம் தேடுகிறான்: தேடல் விரிந்து விளைபொருள் பெறும் ஊக்கியாய்! அவை உஷ்ணம் கொடுப்பதனால்.

உண்மையே! முழுதான உண்மையே ஜென் கதைகள் போல என உள்வாங்கிக்கொள்கிறது என் உள்மன வரைபும்.

நூல் வெளியீடு: திருமதி குகாசங்கர்!

குங்குமம் இழந்த திருநுதல்: மாங்கல்யம் தொங்கும் திருக் கழுத்து! தீட்சண்ய பார்வை.

பிரதிகள் கைமாறுகின்றன. எந்தப் பிறழ்வும், பிரளயமும் இல்லாமல் பிரதிகள் கைமாறல் நீளுகிறது.

என்னுள் பிரளயம்: பொறி தட்டல்...

பாக்கியா மிஸ்சும் அவர் மகள் சங்கியும் நிழலாட்டமாய் என் மனக்கண்ணில் விரிகின்றனர்.

13 ஆண்டுகளுக்கு முந்திய அரங்கேற்றங்கள் அத்தனையும் அடிமனதில் பதிவாகி இருந்திருக்க வேணும்.

சந்தர்ப்ப சங்கற்பங்கள்! சங்கிலித் தொடராய் பின்னிக் கொள்கின்றன.

''போயும் போயும் இவ்வளவு காலமும் இருந்து ஒரு முனியையே மனிசிக்குப் பிடிச்சிருக்கு!...''

முனிக்குள் இருந்த அக அழகு வெளிப்பட்ட போது அத்தனையும் அடங்கிப்போச்சு, 'மனுசனெண்டா மனுசன் தான். தங்கமான மனுசன். அவளின் காத்திருப்புக்கு கிடைச்ச பரிசு."

முணு முணுப்புக்கள் அடங்கி தாம்பத்யம் எண்டா, தம்பதிகள் எண்டா, வாழ்க்கை எண்டா இப்பிடித்தான் இருக்க வேணும் எண்ட புகழாரம் அடங்க முன்னரே அந்தாள் அடங்கிப் போனது துரதிஷ்டம்.

ஆக 5 வருடங்களில், அவர் தலைமாட்டில் ஒரு குத்துவிளக்கு, கால்மாட்டில் 3குத்துவிளக்குகள்.

மூத்தவள் சங்கிக்கு 4வயது, சஞ்சிக்கு ஒரு வயது. பாக்கியா மிஸ், கருநாகமாய் அவர் பின்னல் நீண்டு மடியிலிருக்கும் சஞ்சியைத் தீண்ட ஆர்ப்பாட்டமில்லாமல் அமர்ந்திருந்தார்.

ஆக4 வருடங்களிலும் ஒரு வருடத்திலும் அந்தப் பிஞ்சுகளால் பித்தலாட்டங்களை எப்பிடிப் புரிந்து கொள்ள முடியும்.

பித்துப் பிடித்தவர்களின் பிதற்றல்களை புறந்தள்ளிவிட்டு யதார்த்தம் உணர்ந்து அடக்கி அமைதியாய் அழுத்தமாய் அமர்ந்திருந்தார்.

அவரது அர்த்தம் அழுத்தப்படலாய் என் உணர்தல். கரித்துக்கொட்டல்களை அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"காத்திருந்திருக்கின்றாள் போல" என்ற முணுமுணுப்புக் கூட எட்டாமல் இல்லை.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே!

ஆக்கிரமிப்புகள்: கூடு குழைப்புகள்: இடப்பெயர்வுகள்: வேரோடையே கல்வியும் கல்லாமலும் கலிகக்கி கன்றிப் பழுத்த காலங்கள்....

வழமைக்குக் கொண்டு வர மீள் ஒழுங்கில் காலக்கரைதல்!

கரையும் காலங்கள் எப்போதும் எந்தவேளையிலும் கனதியாய்க் கழிய வேணும். பாக்கியா மிஸ் தான் வழிப்படுத்தியவர்.

அவர் எங்கள் பாடசாலை அதிபராய் தரமுயர்த்தப்பட்டிருந்தும் அதுக்குள்ள தான் நடந்தது. தன்னிகரற்ற மனிசியின்ர சேவைக்காக வேண்டிய மகுடமே அது.

ஒவ்வொரு இடப்பெயர்வின் போதும் கூட்டிக் கழித்து பிரித்துப் பெருக்கியும் மூன்றாவது இடத்திற்கு இடம்பெயர்த்திய போது முக்கிய மூன்று பாடங்களுக்கும் முனைப்பான ஆசிரியர்கள் இல்லாத இடைவெளி.

விஞ்ஞான பாடத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி பாக்கியா மிஸ்ஸின் வேண்டுதல்! எனக்கு.

ஆரம்ப வகுப்புகள் என்றால் தயக்கம் வேண்டியதில்லை. உயர்தர வகுப்பிற்கான அனுமதியை நிர்ணயிக்கும் போதும் க.பொ.(சா/த) ப் பரீட்சை எழுதப் போகும் மாணவர்களுக்கானது! என்பதினாலேயே தயக்கம்.

மனிசியின் துணிவு தொற்றிக் கொள்ள துணிந்து ஏற்றுக் கொண்டாயிற்று. இரவிரவாய் உரிய அலகுகளைப் படித்து தயார் செய்து கொண்டு படிப்பிப்பதாய். பரீட்சை எழுதும் போது நான் படித்ததையும் விட அதிகமாய் அதிகம் அதிகமாய் படித்தது மட்டுமல்ல! விழித்திருந்தே படித்ததும், அவர்களுக்குப் படிப்பிக்க வேண்டுமென்றபோது தான்.

என் வாழ்க்கையில் அதிக விழிப்போடு இருந்து கற்றகாலங்கள் அவையாகத்தான் இருக்க முடியும், அத்திவாரங்கள் ஆட்டங் காணும் வகையினதாய் போடப் பட்டுவிடக்கூடாது என்பதற்காய்.

தேர்ச்சி அறிக்கைகள் என் தேர்ச்சி சொல்லின.

செமினாறு வகுப்புகளும் தேர்ச்சி உரைத்தன.

செமினாறு வகுப்பில் என் நுழைவு மறக்க முடியாதது.

"என்ன குவாலிக்கேசன்''

"B.SC, A/L சயன்ஸ், A/L சயன்ஸ், B.SC, றெயினிங் கொலிச், தொலைக்கல்வி,... O/L சயன்ஸ்."

விளக்கமின்றி பதிலளிப்பதாய் கருதியிருக்கவேணும். உறுதிப் படுத்திக்கொள்ளும் விதமாய் தலைமை ஆசிரிய ஆலோசகரின் அதிரடிக் கேள்வி.

"என்னென்ன பாடங்கள் எடுத்தனீர்

''தமிழ் லொஜிக், எக்கணமிக்ஸ், கிண்டுக்கலிச்சர்''

**ஆதித்தாநிலா**

அதோடு அப்ப ஆக 19வயதுகளே நிரம்பப் பெற்றவளாய் "எந்தஸ் கூல்."

"....."

மேலதிக கேள்விக்கு இடமில்லை. பாக்கியா மிஸ் இடம் நிரப்ப விட்ட கோரிக்கைகள்: அலைஞ்ச அலைச்சல்கள்,: வழங்கப்பட்ட பதில்கள் நானறிந்தே பிரசன்னமானவள்.

செமினாறின் நிறைவில் வழங்கப்பட்ட சான்றிதழ் காட்டி விபரம் சொன்னபோது பாக்கியா மிஸ் சொன்னா.

"எல்லாம் நன்மைக்குத் தான். DE கதைச்சவர். தகைமைக் காயும், தற்துணிவிற்காயும் பாராட்டினவர்" தைரியப் படுத்தினா மிஸ்.

மிஸ் சொன்னது போலவே எல்லாம் நம்மைக்குத் தான். எல்லாம் நல்லபடியாக நடந்தேறிக் கொண்டிருக்கையில் பல்கலை வாய்ப்பு வந்திருந்தது.

பள்ளியின் கண்ணீரோடு பயணம் போனேன்.

2 ஆண்டுகள் ஓடிவிட்ட ஓட்டம்!

என் மாணவர்கள் பலர் விஞ்ஞானப் பாடத்திலும் அதி விசேட சித்தி (D) பெற்று கணித, விஞ்ஞானத்துறைகளில் கால்பதித்திருப்பதாய் கடிதம் கொடுத்திருந்தார்கள்.

நானும் 2ம் ஆண்டுப் பரீட்சையில் கிளாஸ் அடிச்சுப் போட்டு பதில் எழுத வேணும் என்று எண்ணிக்கொண்டிருக்கையில் 5 லட்சம் மக்களும் அந்த நீரேரிக்க நீண்டிருந்த மாபெரும் இடப் பெயர்வு! மண்ணை அள்ளிக் கொட்டிப் போட்டுது.

உள்ளக் கொதிப்பு உலைக் களமாய்!

உஷ்ணம் அடக்கும் என் உயிர் நண்பன் மூச்சும் விடுதலையின் வீச்சத்தில் நின்று போனது இதன் போது தான்!

உயிரணுவில் உலைச்சல்!

பாக்கியா மிஸ்ஸின் பாய்ச்சல் காலத்தைக் கரைக்க வேண்டாம் என்ப தாய். பழைய படியே படிப்பிக்கப் போய் வந்தேன் முன்னை போல் விஞ்ஞான பாடத்திற்காய் அல்ல. சகலகலா வல்லியாய் உயர்தர வகுப்பிற்கு பொருளியல், அளவையியல், இந்து நாகரீகம் யாவும் நானாகவே.

ஆனாலும் பலனில்லை. யாராலுமே எதனாலுமே தணித்து விட முடியாத தவிப்பு என்னுள் "நீறு பூத்த நெருப்பாய் என்னுள் விழிப்பு!" அடித்துப் போட்டது போல் உறங்கும் எனக்கு உறக்கம் கலைந்த ஊசலாட்டம்!

ஊசலாட்டத்தோடே உலாவிக் கொண்டிருந்தேன்.

அந்த நேரம் தான் பாக்கியா மிஸ்ஸின் என் அருமை மாணவி சங்கியின் நீராட்டு நிகழ்வு. பரீட்சை வைத்தமையால் பாதி நிகழ்வில் தான் கலக்க முடிந்தது.

என் பிரிய மாணவி சங்கி தாய், தந்தையரது புரிதல், ஆரோக்கியம், அறிவு, தெளிவு, நிதானம்.... அத்தனையும் இரட்டிப்பாய்க் கொண்ட அற்புதக் குழந்தை.

ஆராத்தி எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் பொருட்படுத்தியதாய் இல்லை. யாரையோ தேடுவதாய் என் உணர்தல்.

பாக்கியா மிஸ்ஸை அந்த இடைக்கும் காணோம்.

அவள் தேடல் புரிந்து அருகில் செல்கிறேன்.

"என்ன சங்கியம்மா யார் காணாமல் போனோர் பட்டியலில்..."

நட்போடு நான்.

''மிஸ்! அம்மா...''

அவளிடம் ஏதோ ஏக்கம்.

''மிஸ்! அம்மா வரமாட்டாவா"

''வருவா'' நிலவரம் புரியாமல் வாக்குறுதி வழங்கி விட்டு பாக்கியா மிஸ்ஸைத் தேடிக் கொண்டு போகிறேன் நான்.

பாக்கியா மிஸ்ஸின் கோலம்!

"மிஸ் ஏன் அழுறியள்"

"....."

"மிஸ் உங்களை சங்கி தேடுறாள்"

"அவள் வாழ வேண்டிய பிள்ளை! வாழ்விழந்த நான் நல்ல காரியங்களுக்கு முன்னுக்குப் போகக் கூடாது!"

"ஆர் சொன்னது..."

"ஆரும் சொல்ல வேண்டியதில்லை. அது தான் வழமை! எனக்கு பயமாயிருக்கு! அந்தாளையும் அற்ப ஆயுளிலேயே பலி குடுத்திட்டன். நான் பாவி! அவள் வாழ வேணும்!"

பாக்கியா மிஸ்ஸா! எத்தனை அழுத்தமாய், துணிச்சலாய், செயலாற்றுவதாய் துதித்துக் கொண்டிருந்தேன். ஆயிரமாயிரம் அதிர்வலைகள் என்னுள்.

எனதருமை மாணவிக்காய் சமாளித்து விட்டு வெளியேறியது பதிவாய்! வடுவாய்...

அற்புதக்குழந்தை சங்கி! சங்கியம்மா! சங்கர் துணைவியார்...

சங்கர் துணைவியார் சாந்தமாய்... சாத்தியமாய் யாவற்றையும் 'சங்காரம்' செய்து விட்ட சாதனைப் படிமமாய் சான்றாய் முன்னிலையில்!

தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் அவர்களின் சிறப்புரை சிகரம் வைக்கிறது.

அண்மையில் மிக அண்மையில் 'அது' நிகழும் எப்படி எதிர்கொள்ளப்படுகிறது என்பது எதிர்பார்ப்பு: புரிதல்.

'அது' நடந்தே ஆகும். 'முரண்பாடுகளிலிருந்தே' ஆரம்பமாகிறது 'புரிதல்': 'விளைபொருள்.'

போர் நிறுத்த உடன்பாடு புரிந்துணர்வு உடன்பாடு.

எதிரியும், துரோகியுமாய் துணியப்பட்டவர்கள் நண்பர்களாய் கைகுலுக்குகின்றோம்.

இந்தக் கணம்! இந்தக் கணச் செயற்பாடு கொண்டு நாங்கள் எல்லோரும் நண்பர்கள்.

நாளை நண்பர்களாயும் நீடிக்கலாம். எதிரிகளாயும் இடைமுறிக்கப்படலாம். நட்பும், பகையும் அவர்களைச் சார்ந்ததே. எது எப்பிடியாயினும் எல்லாம் எங்களுக்கு நன்மையே!

நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறம். நீங்களும் புரிந்து கொண்டிருப்பியள். புரிந்து கொள்ளவேணும்.

'தந்திரோபாயத்தில் வெற்றி பெற்று மூலோபாயத்தில் தோற்றுப் போடக் கூடாது.'

அவர் உரை நிறைவான போது என் மனத்தராசின் ஒரு தட்டில் சங்கியம்மாவும் ஒரு தட்டில் சங்கர் பாரியாரும்.

சங்கர் பாரியார் தட்டு உயர்ந்து சங்கியம்மாவின் தட்டையும் உயர்த்த கைதாங்கு தாய் ஒரு உள்ளமன வரைபு.

ஓவியக் கலை மட்டும் எனக்கு ஒத்துழைக்குமானால் அற்புதமாய் அதை வடிப்பேன்! அது பிக்காசோவின் ஓவியத் துடனும் போட்டியிட்டு வெற்றிபெறும். ஏனெண்டா அது முரண்களின் உதயம்! சுடச்சுட ஒளிரும் பொன் போல புடம் போடப்பட்ட உயிரோட்டத்தின் விளைவுப் பொருள் அது என்பதால்!

# தேசிய பெண்கள் எழுச்சி மாநாடு-II

தாயகத்திலிருந்து மீன்பாடும் தேன்நாட்டை நோக்கிய தமிழீழப் பெண்களின் எழுச்சிப் பயணம். ஒவ்வொருவருடைய



மனங்களுக்குள்ளும் சொல்ல முடியாத பல இன்ப அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுத்தது. தென்தமிழீழம் நோக்கி சுவடுகளைப் பதிக்கும் தேசிய பெண்கள் எழுச்சிப் பயணம் போன்ற பல சுலோகங்கள் அடங்கிய எழுத்துக்கள் வாகனங்களின் முகப்பை அலங்கரிக்க நீண்ட நெடும் பயணம் ஆரம்பமாகியது.

எனது வாழ்க்கையிலே இந்த நாள் எப்பொழுது வரும் எனக் காத்திருந்த மனங்களாகவே ஒவ்வொருவருடைய முகபாவமும் தோற்றமளித்தது. பல இன்னல்களுக்கு மத்தியில் பயணம் செய்தாலும் களைப்போ, சோர்வோ தெரியவில்லை. எப்போது அந்த அழகிய மண்ணில் தடம் பதிப்போம் என்ற எண்ணம் நீண்ட பயணத்தை இலகுவாக்கிக் கொண்டது. மட்டக்களப்பு மண், மக்கள், தரைத்தோற்ற அம்சங்கள், கால நிலை எவ்வாறு இருக்கு மென பலபேரின் வாய்மூலம் வந்ததை வரைபடமாக்கிக் கொண்டவர்களே தவிர நிஜத்தைக் காணச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஆனால் இன்று சமாதானத்தின் மலர்வு எத்தனை பெண்களுடைய அடைக்கப்பட்ட கதவுகளைத் திறந்துவிட்டன. வயது வேறுபாடின்றி கலந்து கொண்ட பேராளர்கள் தங்கள் சுமைகளை மறந்து சுதந்திரமாக ஆடிப்பாடிப் பயணம் செய்தனர்.

நாம் பல நேர பயணத்தின் பின்னர் சென்றடைந்த போது வாரி இறைத்த வான மழை வரவேற்றது. எம்மண்ணிலே இதுவரை நடந்த துயரங்களைப் பகிர்ந்துகொள்ளத் தோழிகள் வருகிறார்கள் என கருமேகம் தனது வாழ்த்துக்களைப் பொழிந்தது. அன்றைய பயணம் ஆனந்தமாக கழிந்து மறுநாள் நிகழ்வு மலரத் தொடங்கியது.

கல்லடி வீதி யோரத்தின் ஒரு பக்கத்தில் மாநாட்டிற்கு வருகைதந்திருந்த ஆயிரக் கணக்கான பெண்கள் அணி வகுத்து நின்றனர். சிவப்பு மஞ்சள் கொடிகளை கைகளில் ஏந்தியவாறு பல சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தூக்கிப் பிடித்தவாறு ஊர்வலயத்துக்குத் தயாராகின்றனர். வீதியிலே போக்குவரத்து நிறைந்து காணப்பட்டது. எல்லோருடைய பார்வையும் வெள்ளமெனத் திரண்டு வந்த பெண்கள் அணியினர் அடுத்து என்னதான் செய்யப் போகின்றனர் என ஏக்கத்துடன் உற்று நோக்குகின்றனர்.

பாண்ட் வாத்திய அணியினர் முன்நோக்கி நகர அடுத்து ஊர்தியும், பின்னே தங்கள் குரல்களை உலகத்திற்கு உரத்து முழங்கியவாறு எழுச்சி ஊர்வலம் விபுலானந்த அடிகள் இசை நடனக் கல்லூரியை நோக்கி நகரத் தொடங்கியது. “உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும், உலகத் தாய் வயிற்று மைந்தர் நசிந்து இனிக் கிடக்கமாட்டோம். நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்” என்ற வாசகங்களை வானளாவ முழங்கியவாறு தமிழீழப் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளப் புறப்படுகின்றனர். இது வரை காலமும் காமப் பார்வையில் பார்த்த இராணுவம் அவர்களது போராட்டத்தைக் கண்டு அச்சம் அடைந்தது. இனிமேலும் உங்கள் வக்கிரங்களை எங்களில் காட்ட முடியாது. காட்ட முயன்றால் பொங்கியெழுந்து பொசிக்கிடுவோம் என சபதம் எடுத்தவர்களாய் ஊர்வலம் மண்டபத்தை நோக்கி நுழைந்தது.

தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தேசியக் கொடியினை ஏற்றி வைக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

## பயணமும் பகிர்வும்

அரங்க செயற்பாட்டு குழுவினரின் மாவீரர் அகவணக்க பாடலுடன் ஆரம்பித்து, மக்களது உணர்வுகளை தட்டியெழுப்பும் பாடல்களை உரத்த குரலில் கைதட்டி உற்சாகமாகப் பாடினர். மரத்துப் போன உணர்வுகளின் வெளிப்பாடுகள். வாய்விட்டுச் சொல்ல முடியாமல் இதுவரை காலமும் உறங்கியவர்களின் விழிப்பு. பிரிந்துவிட்ட உறவுகள் இணைந்துவிட்ட மகிழ்வு போன்ற எண்ணம் அவ்விடத்தில் காணப்பட்டது.

மூன்று நூற்றாண்டுகள் சென்றன - ஆயினும் “அம்மா அம்மா...” என்ற பாடல் போரின் எச்சங்களை சுமந்து வாழும் உறவுகளின் வேதனை பூமித் தாயை நோக்கி அக்கேள்வி எழும்புவதாகப் பட்டது. இதுவரை காலமும் நாம் கொடுத்த விலை போதாதா தாயே இன்னும் தன் விடுதலை கிட்டவில்லை என்ற வலி அப்பாடலில் உறைந்து கிடந்தது.

போராளி சாமந்தியின் வரவேற்புரையைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பானுகா தலைமையுரை ஆற்றினார். தொடர்ந்து தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி சிறப்புரை ஆற்றினார். அவரது உரையிலே,

உணர்வுகள் இணைந்து இணைந்து ஒரு தீப்பொறியாக பிறந்ததன் விளைவே தேசியப் போராட்டம். எமது தலைவர் சிறு பராயத்தில் தந்தையின் கையைப் பற்றி நடந்து சென்ற போது இளைஞன் ஒருவன் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தான். காயத்தின் வலியைத்தாங்க முடியாது துடிதுடித்ததை கண்டு கொதித்தெழுந்த உணர்வுகளின் முழு வடிவம் இந்த தேசியப் போராட்டம். எங்களை நாங்களே இனம் காட்டவேண்டும். எங்களுக்குள் இருக்கும் மனவிலங்குகளை உடைத்தாலே மற்றவர்களுடைய விலங்குகளையும் உடைக்கலாம் என்றார்.

மாலை நிகழ்வாக போராளி தமிழ்க்கவி பெண்களும் தமிழீழச் சட்டங்களும் தொடர்பான விளக்கவுரை அளித்தார். பேராளர்கள் மத்தியில் இருந்து பல கேள்விகள் எழுப்பவிடையளிக்கப் பட்டது. அத்துடன் 1ம் நாள் நிகழ்வுகள் இனிதாக நிறைவேறியது.

இரண்டாம் நாள் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். பின்னர் நிகழ்வுகள் ஒழுங்கு முறையில் ஆரம்பமாயின. ஆரம்ப உரையினை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

அவரது உரையிலே பெண்கள் மாற்றம் அடைய வேண்டுமானால், அம்மாற்றம் நிரந்தரமாக செயற்படுத்த வேண்டுமானால் கல்வி, பொருளாதாரம், உடல்நலம் ஆகியவற்றில் பெண்கள் முன்னேறுவதுடன் அவ்விடயங் களில் மாற்றமும் கொண்டு வரப்படுதல் வேண்டும்



என்றார்.

பெண்களும் கல்வியும், பெண்களும் பொருளாதாரமும், பெண்களும் உடல் நலமும் ஆகிய தலைப்புகளில் இடம் பெற்ற கருத்தரங்குகளின் முறையே வடக்கு - கிழக்கு மாகாணத்தின் திணைக்கள உதவி முகாமையாளர் கௌரி, அரங்க செயற்பாட்டுக் குழு ஒருங்கமைப்பாளர் பத்மினி சிதம்பரநாதன், வைத்திய கலாநிதி எழுமதி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இறுதியில் கலை நிகழ்வுகளுடன் இரண்டாம் நாள் அமர்வு சிறப்புற நிறைவேறியது.

மூன்றாம் நாள் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வான தமிழீழ தேசியக் கொடியினை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தேசியக் கொடியினை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். பொதுச் சுடரினை பிராந்திய அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யன் ஏற்றி வைத்தார்.

ஆரம்ப உரையினை பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நிகழ்த்துகையில்; எந்தவொரு ஒடுக்குமுறை போராட்டத்திலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகுபவர்கள் பெண்களே. முழு அதிகாரங்களையும் கையில் பெண்கள் எடுப்பதற்கான முதலாவதுபடியே இந்தப் பெண்கள் தேசிய எழுச்சி மாநாடு. ஒவ்வொரு பெண்களும் தலைமைத்துவத்தையும் சிறந்த முகாமைத்துவபண்பையும் கொண்டிருக்க வேண்டும் என்றார்.

மட்டு, அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் உரையாற்றுகையில்; எம்மைப் பொறுத்தவரை இன்றைய நாள் ஒரு மகிழ்வான நாள். நான் ஒரு இராணுவத்தளபதி என்ற முறையில் கூறுகிறேன் போர்க்களங்களில் கூடுதலான சாதனைகளை நிகழ்த்தி வெற்றிக்கு காரணமானவர்கள் பெண்களே. அனைவரும் .தலைவருடைய காலத்திலேயே போராட்டம் முடிவுக்கு வரவேண்டும் என்பார்கள். அதற்கு நாம் அனைவரும் ஓரணியில் நின்று ஒன்று பட்டு குரல் கொடுத்தால் விடுதலை சாத்தியமாகும் என்றார்.

இடைவேளையின பின்னர் முக்கிய நிகழ்வாக பெண்கள் பிரகடனத்தை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி சமர்ப்பித்தார்.

இப்பிரேரணையில் தமிழீழத் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஒன்று கூடி எழுச்சியடைந்த தமிழீழ பெண்களாகிய நாம் கிராமம், பிரதேசம் ,மாவட்டம்

## தீபனா

தோறும் சமூக பெண்கள் மேமபாட்டமைப்பாக உருப்பெறு கின்றோம.

இந்த அமைப்பு தமிழீழத்தின் அனைத்து பெண்களையும் ஒரு கொடியின் கீழ் அணிதிரட்டும் என்று உறுதி எடுத்துக் கொள்கின் றோம். இந்த கட்டமைப்பு பின்வரும் செயற் திட்டங்களை தனது பணிகளாக வரித்துக் கொள்கின்றது. காலா திகாலமாக சமூக பிற் போக்குத் தனங்களில்கட்டுண்டு போயுள்ள பெண்களை



அத் தளைகளில் இருந்து விடுவித்து விழிப்புணர்வு கொண்ட பெண் களாக மாற்றுதல். ஒவ்வொரு பெண்ணினதும் தனித்துவமான ஆற்றலை இனம் கண்டு அவற்றின் உச்சநிலையை அடையும்முகமாக வழிப்படுத்துதல் தாயகத்தின் ஒவ்வொரு கிராமங்களையும் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றும் சமூகமேம்பாட்டு போராட்டத்தில் பெண்களும் சமபங்கெடுத்தல்.

ஒவ்வொரு பெண்ணின் பாதுகாப்பையும் சுய கௌரவத்தையும்தாமே தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அவர்களை உடல் உளரீதியாக வலுப்படுத்தல். மேற்கூறிய பெண்களின் அபிலாசைகளை நிதர்சனமாக்கும் வகையில் தாயகத்தை மீட்டெடுப்பதற்கான தேசிய எழுச்சியில் அனைத்து தமிழீழப் பெண்களையும் அணிதிரட்டுதல் ஆகிய பிரகடனங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதி நிகழ்வுகள் மாலையில் கரடியனாறில் இடம் பெற்ற நிகழ்வில் மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார். பாடுமீன் இசைக் குழுவினரின் இசை நிகழ்வு சிறப்பு நிகழ்வாக இடம் பெற்றது.

பெண்கள் தேசிய எழுச்சி மாநாட்டில் கேணல் கருணா அவர்கள் உரையாற்றும் போது, 25 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்த விடுதலைப் போராட்டம் ஊடாக நாங்கள் பல அனுபவங்களைப் பெற்றுள்ளோம். பல சாதனைகள் படைத்துள்ளோம். பல துன்பங்களையும் வேதனைகளையும் கடந்து இன்று உறுதியான வலுவான நிலையை அடைந்துள்ளோம் என்றார்.

இன்றைய சூழலை விளங்கி கொண்டு தலைவர் அவர்களின் கரங்களை பலப்படுத்துவதன் ஊடாக நாங்கள் பெரும் வெற்றிகளை அடைவோம் எனத் தெரிவித்தார்.

இசைக்குழு, நடனம், நாடகம், பேச்சு போன்ற பலவிதமான கலை அம்சங்களின் வெளிப்பாடுகளைத் தாங்கிய உள்ளங்களாக கரடியனாறை பிரிந்த துயரில் மக்கள் செல்கின்றனர்.

தமிழீழ பெண்கள் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து பேராளர்களுக்கும் இந்த நிகழ்வானது மறக்கமுடியாத பல அனுபவங்களை, புதுவிதமான எண்ணங்களை, கற்பிதங்களை, செய்திகளைப் பெற்றுகொடுத்துள்ளது என்பதே உண்மை.

மட்டக்களப்பு பெண்களின் அவலநிலையில் நாங்களும் பங்கெடுக்க மாட்டோமா என்ற ஏக்கம் நிறைவேறிய நிலையில் தங்களின் விடுதலைக்கான பெரும் சுமையை தாங்கிய நெஞ்சங்களாக மீன்பாடும் தேன் வாவி க்கு கையசைத்து விடை பெறுகின்றனர்.

எப்பொழுதும் எங்கள் கரங்கள் உங்களுக்கு தோள் கொடுக்கும். எங்கள் உதவி எப்போது தேவைப்படுகிறதோ அப்போது இந்த வாவியில் நின்று உரத்து கத்துங்கள் நிச்சயமாக தாயகத்தின் அனைத்து பிரதேசங்களில் இருந்தும் துயர் துடைக்க ஓடோடி வருவோம் என்பது போலவே கையசைப்பு இருந்தது.

உலகை ஆள்வது எண்ணங்கள். - ஜேம்ஸ் காம்ஃபீல்ட்

எனக்கு ஒரு காது செவிடு,

# நேர்நோக்கு

## அமைதிக்கு இடையூறு

சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் தமிழ்மக்களை தமது ஆக்கிரமிப்புப் பிடிக்குள் வைத்திருக்கும் எண்ணம் கெண்டவர்களாகவே இருக்கின்றனர். இன்றும்கூட தமிழர்தாயகப் பிரதேசத்தின் எப்பகுதியிலாயினும் படைமுகாம்களை அமைப்பது தொடர்பாகவோ அல்லது அமைத்த படைமுகாம்களைப் பலப்படுத்துவது தொடர்பாகவோ செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதிகளில் முகாம்களை அமைத்திருக்கும் படையினர். அதற்காக வைத்திய சாலை, பாடசாலை, ஆலயம், நூல் நிலையம், அரசகட்டடங்கள், வீடுகள், பொதுக்கட்டடங்கள் எனப்பாரபட்சம் பாராது ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். இதனால் மக்கள் தமது அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியா திருப்பதுடன் பலர் தாம்வாழ்நாள் முழுவதும் உழைத்துக்கட்டிய வீடுகளில் குடியிருக்க முடியாது அலைந்து திரிய வேண்டிய அவலங்களுக்கு உள்ளாகின்றன.

இதனையும் விட மக்களைப் பாதுகாக்கவே படையெடுப்பு நடத்துவதாகக் கூறி குடியிருப்புகளை ஆக்கிரமிக்கும் படையினர் தமது பாதுகாப்புக்காக பலகுடியிருப்புகள், கட்டடங்களை அழித்து விடுகின்றர். இவ்வாறு ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் புல்டோசர்கள் மூலம் தகர்த்தழிக்கப் பட்டிருக்கின்றன.

முகாம்களின் பாதுகாப்புக்கெனக் கூறி முகாம்களைச் சுற்றியும் பல இடங்களில் கிராமங்களைச் சுற்றியும் அமைக்கப்படும் மண் அணைகள் மக்களுக்குப் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. இம்மண் அணைகள் அப்பகுதியின் தரையமைப்பு, நீர் வடிந்தோடும் தன்மை, மண்ணின் இயற்கைவளம் என்பவற்றைச் சீர்குலைத்து வருகின்றன. இவ்வாறான பாரியமண் அணைகள் காரணமாக வெள்ளப்பெருக்கு பயிரழிவு என்பன ஏற்படுகின்றன.

இவ்வாறெல்லாம் மக்களின் இயல்பு வாழ்க்கையை அவர்களின் வாழ்க்கைக்கான மூலாதாரத்தைச் சிதைவடையச் செய்யும் படையினரை மக்களின் பாதுகாப்புப் படையினர் எனக்கூறிக் கொள்வது அபத்தமான விடயமாகும்.

மக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக இருந்து கொண்டு எப்பொழுதும் சந்தேகக் கண்ணுடன் எல்லா மக்களையும் பார்வையிட்டுக் கொண்டிருப்பவர்களை பாதுகாப்புப்படையினர் எனக் கூறமுடியாது.

யாழ். நகரில் மக்கள் செறிந்து வாழும் பகுதியிலிருந்து அகலமறுத்துவரும் படையினர் மேலும் ஒரு இடத்தை நாசம் செய்ய எடுத்த முயற்சி ஓரளவு தடுக்கப்பட்ட செய்தி வெளிவந்திருக்கிறது. ஆனால் மட்டக்களப்பு கறுத்தப்பால இராணுவ முகாமைப்பலப் படுத்த தென்னந் தோப்புக்களும் கால் நடைகளின் மேச்சல் தரைகளும் அழிக்கப்படுகின்றமை குறித்து வெளியான செய்தியானது படையினர் இவை குறித்தெல்லாம் சிந்திக்கத் தயா ரில்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு நாளாந்தம் தமிழீழப் பகுதியிலுள்ள வளங்கள் பல அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் படையினரின் ஆக்கிரமிப்பு ஆசைக்கு தீனியாகும் நிலை தொடர்வது தமிழ் மக்களுக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்துவதாகும்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் கனரக வாகனங்களும் ஏனைய வளங்களும் அபிவிருத்திக்குப் பயன்படும் என எதிர்பார்த்திருக்கையில் மக்களின் வளங்கள் தொடர்ந்து அழிக்கப்படுவது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தருவதாகவே உள்ளது.

இந்த நிலையில் மாற்றம் ஏற்படாதவரை இயல்பான தொரு சூழ்நிலை தோன்றப்போவதில்லை; சமாதானமும் ஏற்படப் போவதில்லை. எனவே சமாதானத்துக்கு விரோதமான இந்த நடவடிக்கைகள் தொடராது பார்த்துக்கொள்வது அமைதி விரும்பிகளின் கடமையாகும்.

**வேலவன்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -13



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -13

.................................................................
.................................................................
.................................................................
.................................................................


பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 12



**இ.ராஜன்.**
**இல:249, சிவசுந்தரம் வீதி,**
**வட்டக்கச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

**சமாதானம் என்றவுடன் வருகிறது பல கரங்கள்.....**
**அவை புரிகின்றது பலநலன் சேவைகள்**
**என் கனவிலும் வருவதோ**
**அப்பாவை கொன்ற அந்தக் கொடியகரம்.**

### பாராட்டுக்குரிய வரிகள்

சொந்தங்கள் யாருமில்லை என்ற ஏக்கம் முகத்தில்
அரவணைக்க யார் வருவார் என்ற அவலம் நெஞ்சில்
எத்தனை காலங்கள் இன்னும் விடியலுக்கு.....
விடியப்போவது பொழுதுகள் மட்டுமல்ல உன்வாழ்வும்தான்.

லோகப்பிரியா ஆனந்தமூர்த்தி
கிளி/ கிளிநொச்சி.ம.வி
கிளிநொச்சி.

கைமேலே உனக்கென்ன வெறுப்பு
கண்களே சொல்லுதே உன் துடிப்பை
உதட்டினால் சொல்லீடாக் கொடுமை
உள்ளுக்குள் எரியுதே நெருப்பாய்.

மா. நாவண்ணன்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

கண்ணே உன் கண்ணில் என்னசோகம்
அன்னையின் பிரிவா!!
அண்ணனின் கரம்-உந்தன்
கன்னத்தை தழுவுகையில் என்ன சுமை!

சி. சோபிதா

ஈராக்கின் சிறுமிக்கு அமெரிக்க கழுகுக்கை
பாலஸ்தீனச் சிறுமிக்கு இஸ்ரேலின் கொடுங்கோல்கை
தமிழீழச் சிறுமிக்கு சந்திரிகாவின் இனவெறிக்கை
இவை அனைத்தும் உடையும் என அவர்(கள்) மனதில் நம்பிக்கை.

பே.ஜீவன்,
இல: 749,
யோகபுரம் மத்தி.

பிஞ்சு மனதில் சுமை மிஞ்சிக்கிடக்குது
எண்ணிப் பார்க்கையில் நெஞ்சு வெடிக்குது.
கஞ்சிக்காய் இல்லை இத் துடிப்பு- அதை
மிஞ்சியதாய் தெரியுது உறவின் தவிப்பு.

ஜோ. ஜெயந்தி,
50/6 மூன்று முறிப்பு,
வவுனியா.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.


## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



தாயின் மடியில் 15 ~ 02 ~ 1973

தாயக மண்ணில் 11 ~ 04 ~ 2000

**கரும்புலி மேஜர் அறிவுக்குமரன்**

**குமாரவேல் கேதீசன்**
**அக்கரயான்**

காலன்வருவன் என்று நினைத்தாயா
காலம் முடியும் என நினைத்தாயா
ஆழக்கடலினிலே சேர்ந்தாயா
அறிவுக்குமரனே நீ என்றும் எம்முடனே.

**11.04.2000 அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்**

தற்காலிக முகவரி,
இல. 101/1,
திருவையாறு,
கிளிநொச்சி.

என்றும் உன் நினைவில்
தாய், சகோதரர்கள்.

(3065)


## பாராட்டு




வட்டக்கச்சி மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனையில் நுணுக்குக்காட்டியியலாளராக இருக்கும் சாமிநாதன் துஷ்யந்தனின் இரண்டு மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன.

'மலேரியா', 'டெங்கு' என்ற இவ்விரு நூல்களையும் வெளியிட்டுள்ளார். வன்னிப்பிரதேசத்தில் மிகவும் வாட்டி வதைக்கும் கொடிய நோய்களான இவ்விரு நோய்கள் குறித்த இந்நூலினை வெளியிட்ட நூலின் ஆசிரியர் துஷ்யந்தன் பாராட்டப்பட வேண்டியவர்.

மக்கள் நலன் சார்ந்த இவ் நல்ல கைங்கரியத்தை செய்துள்ள இவரது பணியை பாராட்டுவதோடு அதன் பயனையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.





**நீங்களும் படப்பிடிப்பாளராகலாம்**

## பயிலுநர் தேவை

- இத்துறைசார் முயற்சியுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
- கணக்கு எழுதுநர், கணக்காளர் தேவை

யாழ். ஒளி வீடியோ புகைப்பட சேவை (K.S.R. PHOTOS)

**கனகபுரம் தெரு (சந்தைக்கருகாமை) - கிளிநொச்சி**

**766, K.K.S வீதி, தட்டாதெருச்சந்தி - யாழ்ப்பாணம்.**

(ஸ்ரீ-8062)




அண்மையில் யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ரவிவர்மாவின் ஆரம்ப காலப்பதிப்பும் படங்களின் காட்சியில் வைக்கப்பட்ட 'நட்சத்திர மண்டலம்' எண்ணை வர்ணத்திலமைந்த ஓவியம் ஒன்று. இது யாழ் பல்கலைக்கழக கலை வட்டமும் நுண்கலைத்துறையும் இணைந்து நடாத்தியது.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து




வற்றாப்பளை முல்லைவாணன் வீதியைச்சேர்ந்த ரவிகரன் பிரதீபா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாரங்கன் 18-04-2003 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா,அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, பெரியம்மாமார், அன்ரிமார், அக்காமார்,அண்ணாமார், சித்தாமார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தாத்தா, பாட்டி, அத்தைமார் மச்சான்மார்,மச்சாள், கொலண்டில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், லண்டனில் வசிக்கும் மாமா, பெரியப்பா, பெரியம்மா ஆகியோர் இவரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
அப்பா(ரவிகரன்)
வற்றாப்பளை


பயோட்டினெக்ஸ் - E

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது

## அழகிய கூந்தலின் ரகசியம்

எது உங்கள் பிரச்சினை ?






பாவனை முறை
தினம் 2கப்சியூல்ஸ் 3மாத காலத்திற்கு பாவிக்கவும்

பக்கவிளைவு அற்றது

இயற்கையான பயோட்டினெக்ஸ் –E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறன்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பயோட்டினுடன் விட்டமின் – E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி,
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

யாழ் முகவர்:
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎021 2223191

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By: Arkem Colombo
Tel:470290, 075-344436 Email : arkem@sltnet.lk

BIOTINEX-E

## உலகத்தரம் வாய்ந்த Ramco கூரைத்தகடுகள் வன்னியிலும் தடம் பதித்துள்ளது...

வன்னியில் Ramco கூரைத்தகடுகள் விற்பனை முகவராண்மை பெற்ற

## பாண்டியன் வாணிபத்தினர்

வன்னி மாவட்டங்களுக்கு வழங்குநர்களை நியமிக்கவுள்ளனர்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வினைத்திறனும், நன்மதிப்புமுள்ள வாணிபத்தினர் வழங்குநர் பணியைப் பெறுவதற்கு எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும்.

வழங்குநர்களுக்கு சிறப்புச்சலுகைகள் உண்டு

"ராம்கோ" உங்கள் காவலன்




தொடர்புக்கு:
பாண்டியன் வாணிபம்
கரடிப்போக்குச்சந்தி
கிளிநொச்சி.


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.